கல்கி

KALKI ● 17.10.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



"கூண்டோடு கலைச்சுடுவேன்!"

எல்லோர் ரத்தமும் அயோத்தியில் ஓடட்டும்!
–ஞாநி



அற்புத குழந்தைகள் ஸ்பெஷல்



ரஜினியோடு நடிக்க ஆசை!


சைபால் எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று
இதம் தந்து
ரணம் ஆற்றும்...
70
FOR EXTERNAL USE ONLY
MAX. RETAIL PRICE Rs. 15.00
SAIBOL
for Cuts, Itches, Boils, Eczema, Scabies, Pimples Etc. Etc.
சைபால்
BEST SKIN OINTMENT
எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.
★ வெட்டுக்காயம் ★ முகப்பரு ★ சேத்துப்புண் ★ தேமல் ★ வேனல்கட்டி
★ பித்தவெடிப்பு முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.
உரிமையாளர் : சைபால். S. சங்கரநாராயணன்
Mfrs. : THE SOUTH INDIAN MFG. CO., MADURAI-20. Ph : 2534108

BRINDAVAN SENIOR CITIZEN FOUNDATION
COIMBATORE
ANNOUNCES THEIR THIRD PROJECT

"BRINDAVAN PARADISE"

(2 BED ROOM, SINGLE BEDROOM AND SINGLE ROOM COTTAGES)

BOOKING IN PROGRESS

Our well established "Brindavan Hill View" and "Brindavan Palm Grove" accommodates nearly 300 residents. Due to heavy demand Brindavan Senior Citizen Foundation moves towards their 3rd project "Brindavan Paradise"

Brindavan provides the best of both what nature and modern life can offer a combination of city home and farmhouse on reasonable terms. A mountain backdrop with coconut farms, lush green gardens and a serene atmosphere enhances the ambience. Free of noise and air pollution, the stretch of walking area in and outside the campus offers a secured shelter for elders. Brindavan is always vibrant with frequent visits of children, grandchildren, relatives and guests.

FACILITIES OFFERED

1. Centrally located kitchen and dining hall which provides vegetarian food of good nutritional value.
2. Regular water supply, R O water for drinking.
3. Doctor's visit every day for medical care and tie-up with leading hospitals.
4. Well maintained garden, walking space to move around, pollution free atmosphere and sewage treatment plant.
5. Prayer Hall, celebration of festivals, discourses and lectures. Good library.
6. Maid servants to clean the cottages, 24 hour security
7. Underground cabling of electrical and telephone lines.
8. Transport and car parking facilities at reasonable cost.
9. Provision for cable TV, telephone, AC.
10. Gym, recreation room for carom, chess and cards.







The project will be completed AND COTTAGES HANDED OVER by June 2011

VISIT OUR WEB SITE
"seniorhomebrindavan.com"

FOR MORE DETAILS CONTACT
R.MADHAVAN (094433 35848)
R.PARTHASARATHY (094426 14430)

Only few cottages are available now for booking-
Hurry up before it is late



வசீகரன் ஒரு விஞ்ஞானி. தம் பத்து வருட உழைப்பில் கிட்டத்தட்ட மனிதனைப் போலவே உருவத்திலும் செயலிலும் இருக்கும் ஒரு ரோபோவை உருவாக்குகிறான். அதற்கு மனித உணர்வுகளைக் கொடுத்தால் என்ன ஆகும் விஷயம் என்ற சின்ன லைன்தான் கதை. ஆனால், அதைக் கொடுத்திருக்கும் விதம் அட்டகாசமான அதிரடி.

படம் முழுவதும் ரஜினி, ரஜினி, ரஜினி என்று ஒரே ரஜினி மயம். வழக்கமான ரஜினிக்கான ஓப்பனிங் சீன் இல்லாமல் படம் ஆரம்பிக்கும்போதே 'ஓகே' என்று நிமிர்ந்து உட்கார வைத்து விடுகிறார்கள். வசீகரன் கேரக்டருக்கு வரும் ரஜினியைவிட, சிட்டியாக வரும் ரோபோ ரஜினிதான் கவர்கிறார். கையில் வெட்டு என்று கட்டிங் கேட்கும் போலீஸ் காரர் ஹனிபாவின் கையில் வெட்டும் காட்சியில் ஆரம்பித்து, முதல் பாதி முழுவதும் சிட்டி ரஜினி அட்டகாசம்.

இன்னமும் கண் இமைக்காமல் பார்க்கும்படி ஐஸ்வர்யா. எல்லாக் காட்சிகளில் விதவிதமான காஸ்டியூம்களில் வலம் வருவதோடு சரி!

தம்மைப் படைத்தவனுக்கே வில்லனாய் மாறும் சிட்டி ரஜினிதான் படத்தின் ஹீரோ. அந்த ரோபோ ஸ்டைல் நடை, பாடிலேங்குவேஜ், டயலாக் மாடுலேஷன், நடனம் ஆடும் முறை, வில்லத்தனம், அந்த அதிரும் சிரிப்பு என்று படம் முழுக்க ரஜினியின் அதகளம்.

கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸில் எல்லா காட்சிகளையும் மெருகேற்றியிருக்கிறார்



கள். முக்கியமாய் காதல் அணுக்கள் பாடலின் லொகேஷன் விஷுவல் ட்ரீட் என்றால் அந்த ரயில் சண்டை, பீட்டர் ஹெயினுக்கும், ரத்னவேலுக்கும் மகுடம் சூட்டும் காட்சி.

ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் காதல் அணுக்கள் ஸ்வீட் மெலடி. க்ளைமாக்ஸ் பின்னணி இசையில் பாடல்களில் விட்டதை சரிசெய்துவிடுகிறார்.

வசனம் எழுதியது சுஜாதா, ஷங்கர், கார்க்கி என்று போடுகிறார்கள். ஆனால் முழுக்க முழுக்க சுஜாதாவின் டச். நிக்கல், நக்கல் போன்ற ஒன்லைனர்கள் அவர் பெயரைக் கட்டியம் கூறுகின்றன. அட்லீஸ்ட் அவர் ஃபோட்டோ ஒன்றைப் போட்டு நன்றி சொல்லியிருக்கலாம்.

எல்லோரும் ஒரே கதையை ஒவ்வொரு மாதிரி சொல்வார்கள். கதையை சொல்லும் முறை என்பது அவரவர்கள் கைரேகை மாதிரி. அதுபோலத்தான் ஷங்கர் இக்கதையைச் சொன்னதும். ஆரம்பித்த முதல் காட்சியிலேயே கதை சொல்ல ஆரம்பிக்கிறார். பத்தாவது நிமிடத்தில் படம் எதை நோக்கிப் போகிறது என்று தெளிவாக்கிவிடுகிறார். பிறகென்ன, வெரி ஸ்மூத் ரைட்.

முதல் பாதியில் சிட்டி ரஜினியின் அப்பாவித்தனத்தை வைத்து சுவாரஸ்யமான கதை சொல்லியிருக்கிறார் இயக்குநர். அந்த ரோபோ பிரசவக் காட்சிக்கு தியேட்டரில் கிடைக்கும் கைத்தட்டலே சாட்சி. ஆனால் இரண்டாவது பாதி ஆரம்பித்ததும், ஆங்காங்கே திணிக்கப்பட்ட அசுவாரஸ்யமான காட்சிகளால், திரைக்கதைக்குத் தடை விழத்தான் செய்கிறது. முக்கியமாய் வசீகரன் தன் காதலியை, கலாபவன் மணியிடமிருந்து காப்பாற்றும் காட்சியெல்லாம் அரத பழசு. அப்பட்ட திணிப்பு.

ஆனால், க்ளைமாக்ஸ் கிராஃபிக்ஸால் நிமிர்ந்து உட்கார வைத்துவிடுகிறார். கொஞ்சம் சயின்ஸ் பிக்ஷன் + வழக்கமான செண்டிமெண்ட் + ஏராள ரஜினி - லாஜிக் = எந்திரன்

-கேபிள்சங்கர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
பொறுப்பாசிரியர்:
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள்:
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி: 044 - 4343 8888
தொலைநகல்: 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி:
www.kalkionline.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ரஜினியோடு நடிக்க ஆசை!

தீபிகா படுகோன் - கன்னக் குழியும் கேரட் உதடுகளுமாய் வளைய வரும் பாலிவுட் பேரழகி. ரன்பீர் கபூருடன் டூ; இப்போது மீண்டும் பழம் என்று தீபிகா எது செய்தாலும் அது செய்தி. ஐ.டி.சி.நிறுவனத்தின் புதிய முடி உதிர்வைத் தடுக்கும் ஷாம்பு அறிமுக விழாவில் கலந்துகொள்ள சென்னை வந்திருந்தார்.



அப்பா பாட்மின்டனில் நேஷனல் சாம்பியன். நீங்கள் கூட படிக்கிறபோது, கர்நாடகாவுக்காக தேசிய அளவில் பாட்மின்டன் ஆடியவர்தான். அப்புறம் எப்படி மாடலிங், சினிமா?

''ஒருவர் தனக்கு என்ன பிடிக்குமோ அதைச் செய்ய வேண்டும். என் அப்பாவுக்கு பாட்மின்டனில் ஈடுபாடு இருந்ததால், அதில் அவர் முழு மூச்சுடன் ஈடுபட்டார். எனக்கு ஆரம்பத்தில் அதில் ஆர்வம் இருந்து, பாட்மின்டன் ஆடினாலும், ஒரு கட்டத்துக்கு மேல் அதில் எனக்கு ஆர்வம் இல்லாமல் போய்,

மாடலிங்கில் இன்டரஸ்ட் ஏற்பட்டது. அப்படியே சினிமாவுக்குப் போனேன். என்னைத் தொடர்ந்து விளையாட என் அப்பா கட்டாயப்படுத்தி இருந்தாலும், நான் அவரைப் போல பிரகாசித்திருப்பேனா தெரியாது. அதுவும் இல்லாமல் டாக்டரின் மகன் டாக்டராகத்தான் ஆகணும், வக்கீலின் மகன் வக்கீலாகத்தான் ஆகணும் என கட்டாயம் ஏதுமில்லையே! இதுவும் அதுபோலத்தான்!''







மாடலிங்-சினிமா இரண்டில் எது சவாலானது?

''நிச்சயமாக சினிமாதான். இதில் முதலீடு பல கோடிகள். இது பலருடைய கூட்டு முயற்சி. பல நாட்கள் இதற்கு உழைக்க வேண்டும். மாடலிங்கைவிட, சினிமா பல மடங்கு சவாலானது. சினிமாவின் வீச்சும் பிரம்மாண்டமானது. ஒரு சில படங்களில் நடித்தாலே கோடிக்கணக்கில் ரசிகர்களைப் பெற்று விட முடியும்.''

ஸ்போர்ட்ஸ், மாடலிங், சினிமா... என்று நீங்கள் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறபோது என்ன தோன்றுகிறது?

''திறமையானவர்கள் எல்லோருக்கும் வாய்ப்புகள் கிடைத்துவிடுவதில்லை; அதிர்ஷ்டமும் இருக்க வேண்டும். அதே சமயம் அதிர்ஷ்டம் மட்டும் இருந்தாலும் போதாது. கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு நல்ல பெயர் வாங்கவும், கிடைத்த புகழை நிலை நிறுத்திக் கொள்ளவும் நன்றாக உழைத்து, தங்கள் திறமையை வெளிப்படுத்த வேண்டும்.''

இன்றைய தலைமுறை ஹீரோயின்கள் எல்லாம் ஒரு சில படங்களிலேயே காணாமல் போய்விடுகிறார்களே?

''மற்றவர்கள் பற்றி நான் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.நான் நடிக்க வந்து இரண்டு மூன்று வருடங்கள்தான் ஆகின்றன. ஆனால், பல வருடங்கள் நீடித்து இருக்க வேண்டும் என நினைக்கிறேன்.''

பொதுவாக, இந்திய சினிமாக்களில் பெண்களைக் கவர்ச்சி பொம்மையாகத்தானே பயன்படுத்துகிறார்கள். பவர்ஃபுல்லான ரோல்கள் தருவதில்லையே?

''தெற்கில் அப்படியா? இந்தியில் ஹீரோயின்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைய படங்கள் எடுக்கிறார்களே? எனக்கு அப்படிப்பட்ட படங்களில்தான் நடிக்க விருப்பம்.''

விருது?

''விருதுதான் என் இலக்கு என்று சொல்லமாட்டேன். நல்ல பெயர், கமர்ஷியல் வெற்றி இவையும்கூட எனக்கு முக்கியம்தான்.''

தெற்கு ஹீரோயின்கள் இந்தியிலும், ஹிந்தி ஹீரோயின்கள் தெற்கிலும் அதிகமாக நுழைந்து வெற்றி பெற்றுவிடுகிறார்கள். ஆனால் ஹீரோக்களால் அதுபோல சக்சஸ் ஆக முடிவதில்லையே?

"இப்படிப் பொதுவாகச் சொல்வதற்கு, லாஜிக்கான காரணம் எதும் இல்லை. அந்தந்த ஹீரோக்களின் திறமை, அவர்கள் நடித்த படங்களின் வெற்றி என்று பல விஷயங்கள் அதற்குக் காரணமாக இருக்கலாம். அப்படியே பார்த்தாலும், மாதவன் இப்போது தெற்கேயும், இந்தியிலும் வெற்றிகரமாக வலம் வந்துகொண்டிருக்கிறாரே!"

சென்னை பற்றி?

"எனக்கு மிகவும் பிடித்த ஊர். சென்னையில், ஒரு மாடலாக நிறைய ஃபேஷன் ஷோக்களில் கலந்துகொண்டிருக்கிறேன். இங்கே தங்கி ஊரைச் சுற்றிப் பார்க்க விரும்பினாலும், 'வந்தோமா வேலை முடிந்து புறப்பட்டோமா?' என்று இருந்துவிட்டதால், சென்னையைச் சுற்றிப் பார்க்க நேரம் இருந்ததில்லை."

எப்போ கோலிவுட்டுக்கு வரப் போறீங்க?

"தமிழ்ப் படங்களில் நடிக்க எனக்கும் ஆசைதான். அதுவும் சூப்பர் ஸ்டார் ரஜினிக்கு ஜோடியாக ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்பது என் கனவு. விக்ரம், சூர்யா படங்களிலும் நடிக்க நான் ரொம்ப ஆர்வமாக இருக்கிறேன். ஆனால் இதுவரை அதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை!"

> "நான் விளம்பர மாடலாக வரும் ஐட்டங்களை உண்மையிலேயே பயன்படுத்துகிறேன்."

ஒரு நாள் எழுந்திருக்கும்போது, இன்று நோ ஷூட்டிங்! நீங்கள் ஃப்ரீ என்று சொல்லிவிட்டால், அன்று முழுவதும் என்ன செய்வீர்கள்?

"என் குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவேன். என் ஃப்ரெண்ட்ஸ்கூட சந்தோஷமாக இருப்பேன். கொஞ்ச நேரம் தனிமையாக இருந்து அனுபவிப்பேன்."

நீங்க ஏராளமான பொருட்களுக்கு விளம்பர மாடலாக வர்றீங்க. அதையெல்லாம் நிஜமாகவே பயன்படுத்துவீங்களா?

"நான் விளம்பர மாடலாக வரும் ஐட்டங்களை உண்மையிலேயே பயன்படுத்துகிறேன். எனக்கும் மனசாட்சி இருக்கிறது! ஒரு பொருளின் விளம்பரத்துக்காக என்னை அணுகும்போதே, அது பற்றி முழு விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டுதான், ஏற்பதா வேண்டாமா என முடிவு எடுக்கிறேன்."

அப்புறம்... தீபிகா படுகோன் எது பேசினாலும் படு அழகா இருக்கு.. ஹீ...ஹீ...ஹீ...

- எஸ். சந்திரமௌலி

அட்டைப்படம் : ஸ்ரீஹரி



COSMETIC SURGERY

K M C H

KMCH – Dept of COSMETIC SURGERY

Is well equipped with Body Sculpturing Systems

- **MICRO – AIRE® PAL® 650E – USA**

LATEST IN SOUTH INDIA

- **TULIP® - USA**

Zirconium coated cell friendly Cannulaes For

- **BREAST RESHAPING**
  Both for Men & Women
- **WEIGHT REDUCTION**
  Pin – hole Surgery
- **CHEST WALL AND**
  Abdominal wall Sculpturing
- **FOR RESHAPING THE FACE**



OBAGI-USA System of Creams, Serum & Blue peel

For **Improvement'in the colour of FACE SKIN COMPLEXION,** to iron out face wrinkles and to treat acne related problems.

COSMETIC RHINOPLASTY

RESHAPING SURGERY
for Men & Women
Sculpturing and Beautifying the Face & Body

HAIR RESTORATION COSMETIC SURGERY. ACNE SCARS
glowing skin and lustrous hair No more a dream

ACNE SCARS
Treatment by Microaire Dermabrasion



KMCH introduces in South India MICROAIRE - DERMABRASION SYSTEM from USA
for the treatment of Acne Scars, facial Scars and Facial Blemishes

SCAR-LESS COSMETIC SURGERY OF BREASTS
Female
Breast Enlargement
Breast Reduction
Male
Breast Reduction

COSMETIC SURGICAL REVERSAL TO PRE PREGNANCY LOOK
Body Sculpturing,
Lipoplasty and Tummy Tuck
Breast Reshaping
Genital Rejuvenation

For Details Contact :

Dr. Arthanari Kumar Prasad M.S., M.Ch., (Plastic Surgery)
Consultant Cosmetic Surgeon

K M C H

KOVAI MEDICAL CENTER AND HOSPITAL

Avinashi Road, Coimbatore- 641 014. Ph : 0422-4323175
Mobile : 95009 62564 email : drkmkp2004@hotmail.com

விஜயகாந்த்தை உங்கள் கூட்டணிக்கு அழைக்கும் விவகாரத்தைத்தான் ஜெயலலிதாவிடம் பேசினீர்களா?



ராமகிருஷ்ணன் : (சி.பி.எம். மாநிலச் செயலாளர்)

விலைவாசி பிரச்னையைக் குறித்து இடதுசாரிகள் தொடர்ந்து போராட்டம், ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறோம். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பிரச்னை, மணல் கொள்ளை ஊழல், குடும்ப ஆதிக்கம், ஆளும் கட்சிக்காரர்களின் நில மோசடி... என்று பல பிரச்னைகள் இருக்கின்றன. எனவே தனித்தனியாக நடத்தாமல் எங்கள் கூட்டணிக் கட்சிகள் இணைந்து கூட்டுப் போராட்டம் நடத்தலாம் என்ற யோசனையுடன் அவரைச் சந்தித்தோம். அவரும் பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார். மற்றபடி கூட்டணியை பலப்படுத்துவது தொடர்பாகவும் பேசினோம். விஜயகாந்த் விவகாரம் குறித்து தனியாக எதுவும் பேசவில்லை.



கேள்விக்கு என்ன பதில்?


சோனியா காந்தி திருச்சி பொதுக் கூட்ட விஷயமாக நீங்கள் மாவட்டங்களில் போடும் கூட்டங்களில் காங்கிரஸார் கைகலப்பில் இறங்குகிறார்களே?

தங்கபாலு: அன்னை சோனியாவை எதிர்த்தோ அல்லது ராகுலை எதிர்த்தோ யாரும் மோதிக் கொள்ளவில்லை. மோதல்களுக்குக் காரணம் தனி நபர் ஈகோ பிரச்னைகள்தான். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டுத்தான் இருக்கிறோம். காங்கிரஸில் கருத்துகளைச் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால் அப்படிச் சொல்லும் கருத்துகள் கூட்டணிக் கட்சி குறித்தோ அல்லது சர்ச்சையைத் தூண்டி விடுவதாகவோ இருக்கக் கூடாது. காங்கிரஸின் சாதனைகளைச் சொல்வதில் யாருக்கும் தடையில்லை. தமிழகத்தில் இளைஞர் காங்கிரஸின் வளர்ச்சி குறித்து ராகுலே பாராட்டியிருக்கிறார். பேச வேண்டிய விஷயங்கள் குறித்து, இளைஞர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கிறோம். சோனியா, ராகுல் தமிழகத்துக்கு விசிட் செய்தபின் தமிழகத்தில் காங்கிரஸின் செயல்பாடுகள் பிரமிக்கத்தக்க விதத்தில் இருக்கும்.



ராமர் கோயிலும் மசூதியும் பக்கத்தில் பக்கத்தில் அமைந்தால் மதநல்லிணக்கம் மேலும் வளருமே?

பொன். ராதாகிருஷ்ணன்: பிரதமர் மற்றும் முலாயம் சிங் யாதவ் போன்றோர் அயோத்தி விவகாரத்தில் உலை பொங்கி வரும்போது நெருப்பை இழுப்பது போல நடந்து கொள்கிறார்கள். அவர்கள் வாயை மூடிக் கொண்டிருந்தாலே சம்பந்தப்பட்ட இரு தரப்பும் பேசி எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் முடிவை எடுக்க முடியும். நிலத்தின் மீதான முஸ்லிம்களின் உரிமையைத் தள்ளுபடி செய்த நீதிமன்றம் இரண்டு பங்கு நிலத்தை இந்துக்களுக்குக் கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே



பிரச்னை இருந்த இடத்தில் கோயிலும் மசூதியும் அருகருகே வந்தால் எழக்கூடிய எதிர்கால விளைவுகளையும் பார்க்க வேண்டும். விட்டுக் கொடுப்பது என்பது காலம் காலமாக இந்துக்களுக்கே உள்ள இயல்பான குணங்களில் ஒன்று. நீதிமன்றத் தீர்ப்பை எதிர்கால அமைதிக்கான வழிகாட்டுதலாக ஏற்றுக் கொண்டு முஸ்லிம் அமைப்புகள் இந்து அமைப்புகளுடன் சேர்ந்து பேசி முடிவெடுக்க வேண்டும். உச்சநீதி மன்றம் சென்றால் அமைதியின்மைதான். மேலும் பல வருடங்கள் நீடிக்கும் என்பதை முஸ்லிம் அமைப்புகள் உணர வேண்டும்.



ராஜராஜன் 1000 குழப்பம் ஏன்?

வீரபாண்டி ஆறுமுகம் :
(தமிழக விவசாய அமைச்சர்)

நாளும் பொழுதும் வேளாண் விஞ்ஞானம் வளர்ந்து வரும் நிலையில் விளைச்சல் அதிகரிக்க புதிய புதிய சாகுபடி முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அப்படி அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நவீன சாகுபடிக்கு 2007-ல் முதல்வர் 'செம்மை நெல் சாகுபடி' என்று பெயர் வைத்தார். நமது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியை ஆண்ட ராஜராஜன் நினைவைப் போற்றும் விதமாகச் செம்மை நெல் சாகுபடிக்கு 'ராஜராஜன் 1000' என்று புதிய பெயரை சமீபத்தில் நடந்த பெரிய கோயில் விழாவில் முதல்வர் சூட்டினார். இந்த விஷயத்தில் முதல்வர் அறிவிப்பை பத்திரிகைகள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இது குறித்து போடப்பட்ட அரசு ஆணை 270ஐ பார்த்தால் தெளிவு கிடைக்கும்.

- ப்ரியன்



போது ஆடையின்றிக் குளித்த
பாவம் என்றுதான் நமது சாஸ்
திரத்தில் கூறப்பட்டுள்ளது. உடுத்தியிருக்கும் துணியை விட்டுவிட்டு வரவேண்டு என்று எங்கும் கூறப்படவில்லை. இது அண்மை காலத்தில் ஏ பட்ட 'லேட்டஸ்ட் சென்ட மெண்ட்' முற்றிலும் தவறா செயல். புனித தீர்த்தங்களி நீராடினாலே பழைய கழியும் புதியன புகும்.

தலைச்சன் ஆண் பெண்

கே. சரவணகுமார், பெங்களூரு-56.

தலைச்சன் ஆண், தலைச்சன் பெண் திருமணம் செய்யலாமா?

பழங்காலத்தில் செய்யமாட்டார்கள். ஆனால் இன்றைய இளம் தலைமுறைத் தம்பதியினர் ஒரு குழந்தை போதும் என முடிவு செய்துவிடுகின்றனர். இன்னும் இருபது ஆண்டுகள் கழித்து எல்லோருமே வீட்டுக்கு மூத்தவர்களாக இருப்பார்கள். தலைச்சனுக்குத் தலைச்சன் திருமணம் செய்வது இன்றைய சமுதாயத்தில் தவிர்க்க முடியாதது. காலத்தின் கட்டாயம் என்பதால் இதில் தவறில்லை.

செல்வி, சென்னை.

புனித தீர்த்தங்களில் நீராடும்போது உடுத்தியிருக்கும் ஆடை ஏதேனும் ஒன்றை அதில் விட்டுவிட வேண்டுமா?

ஆடையை நீரில் விட வேண்டாம். கடல், நதி, குளம் போன்ற நீர்நிலைகளில் குளிக்கும்

ப்ரியா, திருச்சி,

ஒவ்வொருமுறை கோயிலுக்கு செல்லும்போதும் அவசியம் தீபம் ஏற் வேண்டுமா?

அப்படி ஒன்றும் கட்டாயம் இல்லை இறை வழிபாட்டில் தீபம் ஏற்றுதல் ஒ முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனா அதுமட்டுமே வழிபாட்டு முறை எ நினைத்துவிட வேண்டாம். நான்கா திருமுறையில் அப்பரின் தேவாரப் பாட ஒன்றில் இறைவனை எவ்வாறு வழிபட்டா என்ன பலன் கிடைக்கும் என்னும் அரி குறிப்பு ஒன்று காணப்படுகிறது.

'விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கி னால் பதிற்றியாகும்.

துளக்கி நன்மலர் தொடுத்தால் தூய விள் ஏறலாகும்

விளக்கிட்டார் பேறு சொல்லி

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

பளிச் பரிகார

மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க் கடிகள்
தாம் அருளுமாறே'

திருக்கோயிலில் திருவிளக்கிடுவோர், ஆலயத்தைத் தூய்மை படுத்துவோர், மெழுகுவோர், நறுமண மலர் தொடுப்போர் ஆகியோர் பெறும் பலன்களைக் குறிப்பிட்டுவிட்டு, இவற்றைக் காட்டிலும் சுலபமாகவும், அதிகமாகவும் இறை அருளைப் பெறுபவர்கள் இன்னிசைப் பாடல் பாடி வழிபடுபவர்களே என்பது அப்பர்பிரான் வாக்கு. சுலோகம் சொல்லுங்கள், பாடுங்கள், பூஜைக்குத் தேவையான பொருட்கள் வாங்கிக் கொடுங்கள். மனதாரப் பிரார்த்தனை செய்வதுதான் முக்கியம்.

வதி அந்தாதி, குமரகுருபரர் சுவாமிகள் அருளிச் செய்த சகலகலாவல்லி மாலை ஆகிய இரண்டையும் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுங்கள். இவற்றைத் தினசரி பாராயணம் செய்யப் பழகுங்கள். படிப்பு நன்றாக வரும்.

டாக்டர் டி. கமலாகர்ராவ், சென்னை.

என் மூத்த மகன் டாக்டர் கார்த்திக்ராவ் ஜாதகம் அனுப்பியுள்ளேன். திருமணம் மற்றும் தொழில் பற்றி கூறவும்?

அவருக்கு ஆறு மாதத்துக்குள் திருமணம் நடக்கும். அவரும் கைராசி டாக்டர் எனப் பெயர் எடுப்பார்.

திருமணம் செய்யலாமா?

அமாவாசை போன்ற பிதுர் தினங்களில் தர்ப்பணம் செய்துவிட்டு பூஜை செய்ய வேண்டுமா அல்லது தினசரி பூஜைகளை முடித்துக் கொண்டு தர்ப்பணம் செய்யலாமா?

முதலில் பித்ருக்கள், அதன் பிறகுதான் தெய்வம்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை - திருக்குறள்

தென்புலத்தார் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது பித்ருக்களை.

ஆர்.பாஸ்கரன், பெங்களூரு.

என் மகன் ஜெயராமகிருஷ்ணனுக்குப் பன்னிரண்டு வயதாகிறது. படிப்பில் ஈடுபாடு இல்லை. அவன் நன்றாகப் படிப்பதற்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும்?

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய சரஸ்

கே.வெங்கட்டரமணன், தர்மபுரி

8-10-1980இல் பிறந்த என் மகன் டி.வி.பாலாஜிக்கு எப்பொழுது திருமணம் நடக்கும்?

2011 நவம்பர்-டிசம்பரில் திருமணம் நடக்கும். அழகும் நற்குணங்களும் ஒருங்கே சேர்ந்த பெண் மருமகளாக வருவாள்.

கே.ஆர். வெங்கட்டரமணி,
கோயம்புத்தூர்.

4-10-1977இல் பிறந்த என் மகன் புவனாவுக்கு எப்பொழுது நல்ல வேலை கிடைக்கும்?

2011, மே 8ஆம் தேதி குரு பெயர்ச்சி ஆகின்றது. அவரின் ராசிக்கு 11ஆம் இடத்துக்கு குரு வருகின்றது. அடுத்த மே-ஜூன் மாதங்களில் நிச்சயம் நல்ல வேலை கிடைக்கும்.



ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்

சிக்கலானதா செயற்கைக் கருத்தரிப்பு!

செயற்கைக் கருத்தரிப்பு நம் மக்களிடையே எப்படிப் பார்க்கப்படுகிறது? இதில் உள்ள மருத்துவ ரீதியான சிக்கல்கள் என்னென்ன? விளக்கம் தருகிறார் செயற்கைக் கருத்தரிப்பில் வெற்றிகரமாகச் செயல்படும் மகப்பேறு மருத்துவ நிபுணர் வசந்தரா தியாகராஜன்.

''பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு குழந்தைப் பேறு கிட்டவில்லை என்றால், அனாதை ஆசிரமங்களுக்குச் சென்று குழந்தையைத் தத்தெடுப்பார்கள். இப்போது, குழந்தையைத் தத்தெடுப்பதை விட, செயற்கைக் கருத்தரிப்பின் மூலம், நாமே நம் கருவில் தாங்கித் தாய்மையின் சந்தோஷத்தை முழுமையாக அனுபவிப்போம் என்ற மனோபாவத்துடன் பல பெண்கள் செயற்கைக் கருத்தரிப்பை முயன்று பார்க்க வருகிறார்கள். நான் ஏன் இங்கு 'முயன்று' என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறேன் என்றால், செயற்கைக் கருத்தரிப்பில் 100 சதவிகிதக் குழந்தைப் பேறு நிச்சயம் என்ற உறுதிமொழியை வழங்கிட முடியாது.



● வசந்தரா தியாகராஜன்

30 சதவிகிதம் பெண்ணிடம் குறை இருக்கலாம், 30 சதவிகிதம் ஆணிடம் குறை இருக்கலாம், 30 சதவிகிதம் ஏன் என்ற காரணமே சொல்ல முடியாமல், கருத்தரிக்கும் வாய்ப்பே இல்லாமல் போகலாம்.

செயற்கைக் கருத்தரிப்பை இரண்டு மூன்று வழிகளில் செய்கிறோம். IUI என்கிற முறை ஆண்களுக்கானது. விந்தணுக்களில் எண்ணிக்கையோ, வீரியமோ குறைந்திருந்தால், செயற்கை முறையில் விந்தணுக்களைச் செலுத்துவோம். சில சமயம், ஆணிடம் விந்தணுக்களே இல்லாமல் போனால், ஸ்பெர்ம் டொனேஷன் பெறுகிறோம். பல தம்பதிகள் தங்களது நெருங்கிய உறவினர்களிடம் இருந்தே ஸ்பெர்ம்களைத் தானமாகப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். வெளியாட்களிடம் இருந்து நாங்கள் ஸ்பெர்ம்களைத் தானமாகப் பெற்று வங்கியில் வைக்கும் போது, தானம் கொடுப்பவர்களின் இரத்தம், ஆரோக்கியம், இனம், மதம், குடும்பச் சூழல்... எல்லாம் எல்லாம் சரியாக இருந்தால்தான் தானத்துக்கு எடுத்துக்கொள்கிறோம். இந்த முறையில் கருத் தரிக்க நினைக்கும் பெண்ணின் கர்ப்பப் பையில் வைத்து, அவளைத் தாய்மை அடையச் செய்கிறோம்.

அடுத்து, டெஸ்ட் ட்யூப் பேபி (IVF, ET) என்று அழைக்கப்படும் செயற்கைக் கருத்தரிப்பு முறை. இதில், திருமணமான பெண்ணுக்கு fallopian tube-ல் வளர்ச்சி இல்லாமல் இருந்தாலோ, அடைப்பு இருந்தாலோ, ஊசி மூலம், நிறைய வலுவான



கருமுட்டைகளை வெளிவர மருத்துவ சிகிச்சை அளிப்போம். அப்படி ஊசி செலுத்திய 36 மணி நேரத்தில் வெளி வரும் கருமுட்டையை, அவளது கணவரின், உயிரணுக்களோடு சேர்த்து incubator-ல் 36 மணி நேரம் முதல் சில சமயங்களில் 5 நாட்கள் வரைகூட வைப்போம். அது கருவான பிறகு, பெண்ணின் கர்ப்பப்பையில் வைத்துவிடுவோம். இப்படிச் செய்யப்பட்ட கருத்தரிப்பில் கரு சரியாக வளருமா, வளராதா என்பதைப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு பரிசோதனை செய்து பார்க்கும்போதுதான் தெரியும். இந்த முறையில் 50 முதல் 60 சதவிகிதம் வெற்றிவாய்ப்பு நிச்சயம்.

பெண்ணுக்கு, ட்யூப் சிதைந்தாலோ, கர்ப்பப் பையின் வாயில் கோளாறுகள் இருந்தாலோ, கரு முட்டை சரியான வளர்ச்சி இல்லாமல் இருந்தாலோ, 25 வயதுக்குள்ளாகவே, முட்டை இல்லாமலிருந்தாலோ இயற்கை முறையில் கர்ப்பம் தரிக்க முடியாது. அப்போது முட்டையைத் தானமாகப் பெற்று செயற்கைக் கருத்தரிப்பு செய்ய வைக்க முடியும். இதில் அப்பெண்ணின், நெருங்கிய உறவினர்களின் கருமுட்டையைத்தான் தானமாகப் பெற்று, செயற்கைக் கருத்தரிப்பு செய்து வருகிறோம். செயற்கைக் கருத்தரிப்பு என்பது நிச்சயம் குழந்தைப் பேற்றினை இயற்கையாகப் பெற முடியாதவர்கள் பார்வையில் ஒரு பெரிய வரமாகவே பார்க்கப்படுகிறது!''

- என்.எஸ்.கே.





கல்கி

2010 அக்டோபர் 17
விக்ருதி புரட்டாசி 31
மலர் : 69
இதழ் : 12




தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


ராமஜன்ம பூமியும் ராஜராஜன் ஸ்தூபியும்!

“ராஜராஜ சோழனின் நினைவுச் சின்னத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை; ஆனால் கிருத யுகத்து ராமன் பிறந்த இடத்தைக் கண்டறிந்துவிட்டார்கள்!'' என்று கிண்டலடித்துள்ளார் முதல்வர் கருணாநிதி! அதிலும், தீர்ப்பு வெளியானதுமே, அது ''இரு தரப்பினருக்கும் திருப்தி அளிக்கக்கூடியது'' என்று விமர்சித்தவர், இரு தினங்கள் சென்று இப்படி நக்கலடித்திருப்பது வினோதம்தான்!

ராமஜன்ம பூமி என்று இன்று கொண்டாடப்படும் இடத்தில் தான் ஸ்ரீராமர் பிறந்தார் என்பதற்கு, யாராலும் வரலாறு பூர்வமான ஆதாரம் கண்டுபிடிக்கவோ, சமர்ப்பிக்கவோ முடியாது. இந்தியா முழுவதும் இதுபோன்ற புராண-இதிகாசம் சம்பந்தப்பட்ட இடங்கள் இருக்கின்றன. அவற்றுக்கான ஆதாரம் என்பது, மக்கள் மனத்தில் சுடர்விட்டு, அவர்களை வழிநடத்திக்கொண்டிருக்கும் நம்பிக்கைதான். இத்தகைய நம்பிக்கைகள் ஹிந்து மதத்தில் மட்டுமின்றி அனைத்து மதங்களிலும் உண்டு என்பதை உணர வேண்டும்; மதிக்கவும் வேண்டும். அதுவே மெய்யான மதச்சார்பின்மையாக இருக்கும்.

அந்த அடிப்படையில்தான் அலகாபாத் உயர்நீதிமன்றம் ராமஜன்ம பூமி வழக்கை விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளது. நீதிமன்றம் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து, தர்க்க ரீதியாகத்தானே தீர்ப்பளிக்க வேண்டும் என்று வாதாடலாம். ஆனால், இந்த வழக்கே முழுமையாக நம்பிக்கை சார்ந்தது என்னும்போது, அந்த நம்பிக்கையைக் கருத்தில் கொண்டு, இரு தரப்பினருக்கும் சம நீதி கிட்டும் வகையில் தீர்ப்பு அமைந்திருப்பதை வரவேற்கத்





ான் வேண்டும். இது நீதித்துறை வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வு.

இந்தத் தீர்ப்பை ஏற்றுச் செயல்படுத்துவதுடன், ஹிந்து-முஸ்லிம் இரு தரப்பினரும் கைகோத்து, அயோத்தியை ஒற்றுமைக்கான உதாரண நகரமாக மாற்றினால் நம் நாடே லை நிமிரும்; உலகம் போற்ற உயரும். மஸ்ஜித்தைக் கட்டுவதற்கு ஹிந்துக்களும், ராமர் கோயிலைக் கட்டுவதற்கு முஸ்லிம்களும் ஏன் பொருளுதவி செய்யக்கூடாது? இரு தரப்புத் லைவர்களும் மனம் வைத்தால் மக்களின் உணர்வுகளை இதனை நோக்கி ஒழுங்குபடுத்தி கெக் கோலாகலமாக நடத்தி வைக்கலாம்.

மாறாக, இத் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்வதோ, சமரசம் பேச முயற்சி செய் பதோ இவ்விஷயத்தில் பின்னடைவையே ஏற்படுத்தும். சமரச முயற்சியில் பேதங்கள் ழுந்தால் பின்னடைவு; உச்சநீதிமன்றத் தீர்ப்பினால் தற்போதைய உயர்நீதிமன்றத் தீர்ப்பு வ்விதத்தில் மாற்றப்பட்டாலும் இரு தரப்பினருள் யாரேனும் ஒருவருக்கு அதிருப்தியே!

வழிபாட்டு தலத்தின் பெருமை என்பது, அது அமைந்துள்ள இடத்தின் விஸ்தீரணத்தில் ல்லை; அங்கு அருள் பாலிக்கும் தெய்வத்தின் சக்தியில் இருக்கிறது. அதன் மீது மக்கள் காண்டுள்ள பக்தியில் இருக்கிறது. அதற்கும் மேலாக, அந்த பக்தியும் நம்பிக்கையும் அவர் ளுடைய உள்ளத்தில் ஏற்படுத்தக்கூடிய அன்பிலும் அடக்கத்திலும் கனிவிலும் இருக்கிறது.

அதனால்தான் ராஜராஜ சோழனின் அரண்மனை அழிந்துபோனாலும், அவன் கட்டு த்த கோயில் இன்னும் கம்பீரமாக நிற்கிறது!

அதனால்தான், "சாகேத நகரில் (அயோத்தி) வாழ்ந்த மக்கள் நீண்ட ஆயுளைப் பெற்று, காபம், கர்வம் முதலியன இல்லாதவர்களாக வாழ்ந்தார்களே! உன்னைப்போல் அரசாள ஒருவர் ண்டா?" என்று தியாகராஜர் ஸ்ரீராமனைப் பற்றிப் பாடுகிறார் (காருபாரு என்ற கீர்த்தனையில்).

நாட்டின் முதல் வளம் என்பது மக்களின் உள்ளங்கள் குரோதமற்று இருப்பதுதான். மதத் லைவர்கள் இதை மறந்துவிடாமல் மக்களை வழிநடத்தட்டும்; அரசியல் தலைவர்கள் தை உணர்ந்து, மனங்களைப் புண்படுத்தாமல் வளப்படுத்தட்டும்.





டெஸ்ட் ட்யூப்புக்கு நோபல்!

“எங்கள் வீட்டுக்கு பக்கத்தில் ஒரு தம்பதியினர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொரு முறை எங்கள் வீட்டுக்கு வரும்போதும், அங்கே இருந்த குழந்தை வண்டியைப் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். அது அவர்களுக்கு ஏற்படுத்தும் உணர்வை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது. மரங்கள் கனிகளைச் சுமந்தன, மேகங்கள் மழையைச் சுமந்தது. ஆனால் குழந்தையே பெற முடியாத என் பக்கத்து வீட்டு நண்பர்களோ, என் குழந்தைகளை மட்டுமே பார்க்க முடிந்தது'' என்று உணர்வுபூர்வமாகப் பேசியவர், பேராசிரியர் ராபர்ட் எட்வர்ட்.

அவருக்குத்தான் செயற்கைக் கருத்தரிப்பு முறையான ஐ.வி.எஃப்.ஐ (In-Virto Fertilisation) உருவாக்கியதற்கு 2010க்கான மருத்துவத் துறை நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. பேராசிரியர் ராபர்ட்டும் டாக்டர் பாட்ரிக் ஸ்டெப்டோயும் இணைந்தே செயற்கைக் கருத்தரிப்பு முறையை உருவாக்கினர்.

1978ல் செயற்கைக் கருத்தரிப்பு முறையின் மூலம் முதல் குழந்தை பிறந்தது. லூயி பிரவுன் என்ற அந்த முதல் டெஸ்ட் டியூப் பெண் குழந்தை இன்று வளர்ந்து ஆரோக்கியமாக இருக்கிறார். 2007ல் லூயி பிரவுனுக்கு இயற்கையான முறையில் மகன் பிறந்தான்.

அதுதான் தொடக்கம். செயற்கைக் கருத்தரிப்பு முறையில் இன்று உலகெங்கும் சுமார் 40 லட்சம் குழந்தைகள் பிறந்துள்ளனர். செயற்கை முறையில் கருத்தரிப் பின் பிதாமகர் என்றே ராபர்ட் எட்வர்ட்டைச் சொல்லுகிறார்கள் அவரது கண்டுபிடிப்பின் தொடர்ச்சியாக, செயற்கைக் கருத்தரிப்பு முறைகளில் மேலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கான பிள்ளையார் சுழி போட்டவர் பேராசிரியர் ராபர்ட்.

இப்படிப்பட்ட முன்னோடியான ஆய்வுக்கு இப்போதுதான் நோபல் கௌரவமும் அங்கீகாரமும் கிடைத்திருப்பது பலருக்கு வியப்பை அளித்துள்ளது. நோபல் விருதுக் குழு, இத்தனை ஆண்டுகளும் ராபர்ட்டைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டு அதன்மீது உண்டு.

அதைவிட, பிரிட்டன் வழங்கும் உயரிய விருதான நைட்வுட் (Knighthood) கூட ராபர்ட்டுக்கு வழங்கப்படவில்லை என்ற குறையும் அறிவியலாளர்கள் மத்தியில் பேசப்பட்டது. ஆனால், இதையெல்லாம் பற்றி ராபர்ட் அதிகம் கவலைப்படவில்லை. ''உலகில் குழந்தைதான் முக்கியம். அதை உருவாக்க வழிகண்டு பிடித்ததே எனக்குப் போதும்'' என்று மன நிறைவையே அணிகலனாய் ஏற்றவர் ராபர்ட்.

– துளசி

அத்தை

மழை அடர்வாக வலுப்பதும், தூறலாய்ச் சிறுப்பதுமாய்க் கண்கட்டு வித்தை காட்டிக்கொண்டிருந்தது. செம்மணிட்ட கோலம் உடனே கலைவதைக் கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தாள் சியாமளா. தொலைபேசி அலறி உள்ளே அழைத்தது.

கேட்டதுதான் தாமதம். அவளின் தினசரி வேலைகள் செயலிழந்து போயின. அவளைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த அத்தை ஊரில் உணர்வற்று இழுத்துக் கொண்டிருக்கிறாள் என்று வந்தது சேதி. உடனே கிளம்பலாம் என்றால் இதோ நவராத்திரியின் பொருட்டுக் கலசம் நிறுத்த வேண்டிய முக்கிய நாள்.

அலுவலகம் கிளம்பிக்கொண்டிருந்த ராமிடம் விஷயத்தை அடிக்கோடிட்டாள்.

''என்ன இழுத்துண்டிருக்காளா?''

''ம்... கண்டிப்பா போய்ப் பார்க்கணும்.''

''என்ன விளையாடுறியா... ஏற்கெனவே நிறைய லீவு வேற எடுத்துட்டேன். இனிமேல் எடுத்தேன்னா எம்.டி. என்னைக் கூப்பிட்டு வார்ன் பண்ற நிலைமைதான் வரும்.''

''சரிங்க, நான் தனியாவே போய்க்குறேன்.''

''சியாமு, அது ஒண்ணும் தமிழ்நாடு இல்லை. ஹைதராபாத். பாஷை தெரியாத ஊர்ல தனியாப் போய் என்ன பண்ணுவ நீ? பரத்துக்கும் வைஸூக்கும் காலாண்டுப் பரீட்சை வேற. ஞாபகம் வெச்சுக்கோ. அவங்கென்ன அம்மாவா... அத்தைதானே?''

எவ்வளவு சாதாரணமாய் வந்துவிட்டது அவரிடம் இருந்து வார்த்தைகள். பாசம் காண்பிப்பதில் பாகுபாடு காட்டி உறவின்பால் பிரித்துப் பேசும் கணவனை என்னவென்று சொல்வது?

மழை வலுத்த நேரம் மீண்டும் தொடர்ந்தான்.

''பிராக்டிகலா பாரும்மா. ஒரேயடியா 'டெத்'துக்கு போகலாம் விடு.''

''போதும் நிறுத்துங்க. உயிரோட இருக்கறவங்கள நீங்களே கொன்னுடாதீங்க.''

''எதுக்கிப்ப கண்கலங்கற... எங்கம்மா பர்மிஷன் கொடுத்துட்டா நீ தாராளமா போயிட்டு வா. வர்றேன்.''

கோயிலுக்குச் சென்றிருந்த மாமியார் மீனாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தாள். மாமி மனமிறங்கிவிட்டால்





உடனே கிளம்பலாமே என்று வேலைகளை மட மடவென முடித்துக்கொண்டிருந்தாள்.

அன்று புரட்டாசி மாத அமாவாசை. கொலு வைக்கும் பழக்கம் உள்ள குடும்பம். இரு பதுக்குப் பன்னிரெண்டான வீட்டுக் கூடத் தினுள் ஒன்பது படிகள் நிறுத்தி வெள்ளை வேட்டி நிரவினாள்.

வழக்கமாய்க் கையிலெடுக்கும் பொம்மைகளின் கூரிய முகம், பேசும் கண்கள், அமைப்பான முகம், தவ ராது சிவப்புச் சாயம் பூசிய உதடு கள், சுவாமி பொம்மைகளிலுள்ள நகைகள் இவற்றின் அழகைப் பார்த்து வியந்தவண்ணம் துடைத் துத் துடைத்து அடுக்கி வைப் பாள். ஆனால், இவ்வருடம் அவளுக்குத் தவிப்பாய்ப் போயிற்று.

அத்தையின் ஞாபகங் கள் மன அடுக்கில் மேலெ ழும்பிக் கொண்டிருந்தன.

திருமணமாகாமல் முதிர் கன்னியாய் சில காலம் இருந்த அத்தையிடம் நீண்ட நாள் உறவு கொண்டாட முடிந்தது இவளுக்கு. அத் தைக்கு இடுப்பைத் தாண்டிய நீள முடி. முன்பக்கப் பற்கள் துருத்திக் கொண்டிருப்பதால்தான் திருமணம் தள்ளிப்போனது என்று பாட்டி கூறுவாள்.

எத்தனை அழகாய் பல்லாங் குழி ஆடச் சொல்லிக் கொடுத் தாள். நான் தோற்கக்கூடாது என்பதற்காக எத்தனை தரம் தான் தோற்றிருக்கிறாள்? பங்க் கடையில் பன்னீர் சோடா வாங்கிக் கொடுப்பதி லாகட்டும், மேட்டுத் தெரு சுப்பய்யா வீட்டுக் கொடிக்கா

புளிக்கா மரத்தில் கல் எறிந்து கொடிக்கா புளிக்கா பறித்துத் தருவதிலாகட்டும், அத்தை அத்தைதான்.

சமயத்தில் அத்தைக்கும் அம்மாவுக்கும் முட்டிக்கொள்ளும். பெரும்பாலும் அம்மாவின் மீதுதான் தவறு இருக்கும்.

''ஏன் அத்தை, சொல்ல வேண்டியது தானே பாட்டிகிட்ட,'' என மனம் வெதும்பி நான் சொல்லிய சில வேளைகளில் கூட ''ம்... அப்புறம் என் செல்லக்குட்டிய அண்ணி எங்கூட விளையாட விடாட்டா நான் என்ன செய்வேன்?'' என்பாள் வேடிக்கையாக.

அம்மாவுக்கு எனக்கடுத்து தொடர்ந்து இரு பிள்ளைகள் பிறந்து, பிறந்த மனை சென்ற போதும் தாயினும் மேலாக என்னை பார்த்துக்கொண்டவர் அத்தை.

எனக்கும் என் தங்கைக்கும் ஒரே சமயத்தில் அவளுக்குக் குழந்தை பிறப்பும் எனக்கு அபார்ஷனுமாய் ஆகிப்போக, இருவரும் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்கக்கூடாது எனச் சொல்லி விட்டனர். அவளுக்குத் தீட்டு எடுக்கும்வரை அத்தை அவரின் புகுந்த வீட்டுக்கு அழைத்துச் சென்று பத்து நாள் என்னைப் படுக்கையிலேயே படுக்க வைத்து உடல் தேற்றி மனம் மாற்றி தைரியம் தந்தவள். ஆயிற்று. அத்தை தம் மகனுடன் ஹைதராபாத்தில் இரண்டு வருடங்களுக்கு முன் குடியேறிவிட்டார். அதுமுதல் அவரைப் பார்ப்பது கடினம் என்றாகிப் போனது. கடைசியாய் ஒன்று விட்ட சித்தப்பா பையனின் திருமணத்துக்கு வந்திருந்தார்.

''சியாமளா... செத்த காப்பி எடுத்துட்டு வா,'' மீனாட்சி வாசல் நுழையும் முன்னே ஏவுகணை வேகத்தில் இவளிடம் வந்து சேர்ந்தன வார்த்தைகள். காப்பி கொடுத்தபடியே காதுக்குள் போட்டு முடித்தாள் சங்கதியை.

''தோ பாருடிம்மா... கலசம் நிறுத்தி நவராத்திரி கும்பிடுற பழக்கம் நம்மளது. வர்ற சுமங்கலிகளுக்கு என்னைப் போன்றவளா தாம்பூலம் கொடுக்க முடியும்? ஆம்பளைக்குக் கிருத்திகை ஆகாது. பொம்மனாட்டிக்கு அமாவாசை ஆகாது. அமா வாசை தோ.. கழியப் போவுது. சேதி ஒண்ணும் வரலியே, விடு. அடுத்த அமாவாசை தாங்கும். அதான் பேச்சு மூச்சில்லாம இருக்காளே, பார்த்து என்ன பண்ணப் போற? நவராத்திரி முடிய உங்கத்தையைப் பார்க்குற சிந்தனை மட்டும் வெச்சுக்காதடிம்மா, கலசம் நிறுத்தியிருக்கு. பின்னாடி குடும்பத்துக்கு ஆகாது,'' பட்டாசாய்ப் பொரிந்த பேச்சுக்களூடே உள்மனத் தவிப்பை எப்படி எடுத்து வைப்பது? முள்ளின் மேல் நடப்பவளாய் நாட்களைக் கழித்தவள் நவராத்திரியும், பிள்ளைகளின் பரீட்சையும் ஒருசேர முடிய ரயிலில் பிள்ளைகளுடன் பயணப்பட்டாள்.



ஆட்டோவிலிருந்து இறங்கியதும் அத்தை என்று பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள் சியாமளா.

இதோ ஜங்ஷன் முடிந்து ஆட்டோ பிடித்து தெரு முனைக்கும் வந்தாயிற்று.

'நீங்கள் உயிருடன் இருக்கும்போதே நான் இங்கு வந்திருக்கிறேன் அத்தை' என்பதை அவள் ஸ்பரிசத்தின் மூலம் அவருக்கு உணர்த்த இன்னும் சில நிமிடங்கள் போதும். எழுச்சியான அந்த உணர்ச்சியுடன் சியாமளா ஆட்டோவிலிருந்து இறங்குகையில் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தது அத்தையைச் சூழ்ந்திருந்த சொந்தங்கள், 'விட்டுட்டுப் போயிட்டியே.'

அமரர் கல்கி

ஒருவருடைய கையெழுத்தைப் பார்த்து அவருடைய குணங்களைக் கண்டுபிடிக்கலாம் என்று சொல்வார்கள். இதன் உண்மை எப்படியானாலும், ஒரு நூலாசிரியர் எழுதும் நடையில் அவருடைய குணங்கள் பிரதிபலிக்கின்றன என்பதில் ஐயமில்லை. இதை ராஜாஜியின் நடையில் நன்கு காணலாம்.

''வாழ்க்கை முறையில் எளிமையும் சிந்தனையில் உயர்வும்'' உடையவர்களே உலகில் மகான்கள் என்று போற்றப்படுகிறார்கள்.

எளிய வாழ்வுக்கும் உயரிய சிந்தனைக்கும் ராஜாஜி உதாரண புருஷராக விளங்குகிறார்.

இந்த இரண்டு அம்சங்களையும் அவருடைய தமிழ் நடையிலும் காண்கிறோம்.

எளிமை என்றால், இதைவிட எளிமையாகத் தமிழ் எழுதவே முடியாது என்று சொல்லலாம். ஆனால், நடை எவ்வளவுக்கு எளியதோ, அவ்வளவுக்கு ராஜாஜி எழுதும் விஷயங்கள் உயர்வானவை.

இன்னும் ராஜாஜியிடம் நாம் காணும் ஒப்பற்ற தூய்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, வினைத் திட்பம் ஆகியவற்றையும் அவருடைய தமிழ் நடையில் காண்கிறோம்.

ராஜாஜியின் நடை பேச்சு நடைதான்; ஆனால் இலக்கண வரம்புக்குட்பட்டது. அதில் தடபுடலும் படாடோபமும் கிடையாது; ஆனால் அழகும் அமைதியும் உண்டு.



தெளிந்த தமிழ்!

இதெல்லாவற்றையும் விட முக்கியமாக, ராஜாஜியின் பெயர் பெற்ற அறிவுத் தெளிவையும் அவரது நடையில் காண்கிறோம். எப்பேர்ப்பட்ட சிக்கலான விஷயத்தையும் சிக்கெடுத்து மிகச் சாதாரண அறிவுள்ளவர்களுக்கும் தெரியும்படி தெளிவாக்கிவிடும் அதிசய சக்தியை அவருடைய எழுத்திலேயும் பார்க்கிறோம்.

மலைச் சுனையில் உற்பத்தியாகிப் பாறாங் கற்களின் மீதும் கூழாங்கற்களின் மீதும் சலசலவென்று சப்தித்துக் கொண்டு ஓடும் பளிங்கு போன்ற தூய்மையான ஓடை நீரில் எத்தகைய தெளிவை நாம் காண்கிறோமோ, அத்தகைய தெளிவை ராஜாஜியின் தமிழ் நடையில் காண்கிறோம்.

- 'படித்தேன் ரசித்தேன்' நூலிலிருந்து

கல்வெட்டுகள்



பெயரையோ, புகைப்படத்தையோ, வீட்டின் முகவரியையோ எக்காரணம் கொண்டு யாரிடமும் சொல்லமாட்டேன் என்ற உறுதிமொழியை நம்மிடம் வாங்கிக் கொண்டு பேச ஆரம்பித்தார் அந்தப் பெண்மணி.

''எனக்கு இப்பொழுது நாற்பத்தொன்பது வயசு. தாய்மையை ரொம்ப லேட்டா தான் அனுபவிச்சேன். என் வாழ்க்கையில் வசந்தம் வந்து இன்றோடு ஓராண்டு ஆச்சு'' என்று பக்கத்தில் அழகாகச் சிரித்துக்கொண்டிருக்கும், செயற்கைக் கருத்தரிப்பின் மூலம் பிறந்த தம் குழந்தையைக் காண்பிக்கிறார்.

''இருபத்திரெண்டு வயசுலேயே திருமணம் ஆயிடுச்சு. எங்க அப்பா எக்கச்சக்க சீர் செனத்தி செஞ்சாங்க. இருந்தும், என்னை ஆசையாக 'அம்மா'ன்னும் என் கணவரைப் பார்த்து 'அப்பா'ன்னும் கூப்பிடவும் ஒரு மழலை செல்வம் இல்லாத குறை எங்களுக்கும், என்னைப் பெத்தவங்களுக்கும் ரொம்பவே இருந்துச்சு. நாங்க வேண்டாத சாமி இல்ல, இருக்காத விரதம் இல்ல. ஒரு பயனும் இல்ல. வாழ்க்கை ரொம்ப வெறுத்துப் போச்சு. புகுந்த வீட்டு மனுசங்க ரொம்ப மூஞ்சியைக் காட்டுவாங்க. தெரிஞ்சவங்க ஒருத்தங்களுக்குச் செயற்



வாழ்வில் வந்த வசந்தம்!

கைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பிறந்திருக்குன்னு ஒரு தூரத்து உறவினர் மூலம் தெரிந்தபோது, இந்தச் செய்தி நமக்காகவே வந்திருக்குன்னு நினைச்சு சந்தோஷப்பட்டு, சென்னையில் உள்ள ஒரு பிரபல மருத்துவமனைக்கு வந்தேன்'' என்கிறார் அவர்.

‘‘முதல்ல என் வீட்டுக்காரர் இதற்குச் சம்மதிக்கவே இல்லை. அவருக்கு அப்போ வயசு 55. பணம் செலவு, மன உளைச்சல் கூடவே எனக்கு இரத்தக் கொதிப்பு வேற இருக்கு. மெனோபாஸ் நிலையை நான் எட்டியிருந்த சமயம் அது. இருந்தும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தே தீர வேண்டும் என்ற மன வைராக்கியம் என்னுள் இருந்ததைப் பார்த்து, எனக்குச் சிகிச்சை அளித்த மருத்துவக் குழுவினர்களே ஆச்சரியப்பட்டுப் போனார்கள். மூன்று முறை திரும்பத் திரும்ப செயற்கைக் கருத்தரிப்பு செய்தும் தாய்மை பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனாலும், என்னுள் இருந்த ஆசை, பணச் செலவைப் பார்க்காமல் மீண்டும் முயற்சி செய்யத் தூண்டியது. ‘ஜாதகப்படி எனக்கு நிச்சயம் குழந்தைப் பேறு இருக்குன்னு சொல்லி இருக்காங்க. நான் வேண்டும் தெய்வம் என்னை ஏமாத்தி விடாது, நீங்க எனக்கு இரத்த அழுத்தத்துக்கான மாத்திரையைக் கொடுத்துக்கிட்டே ட்ரீட்மெண்ட்ட ஆரம்பியுங்க எனக்கு ஒண்ணும் ஆவாது' என்று நான் தைரியமாக இருந்து என் குழந்தையைப் பெற்றெடுத்து இருக்கிறேன். மருத்துவ சிகிச்சை பாதி,



என் மனோதைரியம் பாதி, கடவுளின் அருள் மீதி என்று சேர்ந்து எனக்குக் கொடுத்திருக்கும் பரிசுதான் என் குழந்தை'' என்கிறவரின் பேச்சில் போராட்டத்தின் களைப்பு தெரிகிறது.

''தானமாகக் கருமுட்டை பெற்றுதான் என் குழந்தையை ஈன்றெடுத்தேன் என்ற உண்மையை என் உறவினர்களிடமோ அல்லது, என்னைச் சுற்றியுள்ளவர்களிடமோ நான் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. என்னைப் போலவே பல பெண்கள், தங்களுக்குச் செயற்கைக் கருத்தரிப்பின் வழியாகத்தான் குழந்தை பிறந்தது என்று சொல்லிக்கொள்ள தயக்கம் இருக்கு. காரணம் நம்ம சமூகம்தான். ஆனா, என்னைத் தாயாக்கிய அந்த மருத்துவருக்கு மட்டும் மனத்தில் நன்றி சொல்லிக்கொண்டே இருக்கிறேன்'' என்கிறவரின் கண்கள் பனிக்கின்றன.

- நளினி சம்பத்குமார்

“**சா**ர் வாங்க, பார்த்து ரொம்ப நாளாச்சு, எப்படியிருக்கீங்க, ஏதாவது படத்துல தலைகாட்டினாதான் இந்தப் பக்கம் வரணும்னு முடிவு செஞ்சுட்டீங்களா?'' என்று அன்புடனும், உரிமையுடனும் கேட்கிறார் ஸ்ரீகாந்த்.

''சார் நடுவுல சின்னதா ஒரு ஆக்சிடெண்ட். சில மாதங்களுக்கு முன்னால், தெலுங்குப் பட ஷூட்டிங்கில் ஒரு மாடியில் இருந்து, இன்னொரு மாடிக்குத் தாவும்போது, கீழே விழுந்து காலில் அடி. தலைக்கு வந்தது காலோட போச்சுன்னு நினைச்சு சந்தோஷப்பட வேண்டியதுதான். என்னைக் காப்பாத்தினது இவர்தான்,'' என்று ஹாலில் மாட்டியிருக்கும் வெங்கடாஜலபதியைக் காண்பிக்கிறார். ''இப்படி அடிக்கடி ஆக்சிடெண்ட் ஆகும். இதனால பல சான்ஸை இழந்திருக்கேன். ஆனால் நம்பிக்கையை மட்டும் இழந்திடலை.''

'' 'உயிர்' வரைக்கும் எல்லாம் நல்லாத்தான் போய்க்கிட்டிருந்தது. 'கிழக்குக் கடற்கரைச் சாலை', 'ரசிக்கும் சீமானே', 'இந்திரவிழா' போன்ற நான் நம்பிய படங்கள் என் காலை வாரிவிட்டதுதான் சறுக்கல்களுக்கு முக்கிய காரணம். இன்னைக்கு நிறைய ஹீரோக்களுக்கு, அவங்களுக்கு ஏத்த மாதிரியான கதைகளைத் தேர்ந்தெடுத்து சொல்றதுக்கு ஒவ்வொரு குரூப் இருக்கறதா சொல்றாங்க. அந்த மாதிரி எந்த ஒரு குரூப்பும் எனக்கு இல்லாததுகூட என் அடுத்தடுத்த தோல்விகளுக்குக் காரணமாக இருக்கலாம். சமீபத்துல 'துரோகி' நம்பிக்கையைக் கொடுத்திருக்கு.''



ஏங்குகிறார் ஸ்ரீகாந்த்!

உங்களுக்குப் பிறகு அறிமுகமான ஹீரோக்கள் சூப்பரா ஸ்கோர் பண்ணும்போது, உங்கள் மனத்துக்குக் கஷ்டமாக இல்லையா?

''இதுல வருத்தப்படறதுக்கு என்ன இருக்கு? கார்த்திக்கு அமீர், ஆர்யாவுக்கு பாலா மாதிரி, ஸ்ரீகாந்துக்கு ஒரு டைரக்டர் கிடைச்சா கண்டிப்பா ஸ்கோர் செய்வேன். விக்ரம் சார் சேதுவுக்கு முன்னாடி எத்தனையோ தோல்விப் படங்கள் கொடுத்தார். அதெல்லாம் இன்னைக்கு யாருக்காவது தெரியுமா? ஏன் சூப்பர் ஸ்டார் கூட தோல்விப் படங்கள் தந்திருக்கார். வெற்றிக்காக 'காத்திருத்தல்' என்பது சினிமாவில் அடிப்படைப் பாடம்.''


இன்னைக்கு இருக்கிற நேட்டிவிட்டி டிரெண்டுக்கு, உங்களோட சாக்லெட் பேபி லுக் சரி வருமா?

''இதுக்கான சரியான டைரக்டர் கிடைச்சா என்னோட சாக்லெட் பேபி லுக்கையும் மாத்திக்காட்ட முடியும். சரியான ஸ்கிரிப்ட் கிடைச்சா, பருத்திவீரன் மாதிரி புழுதி பறக்கும் மண்ணில் லுங்கியை மடிச்சுக் கட்டிக்கிட்டு நடிக்கவும் நான் ரெடி. இரண்டு ஹீரோ சப்ஜெக்ட்டிலும் நல்ல கதை இருந்தா சொல்லுங்க. நிறைய படங்கள் கைவசம் இல்லாததால் இப்படிச் சொல்றானோன்னு நீங்க யோசிக்கறது எனக்குப் புரியுது (பாவாயில்லையே!) எத்தனை பெரிய ஹீரோவாக, எதிர்காலத்தில் மாறினாலும் மல்டி ஹீரோ சப்ஜெக்ட் என்னோட ஃபேவரிட் (வெரிகுட்). இந்தி, மலையாளம் மாதிரி நிறைய ஹீரோக்கள் சேர்ந்து நடிச்சா இண்டஸ்ட்ரீக்கும் நல்லது'' என்று ஸ்ரீகாந்த் சொல்லிக்கொண்டிருக்கும்போது, மனைவி வந்தனா வருகிறார். ''வந்தனா, என் வாழ்க்கையில் வந்த பிறகு எனக்குப் பொறுமை, நிதானம் வந்திருக்கு. கோபம் போயிருக்கு. மனைவிங்கிறவங்க கணவரின் பிறந்த நாளைக்கு ஏதாவது கிஃப்ட் தருவாங்க. என் வந்தனா என் பிறந்த நாளைக்கு அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து கிஃப்ட்டா தந்தாங்க'' என்று நெகிழ்வுடன் சொல்கிறார். ''என்னோட பிறந்த நாள் அன்றுதான் என் பையன் ஆகிலுக்கும் பிறந்தநாள். ஆகில் என்றால் இளவரசன்னு அர்த்தம். இந்த இளவரசன் ரொம்பச் சுட்டி. வந்தனா இப்ப மறுபடியும் கர்ப்பமா இருக்காங்க. வர்ற பிப்ரவரி மாசம் இந்த வீட்டுக்கு இளவரசியை எதிர்பார்க்கிறோம். கடவுள் யாரை அனுப்பப் போகிறார்ன்னு சஸ்பென்ஸா இருக்கு.''



- ராகவ் குமார்

ஷேர் மார்க்கெட்டா? மியூச்சுவல் ஃபண்டா?



டி.பாலசுந்தரம்

வி.ஜி. சத்தியநாராயணன், சென்னை -61

கிரெடிட்கார்டு உபயோகிக்கும் வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கப்படும் ரிவார்டு பாயிண்ட்களுக்குப் பதிலாக, அவரவர் உபயோகிக்கும் மொபைல் ஃபோன்களுக்கு ரீசார்ச் கூப்பன் கொடுக்கலாமே? பலர் ரிவார்டு பாயிண்ட்களை, சில நடைமுறைத் தொல்லைகளுக்காகப் பயன்படுத்துவதே இல்லையே?

கிரெடிட்கார்டின் ரிவார்ட் பாயிண்ட்களை வாடிக்கையாளர்கள் முழுமையாகக் காசாக்க முடியாது. உதாரணமாக, உங்கள் ரிவார்ட் பாயிண்ட்களைக் கொண்டு ஒரு வாட்ச் கம்பெனியில் வாட்ச் வாங்கும்போது குறிப்பிட்ட அளவு தள்ளுபடியைப் பெறுவதற்கான கூப்பனைப் பெறலாம். இதுபோல பல பொருட்களைத் தயாரித்து விற்கும் கம்பெனிகளுடன் ஓர் ஒப்பந்தத்தைப் போட்டுக்கொண்டு உங்களுடைய கிரெடிட் கார்டு நிறுவனம் உங்களுக்கு டிஸ்கவுண்ட் கூப்பன்களைத் தரும். டிஸ்கவுண்ட் கூப்பனைத் தருவதன் மூலம் நீங்கள் அந்தப் பொருளை வாங்கும் கட்டாயத்துக்கு வருவதால் அந்தப் பொருளைத் தயார் செய்யும் கம்பெனி, பொருளின் விற்பனை விலையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை கமிஷனாக கிரெடிட் கார்ட் கம்பெனிக்குக் கொடுக்கும். இதன் மூலமும் கிரெடிட் கார்ட் கம்பெனிக்கு இலாபம்தான். செல்ஃபோன் கம்பெனிகளும் இதுபோன்ற ரிவார்ட் பாயிண்ட்களுக்கு எதிராக ரீசார்ஜ் கார்டுகளுக்கு டிஸ்கவுண்ட் தரும் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டால் உங்களுக்குக் குறைந்த விலையில் ரீசார்ஜ் கூப்பன் கிடைக்க வாய்ப்புள்ளதே தவிர, முழுதாக ரீசார்ஜ் கூப்பன் இலவசமாகக் கிடைக்க வாய்ப்பேயில்லை.

சம்பத், சென்னை

நிலத்தில் முதலீடு செய்வது நல்லதா... சென்னை சுற்றி மனைகளை வாங்கலாமா?

நிலத்தில் முதலீடு என்பது கொஞ்சம் நிதானித்து முடிவெடுக்க வேண்டிய விஷயம். ஏனென்றால், நிலத்தை உங்களின்




தேவைக்கேற்ப எல்லா காலத்திலும் உடனடியாகக் காசாக்க முடியாது. கடந்த ஐந்து வருடங்களில் நிலத்தின் விலை மிக அதிகமாக அதிகரித்திருக்கும் விதத்தைப் பார்க்கும்போது, இதேபோன்ற ஒரு லாபத்தை (அதாவது இன்றைய விலையில் இருந்து மற்றுமொரு அதிவேகமான விலை ஏற்றத்தை) இனிவரும் ஐந்து முதல் பத்து வருட காலத்தில் நிலம் கொடுக்குமா என்பது கேள்விக்குறி. இன்றைய விலை நிலவரத்தை மனத்தில் கொண்டால் தங்களின் உபயோகத்துக்குத் தேவையான அளவு நிலத்தில் முதலீடு செய்வது மட்டுமே சரி.

அவ்வைநாயகம், சென்னை

ஷேர், மியூச்சுவல் பண்டு முதலீடு செய்வதில் எது பாதுகாப்பானது... சிறப்பானது?

உங்களுக்குச் சந்தையில் இருக்கும் அனுபவத்தின் அளவைக் கொண்டும், உங்களால் சந்தை முதலீடுகள் குறித்த விஷயங்களுக்காக ஒதுக்க முடிகின்ற நேரத்தின் அளவை வைத்துமே இந்தக் கேள்விக்கான விடை அமையும். சந்தை பற்றி ஒன்றுமே தெரியாது என்றோ அல்லது எனக்கு அதற்கெல்லாம் நேரமே கிடையாது என்று சொல்பவராகவோ இருந்தால் மியூச்சுவல் பண்ட் தான் சிறந்தது. சந்தையின் நடைமுறை விஷயங்களில் நீங்கள் திறமை வாய்ந்தவராகவும் மற்றும் உங்களால் இதற்கென கணிசமான நேரம் ஒதுக்க முடியும் என்றால் மட்டுமே பங்கு முதலீடுகளில் நேரடியாக இறங்கலாம். சந்தை குறித்த விஷய ஞானங்களில் நீங்கள் வெகுசுமார் தான் என்றால், பேசாமல் மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்துவிடுவது மிகமிக நல்லது.

உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பலாம். kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.




ஞாநி

எல்லோர் ரத்தமும் அயோத்தியில் ஒட்டும்!

நான் அயோத்திக்கு பத்திரிகையாளர் மாநாட்டுக்காக 27 வருடங்களுக்கு முன்னர் சென்றேன். அயோத்தி-ஃபைசாபாத் இரட்டை நகரம். ஃபைசாபாத் ரயில் நிலையத்தில் இறங்கியதுமே காவி, தாடி, சடை இருந்த நிறைய பண்டாரங்கள் சூழ்ந்துகொண்டார்கள். (தமிழில் பண்டாரம். ஹிந்தியின் பண்டா. அதாவது பூசாரி) ராமர் பிறந்த இடத்தைக் காட்டுவதாகச் சொல்லி கையைப் பிடித்து இழுத்து வற்புறுத்தினார்கள். நண்பர்கள் சிலர் அவர்களுடன் ராமர் பிறந்த இடத்தைக் காணச் சென்றார்கள்.

ஒவ்வொரு பண்டாரமும் தனித் தனியே காட்டியது வெவ்வேறு இடம். நம் ஊர் நடைபாதை கோயில் சைசில் இருக்கும் குட்டிக் கோயிலைக் காட்டி இதுதான் ராமர் பிறந்த இடம் என்று ஒவ்வொரு பண்டாரமும் சத்தியம் செய்து தட்சிணையும் வாங்கிக்



கொண்டார்கள். ஒரு பண்டாரம் கூட நண்பர்களை, பாபர் மசூதி இருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லவில்லை. இதுதான் 1983ல் அயோத்தி நிலைமை. அயோத்தியை உள்ளடக்கிய ஃபைசாபாத் எம்.பி. தொகுதியில் 80கள் வரை தொடர்ந்து ஜெயித்தவர்கள் காங்கிரசார், கம்யூனிஸ்ட்கள்.

கடவுளான ராமர் மனிதராகப் பிறந்து வாழ்ந்தது புராணங்களின்படி சுமார் எட்டு லட்சம் வருடங்களுக்கு முன்பு. ஆனால் அயோத்தியில் மனிதர்கள் குடியேறியே 2800 வருடங்கள்தான் ஆகின்றன. எனவே ராமர் பிறந்த இடம் இந்த அயோத்தி என்பதும், இந்த அயோத்தியில் இந்த இடத்தில் தான் என்பதும் நிரூபிக்கக் கூடிய விஷயங்களே

ஓ பக்கங்கள்

அல்ல. முழுக்க முழுக்க நம்பிக்கை மட்டுமே சார்ந்தவை. இதைப் பற்றி எந்த நீதிபதியும் தீர்மானமாகத் தீர்ப்பு வழங்கவே முடியாது. வழங்கினாலும், அது அவர் நம்பிக்கையோடு சம்பந்தப் பட்டதென்றுதான் பார்க்கவேண்டும். சட்ட சாட்சியங்களுக்கு அது அப்பாற் பட்டது.

எந்தத் தொழிலில் இருப்பவர்களும் அவரவர் நம்பிக்கைகளுடன்தான் இருக் கிறார்கள். அதில் சிலர், ஓய்வு பெற்ற பிறகு ஏதேனும் ஓர் அமைப்பில் சேர்கிறார்கள். அது அவர்களின் நம்பிக்கைகளின் தொடர்ச்சி. யாருக்கும் திடீரென்று 60வது வயதில் ஒரு கொள்கைப்பிடிப்பு வந்துவிடுவதில்லை. சுமார் 25,30 வயதிலிருந்தே



* நரசிம்மராவ்



உருவான ஈர்ப்பு அடுத்த சில வருடங்களில் வலுவடைந்து விடுகிறது. பின்னர் சூழலுக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப சிலர் நேரடி அரசியலில் ஈடு படுகிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரான நய்யார் தான் அயோத்தி பிரச்சினை சுதந்திர இந்தியாவில் 1949 டிசம்பரில் முற்றி வெடிக்க உதவியவர்.

அது சுதந்திரம் பெற்றபோது செய்த பிரிவினை யால் உருவான ஹிந்து முஸ்லிம் கலவரங்களால் பேரிழப்புகள் ஏற்பட்ட நேரம். காந்தி ஒரு ஹிந்து மத வெறியனால் கொல்லப்பட்டு 23 மாதங்கள்தான் ஆகியிருந்தன. நேருவின் அரசு வட இந்தியாவில் தொடர்ந்து மத மோதல்கள் நிகழா மல் தடுக்கப் பெரும் கவனம் செலுத்த வேண்டி யிருந்த நேரம்.

டிசம்பர் 23ந்தேதி மாலைத் தொழுகை முடிந்தபிறகு, நள்ளிரவு பாபர் மசூதிக்கு ஐம்பது பேர் கொண்ட கும்பல் வந்து அதன் திண்ணையில் ராமர், சீதை, லட்சுமணர் சிலைகளை வைத்துவிட்டுச் சென்றது. அங்கிருந்த 12 போலீசார் அதைத் தடுக் கவில்லை. இதை மத்திய அரசுக்குத் தெரிவித்த மாவட்ட மாஜிஸ்ட்ரேட் (கலெக்டர்) கே.கே.நய்யார், மசூதியை இழுத்துப் பூட்டி இனி அங்கே தொழுகை நடக்கக்கூடாது என்று உத்தரவிட்டார். ஆனால் அத்து மீறி வைக்கப்பட்ட சிலைகளை எடுக்க வில்லை. இது பற்றிக் கவலைப்பட்ட பிரதமர் நேரு, மாநில முதல்வர் ஜி.பி. பந்த்திடமும் உள்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேலிடமும் தம் கவலைகளைத் தெரிவித்தார்.

அப்போது நய்யார் உடனடியாக சிலைகளை அகற்றிவிட்டு அத்து



* அத்வானி

மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருந்தால், வரலாறு வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஆனால் அது நய்யார் விரும்பிய வரலாறல்ல. பதவியை ராஜினாமா செய்துவிட்டு நய்யார் ஜனசங்கம் கட்சியில் சேர்ந்து அதன் எம்.பி. வேட்பாளராகி ஜெயித்தார். ஜனசங்கம் போலவே ஆர்.எஸ்.எஸ்சின் ஆசி பெற்ற இன்னொரு அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற அசோக் சிங்கால், அயோத்தி இருக்கும் உத்தரப் பிரதேச மாநிலத்தின் காவல் துறையின் தலைவராகப் பணியாற்றியவர். ஓய்வு பெற்றதும் பரிஷத் தலைவரானார்!

பாபர் மசூதியை இடித்து ராமர் கோயில் கட்டுவதற்கான இயக்கம்,1940களிலிருந்து ஆர்.எஸ்.எஸ் வழிகாட்டுதலில் சுமார் 40 வருட காலம் வெளியில் தெரியாமல் மௌனமாக இயங்கி வந்திருக்கிறது. ஆட்சி அதிகார மீடியா அமைப்புகளில் ஊடுருவியிருக்கும் அனுதாபிகளின் உதவியுடன், ஒவ்வொரு அடியாக இது எடுத்து வந்திருக்கிறது. உ.பி.மாநில ஆட்சியை பாரதிய ஜனதா பிடித்த பின்னர், பகிரங்கமாகச் செயல்பட்டு அத்வானி தலைமையில் கல்யாண்சிங், நரசிம்மராவ் உதவியுடன் மசூதியை இடித்து சிலைகளை தாங்கள் விரும்பிய இடத்திலேயே வைத்துவிட்டனர். இனி கோயில் கட்டுவதுதான் அவர்களைப் பொறுத்தமட்டில் பாக்கி இருக்கும் விஷயம்.



அசோக் சிங்கால்

அதற்கு முழு நிலமும் தேவை. இப்போது அலகாபாத் உயர் நீதிமன்ற பெஞ்ச் அளித்துள்ள தீர்ப்பு, மூன்றில் இரு பங்கு நிலத்தை ராமர் கோவில் ஆதரவு அமைப்புகளுக்கு சட்டப்படி அளிக்கிறது. இனி வரும் மாதங்களில் ஆர்.எஸ்.எஸ் செய்யப்போகும் பிரசாரம் என்னவாக இருக்கும் என்று எளிதாக யூகிக்கலாம். 1. நீதிமன்றமே அந்த இடம் ராமர் பிறந்த இடம்தான் என்று சொல்லிவிட்டது. 2. அங்கே இருந்த பிரும்மாண்டமான ராமர் கோயிலை இடித்துத்தான் பாபர் மசூதி கட்டினார் என்று ஆதாரம் இருப்பதாகவும் நீதிமன்றம் சொல்லிவிட்டது. 3. எனவே மறுபடியும் பிரும்மாண்டமான ராமர் கோயிலைக் கட்ட வசதியாக தங்களுக்கு தரப்பட்ட மூன்றில் ஒரு பங்கு நிலத்தையும் முஸ்லிம்கள் தாமாகவே முன்வந்து கொடுத்து, மத நல்லிணக்கத்தை வளர்க்க வேண்டும். இதுதான் நடக்கத் தொடங்கியுள்ள, வலுவடையப்போகிற பிரசாரம்.

மசூதி இருந்த இடம்தான் ராமர் பிறந்த இடம் என்று மூன்று நீதிபதிகளில் ஒருவரான தர்மவீர் சர்மா அடித்துச் சொல்லியிருக்கிறார். மீதி இரு நீதிபதிகளும் அது ஒரு நம்பிக்கை என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிபதி சர்மாவோ, தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு, 'ராமராகப் பிறந்தவர் ஒரு கடவுள். தெய்வாம்சம் என்பது எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பது. எந்த இடத்திலும் யாரும் அதற்கு வடிவம் கொடுத்துக் கொள்ளலாம். அல்லது

வடிவம் கொடுக்காமலே கூட வழிபட்டுக் கொள்ளலாம்' என்று ஒரு குழப்பமான வாக்கியத்தை சொல்லிவிட்டு, மசூதி இருந்த இடம்தான் ராமர் பிறந்த இடம் என்று சொல்லிவிடுகிறார்.

இதன்படி கருணாநிதி நகரில் ஐயப்பன் கோயில் வாசலில் ஒரு வருடமாக நாற்சந்தி நடைபாதையை ஆக்ரமித்து உண்டியல் சகிதம் உருவாகி வரும் கோயிலை, தப்பித் தவறி நாளைக்கு மாநகராட்சி உச்ச நீதி மன்றத் தீர்ப்பின்படி இடித்தால், ஆக்ரமித் தவர் அலகாபாத் தீர்ப்பை மேற்கோள் காட்டி எங்கும் இருக்கும் தெய்வாம்சத்தைத் தான் எந்த இடத்திலும் எந்த வடிவத்திலும் நிறுவி வழிபடலாம் என்று சட்டப்படி வாதாடி, வெற்றி கூடப் பெறமுடியும்.

அனுமன் பக்தரான நீதிபதி சர்மா, திருமணமாகாதவர். தன் உணவை தானே சமைத்துச் சாப்பிடும் ஆசாரமான பழக்கம் உடையவர். தன் நம்பிக்கைகளுக்கேற்ப அவர் தீர்ப்பு வழங்கியிருக்கிறார் என்றுதான் பார்க்க முடியும். நிலத்தை மூவருக்கும் பிரித் துத் தருவதையே அவர் ஆதரிக்கவில்லை. இன்னொரு நீதிபதி அகர்வால், முஸ்லிம் களுக்கு மூன்றில் ஒரு பங்கேனும் தர வேண்டும் என்கிறார். இன்னொரு நீதிபதி யான உல்லா கான், இஸ்லாமியர். ஹிந்து நம்பிக்கைப் பிரச்னைகளுக்குள்ளேயே தான் போக விரும்பவில்லை, இதை ஒரு சிவில் சூட்டாக மட்டுமே கருதுவதாகச் சொல்லி யிருக்கிறார். ஆனால் தீர்ப்பில் இதர இஸ்லா மியர்களுக்கு ஒரு நீண்ட வேண்டுகோளை, முகமது நபிகள் வாழ்க்கையிலிருந்து மேற் கோளுடன் வைக்கிறார். வழக்கில் இருக்கும் பிரச்னைக்கு சம்பந்தமே இல்லாத பகுதி இது.

பாபர் ஹிந்துக் கோயிலை இடித்தார் என்பதற்கு எந்த சரித்திர ஆதாரமும் இல்லை. இந்திய தொல்லியல் துறையின் அறிக்கையை மட்டுமே நீதிபதி சர்மா ஆதாரம் காட்டுகிறார். பி.ஜே.பி மத்தியில் ஆட்சியில் இருந்தபோது

கோட்டூர்புரம் சொகுசு நூலகத்தில் வெடிப்பொருள் வெடித்ததை ஒட்டி விசாரித்ததில் அங்கிருக்கும் கட்டடத் தொழிலாளர்கள் எல்லாம் வட மாநிலத்தி லிருந்து வந்தவர்கள் என்று தெரிந்ததாம். ஏன் சட்டசபை, மேம்பாலம், நூலகம் எதைக் கட்டினாலும் கட்டடத் தொழி லாளர்களை அரசு இறக்குமதி செய் கிறது? தமிழ் படித்தால் அரசு வேலை. ஆனால் கட்டடம் கட்டத் தெரிந்த தமிழ ருக்கு இங்கேயே வேலை தரமாட்டீர்களா?



இந்த வாரக் கேள்வி!

அளித்த அந்த அறிக்கையின் பல ஓட்டைகளை அப் போதே இதர தொல்லியல் அறிஞர்கள் விமர்சித்திருக்கிறார்கள். ஹிந்துக்கள் மனம் புண்படும்; எனவே நீ மாட்டுக்கறி சாப்பிட வேண்டாம் என்று மகன் ஹுமாயுனுக்கு உயிலில் எழுதிய பாபர், ஹிந்துக் கோயிலை இடித்திருப்பாரா என்பதே கேள்விக்குரியது தான். இடித்திருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். சில விதி விலக்குகளைத் தவிர, ஒவ்வொரு மன்னனும் தன் நம்பிக் கைக்கேற்ப ஒரு மதத்தை ஆதரித்து இன் னொரு மதத்தினரை துன்புறுத்தினான் என்பதுதான் நம் முழு மன்னராட்சி வரலாறு.

கோயிலை இடித்து மசூதி கட்டுவது இஸ்லாத்துக்கு விரோதமானது என்பதால், கட்டப்பட்டது மசூதியே அல்ல என்று ஒரு விசித்திரமான வாதத்தையும் நீதிபதி சர்மா சொல்லுகிறார். இன்னொருத்தர் வழிபாட்டு இடத்தை இடிப்பது இஸ்லாமிய நெறி களுக்கு மட்டும்தான் முரணானதா? ஹிந்து, கிறித்துவ, பௌத்த மதங்களெல்லாம் அதை ஆதரிக்கின்றனவா? ஏனென்றால் இப்போது மறு படியும் ராமர் கோயிலைக் கட்டுவதற்கு, வழிபாடு நடத்து வந்த மசூதிதானே இடிக்

கப்பட்டிருக்கிறது? இது ஹிந்து மதக் கோட்பாட்டின்படி சரி என்று நீதிபதி சொல்வதாகப் பொருள் கொள்ளமுடியுமா? எந்த மத நெறிப்படியும் இன்னொரு மத வழிபாட்டிடத்தை இடித்தோ சிதைத்தோ தங்கள் வழிபாட்டிடத்தை கட்டக் கூடாது என்றால், இந்தியாவில் எத்தனை கோயில்கள், மசூதிகள், தேவலாயங்கள் மிஞ்சும்?

பூரி ஜகந்நாதர் ஆலயமே பௌத்த விஹாரத்தை இடித்துக் கட்டப்பட்டதுதான் என்று சுவாமி விவேகானந்தரே சொல்லியிருக்கிறார். பூரியில் மட்டுமல்ல, காஞ்சிபுரத்தில் இருக்கும் ஆலயங்கள் பலவும் முன்னர் பௌத்த விஹாரங்களாக இருந்தவைதான் என்பதற்கு தெளிவான சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன. சிருங்கேரியில் ஆதி சங்கரர் மடம் கட்டிய இடம் புத்த விஹாரத்தை இடித்துத்தான். ராஜராஜ சோழன் இலங்கையில் சிங்களர்களை வென்றதும், அங்கிருந்த புத்த விஹாரங்களை இடித்து, சைவக் கோயில்களாக மாற்றினான் என்பதும் சரித்திரம்தான். இனி பௌத்தர்கள் இயக்கம் நடத்தி இவற்றையெல்லாம் இடித்து மறுபடி பௌத்த விஹாரங்களாக ஆக்க வேண்டும் என்று நீதிமன்றத்துக்குப் போனால், சர்மாவின் முன்மாதிரித் தீர்ப்பின்படி இடிக்க ஒப்புக் கொள்ள வேண்டி வரும்.

இது ஒரு சிவில் வழக்கு. இந்த நிலம் எங்களுக்குத்தான் சொந்தம் என்று மூன்று பேர் கோருகிறார்கள். யாருக்குச் சொந்தம் என்று தீர்ப்பு தரவேண்டும். இதை விட்டு விட்டு தேவையற்ற விஷயங்களுக்குள் எல்லாம் தலையை நுழைத்து, குழப்பத்தையும் தொடர்ந்து இன்னும் 50 வருடங்களுக்கு மோதலையும் உருவாக்கக்கூடிய ஆபத்தான தீர்ப்பே அலகாபாத் தீர்ப்பு.

நான் நீதிபதியாக இருந்தால், இந்த நிலம் எந்த தனியாருக்கும் தனி அமைப்புக்கும் சொந்தமானதில்லை என்பதுதான், என் தீர்ப்பாக இருக்கும். வெவ்வேறு ஆட்சிக் காலத்தில் அந்தந்த ஆட்சியாளரின் விருப்பு வெறுப்புக்கேற்ப வழங்கப்பட்டவற்றை, ஜனநாயக ஆட்சி பொருட்படுத்த வேண்டியதே இல்லை. மொத்த நிலமும் இன்றைய குடியரசுக்குரியது. அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிப்பது இந்திய அரசின் பொறுப்பு என்று தீர்ப்பளிப்பேன்.

> **எல்லா இந்தியர்களுக்கும் மொழி, சாதி, மதம், இனம் கடந்து பயன்படக்கூடிய பொது மருத்துவமனையை அங்கே கட்டுங்கள். எல்லோர் ரத்தமும் அங்கே ஓடட்டும்.**

அரசுக்கு ஆலோசனையும் சொல்லுவேன். எல்லா இந்தியர்களுக்கும் மொழி, சாதி, மதம், இனம் கடந்து பயன்படக்கூடிய பொது மருத்துவமனையை அங்கே கட்டுங்கள். எல்லோர் ரத்தமும் அங்கே ஓடட்டும் - இன்னொருவருக்குப் பயனுள்ள விதத்தில், ரத்த தானமாக. அல்லது (எனக்கு அணு குண்டில் நம்பிக்கை இல்லாவிட்டாலும் பிரச்னைக்கு தீர்வாக), அங்கே பொக்ரான் - 3 அணு வெடிப்பு சோதனையை நடத்துங்கள். எந்த தேச பக்தரும் ஆட்சேபிக்கவே மாட்டார்கள். சோதனைக்குப் பின் ஒரு பயலும் அந்த நிலத்தின் பக்கமே போக மாட்டான். கடவுளை விட கதிர்வீச்சுக்குத்தான் அதிகம் பயப்படுவார்கள்!

மேற்படி கட்டுரைக்காக இரண்டுமே எனக்குத்தான் அதிகம் வந்து சேரும் என்பதால், இந்த வாரம் இரண்டும் எனக்கே!

இந்த வாரத் திட்டும், பூச்செண்டும்!




நாம் பூங்காவில் அமர்ந்திருந்த பொழுதில்,
பூக்களைப் பறிக்காதீர்கள்
அறிவிப்புப் பலகை பார்த்து
என் மீதிருந்து
கைகளை விருட்டென எடுப்பதுபோல்
பாவனை செய்தாய்.
நீ அறிவாயோ?
பறிக்காமலே வீழ்ந்து கிடக்கிறது
உன் மடியில் ஒரு பூ!

- தமிழ் மணவாளன்

இன்னும் ஒரு சதுர அங்குலம் பெரிதாகி விட்டால் பேருந்து என்று பெயர் பெற்றுவிட சாத்தியமுள்ள காரில் வந்து இறங்கினான் சதீஷ். மஞ்சள் நிற முழுக்கைப் பட்டுச் சட்டையும் வெள்ளைப் பேண்ட்டும் அணிந்திருந்தான்.

வே. எழிலரசு



கழுத்திலும், கைகளிலும், விரல்களிலும் 'தங்கம்' ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அலங்காரம் ஏதுமற்ற சிகை, ஷாம்பு குளியலைச் சிபாரிசு செய்து கொண்டிருந்தது.

மகளிர் விடுதி வாசலில் நின்றிருந்த 'க்ரூ' சட்டென்று இயங்கத் தொடங்கியது. ஜீன்ஸ் பேண்ட்டுக்கும் சட்டைக்கும் இணைப்பு போல இடுப்பில் ட்ரான்ஸ்மீட்டரைக் கட்டியிருந்த அந்தச் சின்னப் பெண் காற்றில் தன் கிராப் தலை அலைபாய ஓடிவந்து, சதீஷுக்கு காலர் மைக்கைப் பொருத்தி, ஒளிப்பதிவாளர் ஜோசஃப் பார்க்க, தன் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்து விட்டு, டிஜிட்டல் வீடியோ கேமராவைப் பார்த்தபடி, கையில் மூவ்மெண்ட் மைக் எனச் சொல்லப்படும் ஆர்.எஸ். மைக்கைப் பிடித்தபடி, ''நமது நேயர்களுக்காகத் - தென்னிந்திய கல்லூரிகளில் தேர்தல் - தொகுப்பும் ஆவணமுமாக உங்களின் முன்னே விரியப் போகிறது. உங்களுக்காக என்.டி.டி.வி.யின் பிரத்யேக படக் குழுவுடன் சென்னை



காதல் கேம்பஸ் 4

காதல் + கலாட்டா + கலக்கல் தொடர்கதை

யிலிருந்து ஜனனி'' - என்று அழகான ஆங்கிலத்தில் மொழிந்தாள். நேற்று பிரசவ வார்டில் ஜனித்த குழந்தை தானாக ஆட்டோ பிடித்து வந்துவிட்டது போலிருந்தாள் ஜனனி.

டி.வி.காம், மகளிர் விடுதி முகப்பை இலக்காக்கிச் சடாரெனத் திரும்பியது. அகிலா தலைமையில் திரண்டிருந்த பெண்கள் ஜோராகக் கை தட்டினார்கள். 'ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்' என சவால் விடுவதுபோல, நிஷா விசிலடித்தாள். இதற்கு முந்தைய வாக்கியத்தின் போதே பைக்குகளில் வந்து



இறங்கியிருந்த சதீஷின் தோழர்களும் விசிலுக்குப் பதில் மரியாதை செய்தார்கள். விசில்களால் ஒரு ஜுகல்பந்தி நடக்க, அந்த விசில் இசைக்கு ஏற்ப நிஷாவும் அகிலாவும் சின்னதாக ஓர் கூர்ஜர நடன அசைவைக் கொடுத்தார்கள். விசிலோசை மேலும் அதிகரித்தது. நடனமாடியபடியே சதீஷை நோக்கி நகர்ந்த அகிலா, கிட்டத்தில் வந்து ''சதீஷ், இங்க எடுக்கப்போறது நகைக்கடை விளம்பரப் படம் இல்ல'' என்றாள்.

''கழட்டிடவா''

''வேணா நல்லாத்தான் இருக்கு''

சதீஷுக்கும் அகிலாவுக்கும் மையத்தில் வந்து நின்ற ஜனனி மீண்டும் பேசத் தொடங்க, விசில் மழை ஓய்ந்தது.

''உலகத்தில் மிகப்பெரிய ஜனநாயக நாடான நமது துணைக்கண்டத்தில் நடைபெறும் பொதுத் தேர்தல்களை நகலெடுப்பதாகவே கல்லூரித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. அரசியலில் நுழைய விரும்புகின்ற மாணவர்கள் கல்லூரித் தேர்தல்களில் ஒத்திகை பார்த்துக் கொள்கிறார்கள்.'' இப்போது கேமரா உயர சென்றது. ''மாணவர்களோடு இந்திய அரசியல் எல்லாக் காலத்திலும் இணைந்தோ அல்லது முரண்பட்டோ நிகழ்ந்து வந்திருக்கிறது. இதைத் தொடங்கி வைத்தவராக, நாம் நமது தேசப்பிதா காந்தியடிகளைச் சொல்லலாம்.'' ஜனனி உச்சத்தில் நின்ற கேமராவைப் பார்த்தபடி சொன்னாள். ''ஆம். 1920-ல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு எதிராகத்

''நம்ம இன்ஸ்பெக்டருக்கு 'நியூமராலஜி'ல அசைக்க முடியாத நம்பிக்கையா... எப்படி?''

''அவர் பிள்ளைகளைக்கூட அவர் '602', '704'ன்னுதான் சொல்லிக் கூப்பிடுவார்!''

- வெ. சீதாராமன்

தொடங்கப்பெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில், ஆங்கிலேயர் நடத்தும் பள்ளிகளுக்கு உங்கள் குழந்தைகளை அனுப்பாதீர்கள் என்றார் காந்தி. அப்போது கல்லூரி மாணவர்களும் தங்கள் கலாசாலைகளை விட்டு வெளியேறினார்கள்.'' கேமரா, திரண்டிருந்த மாணவர்களின் மத்தியில் இருந்த ஜனனியைக் காட்டியது. ''தேசத்தின் விடுதலைக்காக அன்று மாணவர்களின் அரசியல். இன்று எந்த விடுதலைக்காக இந்த அரசியல்?'' என்று பேசியபடியே ஜனனி, அப்பொழுது வந்து சேர்ந்த உதய்குமாரை நோக்கி ஓடி தனது மைக்கை நீட்டினாள்.

உதய்குமாரோடு வந்திருந்த மாணவர்களில் முதலாண்டு மாணவன் ராக்கெட் எட்வின் தன் வகுப்புத் தோழி வித்தியாவைப்

பார்த்து 'ஹாய்' என்றான். அவளும் விரல்கள் அசைக்க, துணிவு பெற்று அவன் அருகே வந்து ''விந்தியா உன் ரூம் எது?''

''ஃபர்ஸ்ட் ஃப்ளோர்ல.''

''என்னை இன்வைட் பண்ண மாட்டியா?''

''ரிசப்ஷனைத் தாண்டி பாய்ஸுக்கு அனுமதி இல்லை.''

''சே! இந்தச் சுதந்திர நாட்டில, இதுக்குக்கூட சுதந்திரம் இல்லை... என்ன தேசம்டா இது?''

''அதோ மைக் புடிச்சுப் பேசினாளே அவள கேளு... ஜென்மத்துக்கும் மறக்காத மாதிரி நம்ம தேசத்தைப் பத்திச் சொல்லுவா.''

''சரி... சரி.. விடு இந்தக் களேபரத்துல யாரும் நம்மள கவனிக்கமாட்டாங்க... சட்டுன்னு போய் உன் ரூமைப் பாத்துட்டு வந்துடலாமே.''

''ஏன் உனக்கு அவ்வளவு ஆர்வம்?''

''லேடீஸ் ஆஸ்டல் ரூமை பாக்கணும்னு ரொம்பநாளா ஒரு க்யூரியாசிடி.''

''ஏன் சிஸ்டர்ஸ் இல்லையா?''

''ஆரம்பிச்சிட்டியா... சே...''

எட்வின் அலுத்தபடி மீண்டும் கூட்டத்துக்குள் தன்னைத் திணித்துக் கொண்டான்.

பெண்களின் வாக்குகள் தனக்கு ஆதரவாக இருப்பதால், தானே வெற்றி பெற முடியும் எனச் சொன்ன உதய்குமாரிடம் ஜனனி காரணம் கேட்டாள்.

''அகிலாதான் காரணம்'' என உதய்குமார் சொல்ல, ஜனனி மைக்கை நீட்டியபடி அகிலாவை நோக்கி வந்தாள். அகிலா பரபரப்படைந்தாள். இந்தக் கணத்தைத்தான் அவள் எதிர்பார்த்திருந்தாள். நேற்று தனது அறையில் நிஷாவிடமும், வசுமதியிடமும் அதைத்தான் சொல்லியிருந்தாள். சதீஷின் திட்டத்தை முறியடிப்பதாகச் சில முயற்சிகள் செய்துள்ளதைப் பற்றியும், அந்த முயற்சிகள் வெற்றி பெற்றதையும் சொன்ன அகிலாவை வியப்பாகப் பார்த்தார்கள் நிஷாவும், வசுமதியும்.

சதீஷிடம் பேசியதையும், அந்த உரையாடலைப் பதிவு செய்துவிட்டதையும் கூட சொன்னாள். அவர்கள் கெஞ்சிக் கேட்க, தன் ஆப்பிள் ஃபோனை, ஆன் செய்து ஸ்பீக்கரையும் ஒலிக்க வைத்தாள்.

சிவப்புப் புள்ளி ஒளி ஒளிர்ந்தது.



எதிர்முனையில் 'கிளிமஞ்சாரோ' என்று பாடல் ஒலிக்க, பாதியில் சதீஷின் கரகரத்த 'அல்லோ' கேட்டது.

''சதீஷ், நான் அகிலா பேசறேன்.''

கனத்த மௌனத்தின் குறு நொடி.

''என்ன என்னை ஞாபகமில்லையா?''

''உங்களை மறக்கமுடியுமா, மிஸ் எதிர்க்கட்சி.''

டெசிபல் கூடிய குரல் ஒலித்தது.

''சதீஷ் நான் உனக்கு எதிர்க்கட்சிதான். எதிரிகட்சி இல்ல.''

''சந்தோஷம்.''

''சதீஷ் உன்னைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும். உனக்கு நம்ம காலேஜ் எலக்ஷனை

''என்னதான் தன் பிள்ளை மக்கா இருந்தாலும் ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணியதுக்கு எல்லாம் கேக் கொடுப்பது ரொம்பா ஃபைவ் மச்சா தெரியுது!''

- அமெரிக்கா ராஜா

விட வரப்போற ஜெனரல் எலக்ஷன் மேல தான் கண்.''

''சரி அதுக்கென்ன இப்போ?''

''சதீஷ், இந்த காலேஜ்ல ஜெயிச்சுட்டா நீ ஹீரோ''

''அப்போ தோத்துட்டா ஜீரோவா?''

''இல்ல. தோத்துட்டாலும் நீ தான் ஹீரோ?''

''என்ன சொல்ற?''

''சதீஷ் நாளைக்குக் காலைல நம்ம காலேஜ் எலக்ஷனை ஷூட் பண்ண என்.டி.டி.வி.யிலிருந்து வர்றாங்க. எங்க ஹாஸ்டல்ல இருந்து நிலே ஆரம்பம்.''

மீண்டும் மௌன குறு நொடி. சதுரங்கத்தில் சதீஷின் காய்கள் வெட்டுப்படும் ஓசையை விழுங்கிய மௌனம்.

''என்ன சதீஷ் லைன்ல இருக்கியா?''

''உம்''

''சதீஷ் இது உனக்கு நல்ல சான்ஸ். காலைல ஹாஸ்டல் வாசலுக்கு வந்துரு. நேஷனல் டெலிகாஸ்ட். ஓர் எதிர்கால மத்திய அமைச்சருக்கு இமேஜ் பில்ட் அப் எவ்ளோ முக்கியம்னு உனக்குத் தெரியும்னு நம்பறேன்.''

சதீஷ் மீண்டும் யோசிப்பது, சிவப்பு ஒளிப் புள்ளி ஓசையின் மையில் தெரிந்தது.

''என்ன சதீஷ் லைன்ல இருக்கியா?''

சதீஷின் கரகரத்த குரல் மீண்டும் ஒலித்தது. ''லைன்லதான் இருக்கேன்.'' ஒரு சின்ன இடைவெளிவிட்டு மீண்டும் தொடர்ந்தான். ''இப்போ சொன்ன லைன் டெலிஃபோன் லைன் மட்டும் இல்லை அகிலா. நான் கொடுத்த லெட்டரை நீ மறு பரிசீலனை பண்ண முடியுமான்னு...?'' சட்டென்று ஃபோனை கட் செய்ய, சிவப்பு ஒளிப் புள்ளி அணைந்து போனது.

நிஷாவும் வசுமதியும் அதிர்ந்து போயிருந்தார்கள்.

''ஏய், சதீஷ் கூடவா லெட்டர் கொடுத்திருக்கான்?''

பெருமிதம் வெளிப்படையாகத் தெரிய அகிலா தலை அசைத்தாள்.

''நீ ரெஸ்பாண்ட் பண்ணலையா?''

''ம்''

''என்ன பண்ண?''

''அவன் ஒழுங்கா தமிழ்லயே எழுதியிருக்கலாம். தப்புத் தப்பா இங்கிலீஷ்ல எழுதியிருந்தான். அதான் ஒரு ரன் அண்ட் மார்ட்டின் வாங்கி அன்புடன்னு எழுதி புக்போஸ்ட் பண்ணிட்டேன்.''

நிஷா, அகிலாவை இழுத்துச் சொன்னாள், ''ஏய் நிறைய, போட்டி இருக்குது... இது நல்லதுக்கில்ல... உடனே உதய்கிட்ட உன் லவ்வைச் சொல்லிடு.''

அகிலா தீர்க்கமாக அவர்களைப் பார்த்தபடி சொன்னாள்.

''நாளைக்குச் சொல்லப் போறேன்.''

எப்படி?''

''தனியா சொல்லுறதுக்குத் தைரியம் வரலை. அதனால எல்லோர் முன்னாலயும் சொல்லப் போறேன்.டி.வி. 'க்ரூ'ல கேப்பாங்க... நீ ஏன் உதய்குமாரை ஆதரிச்சு பிரச்சாரம் பண்ணன்னு? அப்போ நான் சொல்லுவேன். பிகாஸ் ஐ லவ் உதய்குமார்னு சொல்லுவேன்.''

இப்பொழுது ஜனனி மைக்குடன் அகிலாவை நோக்கி வந்து கொண்டிருக்க, நிஷாவும், வசுமதியும் சிலிர்ப்பை எதிர்நோக்கிய உணர்வுகளோடு - அகிலாவையே பார்த்தார்கள்.

(தொடரும்)



இப்பொழுது ஜனனி மைக்குடன் அகிலாவை நோக்கி வந்து கொண்டிருக்க, நிஷாவும், வசுமதியும் சிலிர்ப்பை எதிர்நோக்கிய உணர்வுகளோடு - அகிலாவையே பார்த்தார்கள்.

அருள்வாக்கு



பதுங்கியிருக்கிற ஆசை!

இப்போது வாழ்க்கையில் உங்களுக்கு நிம்மதியிருக்கிறதா? ஏதோ அப்பப்போ கொஞ்சம் சந்தோஷம், திருப்தி ஏற்பட்டாலும், ஒன்று மாற்றி ஒன்று ஏதோ இழுபறிச் சக்திகளிடம் மாட்டிக் கொண்டு சாந்தியில்லாமல் சிரமப்பட்டுக்கொண்டே இருக்கும்படி தானே இருக்கிறது? 'ஆஹா' என்று, 'அக்கடா' என்று, 'நமக்குக் கவலையே இல்லை, பயமே வராது, துக்கமே வராது' என்றெல்லாம் சொல்லும்படியான உறுதிப் படுத்திய சாந்தியாயிருக்கிறதா? இல்லை யோல்லியோ?

இல்லை என்றுதான் பதில் சொல்வீர்கள்.

சரி, எதனால் இத்தனை சலனம், பறப்பு? இழுபறி, சிரமம் எதனால்?

இதை யோசித்தீர்களானால், யாராலும் க்ஷணம்கூடச் சும்மா இருக்காமல் ஏதாவது கார்யம் செய்துகொண்டே இருக்கத் தோன்றுவதாயும், இந்தக் கார்யங்களினால்தான் சாந்தியைக் குலைக்கிற எல்லாம் வந்து சேருவதாயும் தெரியும். கார்யமே இல்லாவிட்டால்தான் சாந்தி என்பது இரண்டும் இரண்டும் நாலு என்கிற மாதிரி எவருக்கும் தெரியும்.

'எதற்காகக் கார்யம்?' என்பது அடுத்த கேள்வி. இதை யோசித்துப் பாருங்கள். பார்த்தால் பலவிதமான ஆசைகளில் எதுவோ ஒன்றின் பூர்த்தியை முன்னிட்டுத்தான் ஒவ்வொரு கார்யமும் என்று புரியும்.

கோபத்தினாலோ மோஹத்தினாலோ வேறெந்த உணர்ச்சியினாலோ செய்கிற சகல கார்யங்களுங்கூட அந்த உணர்ச்சிகளுக்கெல்லாம் அடியிலே மூலமாகப் பதுங்கியிருக்கிற ஓர் ஆசையினாலேதான் என்று கொஞ்சம் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தால் புரிந்துவிடும்.

சரி, கார்யத்தை நிறுத்திவிடலாமா என்று பார்த்தீர்களானால், அது லேசில் சாத்யமில்லை என்பது தெரியும். ப்ரக்ருதி (நேச்சர்) ஒருத்தனை ஏதாவது கார்யத்தில் ஏவிக்கொண்டேதானிருக்கிறது என்று தெரியும்.

அதனாலேதான், சாஸ்திரம் இந்த ஸ்டேஜில் என்ன சொல்கிறதென்றால், 'கார்யம் செய்துவிட்டுப் போங்கள். ஆனால், ஆசை வாய்ப்பட்டுச் செய்வதைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஸ்வந்த ஆசைக்காகச் செய்வது என்றில்லாமல் உலக நலனுக்காகக் கார்யங்களைப் பண்ண ஆரம்பியுங்கள்' என்கிறது.

- ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

நினைவஞ்சலி
சுவரொட்டிகளில்
அந்தரத்தில்
தொங்குகின்றன
மண்ணில் விழாத
இரு கண்ணீர்த் துளிகள்

- நாணற்காடன்

அமர்ந்தவனும் போய்விட்டான்
சுமந்தவனும் போய்விட்டான்
அமர்ந்தவனின் செருக்கையும்
சுமந்தவின் வலியையும்
அசைபோட்டபடி
ஓய்ந்து கிடக்கிறது
பல்லக்கு.

- இரா.சிவசுப்பிரமணியன்

சாலைக் கிண்ணங்களில்
தேங்கிய மழை நீரில்
முகம் பார்த்தபடி

குதிகால் தூக்கி
தாவித் தாவி நீ செல்லும்போது

திருவிழாவில்
எங்கே தவறிவிடுவோமோ
என்ற பயத்தில்
விரலை இறுகப் பற்றி நடக்கும்
குழந்தை போல

உன் கட்டை விரல் பற்றி
உன்னோடு பயணிக்கிறது
செருப்பு!

- உழவன்



கோயிலில்
உன் பெயர் கொண்ட
எவருக்கு
அர்ச்சனை செய்தாலும்
வரம்
எனக்குக் கிடைத்து விடுகிறது!

- சிவபாரதி



காலி இருக்கைகளை நிரப்பும் காதல்!

நகரப் பேருந்தில்
நீ வரும்வரை
நான் காத்திருக்கும்
இருக்கை தவிர
காலி இருக்கைகள்
முழுவதும்
நிரம்பிக் கொள்கிறது
காதல்!

- சிவபாரதி

அவனைப் பற்றிய
அபிப்பிராய பேதங்களை
அடுக்கத் தொடங்கினேன்
இவனிடம்
சற்றும் எதிர்பார்க்காதபடி
இவன்
அவனாகியிருந்தான்.

- யாழி

குழந்தைக்குப் பிடிக்குமென்று
சாக்லெட், ஐஸ்க்ரீம், பபுள்கம்
எல்லாம் படையல் இலையில்
வைக்கிறாள்
அழுது கொண்டே...
அம்மா!

- கோமதி கோதண்டராமன்

மேஷம்

கடன் பிரச்னை தீரும். சுப காரியப் பேச்சுவார்த்தை நற்பலனை அளிக்கும். தூரதேச அழைப்பு வந்து சேரும். உடன்பிறப்புகளால் அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மன உளைச்சல் தீரும். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டு, வருவாய் மிகுதியாகும். சிலருக்குப் புதிய பணி கிட்டும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும்.

மிதுனம்

திருமணப் பேச்சு வார்த்தை பலனளிக்கும். திடீர் பிரயாணம் தேடி வரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். வீடு/மனை வாங்க சிறந்த தருணம். வர வேண்டிய நிலுவைகள் வந்து சேரும். நீண்டநாள் முடிவு பெறாமல் இருந்து வந்த வழக்கு வெற்றி அளிக்கும். சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

சிம்மம்

குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். எதிர்ப்புத் தொல்லை விலகும். கடன் பிரச்னை தீரும். திடீர் தனயோகம் கிட்டும். சுப நிகழ்ச்சிகள் கைகூடும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். வழக்கு வெற்றி அளிக்கும். கூட்டாளிகள் பிரிந்து செல்ல நேரிடும். வேலையில் நல்ல பெயர் கிட்டும். ஆரோக்கியம் பாதிக்காது. ராகு/ கேதுவை வழிபட்டு வர மனக் கவலை போகும்.

ரிஷபம்

மன சஞ்சலம் தீரும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். யாருக்கும் ஜாமீன் போடாமல் இருப்பது நல்லது. யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலில் உஷாராக இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. கூட்டாளிகள் விட்டு விலகிச் செல்வார்கள். ராகு/ கேது/சனி/ குருவை வழிபட்டால் நற்பலன் உண்டாகும்.

கடகம்

உடல்நிலை சீராகும். வீடு/மனை விற்பனை ஆகும். மனசாதுரியம் மிகுந்து காணப்படும். தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவீர்கள். பணவசதிக்குக் குறை இருக்காது. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். சிலருக்கு வேலை மாற்றம் உண்டாகும். கூட்டாளிகள் பிரிந்து செல்ல நேரிடும். ஆரோக்கியம் பாதிக்காது. ராகு/ கேதுவை வழிபட்டு வர மனக் கவலைபோகும்.

கன்னி

இன்னும் ஓரிரு வாரம் ரொம்பவும் பொறுமையுடன் செயல்பட்டு வந்தால் நற்பலனை எதிர்பார்க்கலாம். உடல்நிலையில் கவனம் தேவை. வேலையில் மேல் அதிகாரிகளின் எதிர்ப்புக்கு ஆளாகுவீர்கள். வழக்கு இழுபறி ஆகும். தாயுடன் பகை ஏற்படும். புதிய முயற்சிகளை சற்று தள்ளிப் போடுவது நல்லது. ராகு/கேது/குரு/சனியை வழிபட நற்பலன் உண்டாகும்.

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

10.10.2010 முதல் 16.10.2010 வரை

துலாம்

மனத்தில் சந்தோஷம் மிகுதியாகும். பிள்ளைகளால் நற்பலன் உண்டாகும். நீண்டநாள் வர வேண்டிய நிலுவைகள் வந்து சேரும். வீடு/மனை வழியில் ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். தேர்வில் நல்ல மதிப் பெண்கள் பெறுவீர்கள். சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

விருச்சிகம்

யாரிடமும் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. உடல் நலனில் கவனம் அவசியம். எதிர்ப்புகள் அதிகரிக்கும். வழக்கு தள்ளிப் போகும். வியாபாரத்தில் நல்ல வருவாய் ஏற்படும். புதிய தொழில் ஆரம்பிக்கும் போது கவனமுடன் செயல்படுவது நல்லது. கொடுக்கல், வாங்கலில் உஷார். நண்பர்களை விட்டு விலகி இருப்பது நல்லது. ராகு/கேதுவை வழிபட்டு வர சங்கடங்கள் தீரும்.

தனுசு

நல்ல பிரகாசமான வாரம். தொழில் துறையில் நல்ல திருப்பம் ஏற்படும். நீண்டநாள் நண்பர் ஒருவரால் நல்ல உதவி கிட்டும். சுபகாரியப் பேச்சு வார்த்தை பலனளிக்கும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சிலருக்கு இடம் மாற்றம் ஏற்படலாம். வீடு/மனை வாங்க நல்ல தருணம். கடன் பிரச்னைகள் முடிவுக்கு வரும். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. ராகு/கேது/சனியை வழிபட நற்பலன் உண்டாகும்.

மகரம்

சந்தோஷமான செய்திகள் காதுக்குக் குளிரூட்டும். பொன், பொருள், ஆடை, ஆபரணங்கள் சேரும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். உடல் நிலை பாதிக்காது. செலவுகள், சுபமானதாக இருக்கும். மனசஞ்சலம் தீரும். எதிர்ப்புகள் விலகும். மண்/மனை வாங்க நேரிடும். வர வேண்டிய நிலுவைகள் வந்து சேரும். தூர தேசப் பிரயாணம் தேடி வரும்.

கும்பம்

பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். எதிரிகள் தொல்லை இருக்காது. பணக் கஷ்டம் வராது. நீண்டகால கடன் சுமைத் தீரும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. குழந்தைகளால் சுபகாரியம் கைகூடும். வழக்கு சாதகமாக முடியும். வராத நிலுவைகள் வந்து சேரும். பணி உயர்வு உண்டாகும். புதிய வேலைவாய்ப்புத் தேடிவரும். சனி/குருவை வழிபட சங்கடங்கள் தீரும்.

மீனம்

உத்தியோகத்தில் இடம் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு குறையும். உடல்நிலையில் கவனம் செலுத்துவது நல்லது. மறைமுகத் தொல்லைகள் அதிகரிக்கும். நல்ல தகவல் வந்து சேரும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். மனக் குழப்பம் தீரும். வராத நிலுவைகள் வந்து சேரும். சுபச்செலவு ஏற்படும். ராகு/கேது/சனி/குருவை வழிபட நற்பலன் உண்டாகும்.

வாசகர்களே! திருமண ஃபோட்டோ மட்டுமல்ல. நீங்கள் பெரிதும் ரசிக்கும். பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'முன்று எழுதி அனுப்புங்க...

ஆஹா ஆல்பம்



கல்யாணம் முடிந்து இரு நாட்களில் தேனிலவுத் தம்பதியராய் நானும் மகேஷும் ஜனவரி 14, 1997ல் ஊட்டியில் இருந்தோம். இயற்கைக் காட்சிகளை ரசித்தவாறு சுற்றி வந்த எங்களுக்கு, ஓர் இன்ப அதிர்ச்சி! ஒரு தெலுங்குப்பட ஷூட்டிங்கின் இடைவேளையில் நடிகை மீனா அமர்ந்திருந்தார். நாங்கள் இருவருமே உங்களின் அபிமான விசிறிகள் என்று அறிமுகம் செய்து கொண்டவுடன், அவருக்கு முகம் கொள்ளாப் பூரிப்பு! பதிலுக்கு, தேனிலவுத் தம்பதியருக்கு வாழ்த்துகள் என்று லயித்துச் சொன்னார். பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டாலும் அந்த இனிய தருணம் இன்றும் எங்கள் நெஞ்சில் நிழலாடுகிறது.

- ஜெயஸ்ரீ மகேஷ், சென்னை

நடிகையர் திலகம் சாவித்திரிக்குப் பிறகு நடிகை ரேவதிதான் குடும்பப் பாங்கான வேடங்களில் பரிமளித்தவர். திருமணமான புதிதில், தமது நடன நிகழ்ச்சிக்காக, ஈரோட்டுக்கு வந்திருந்தார். அப்போது சந்தித்து அவரிடம் உரையாடி, அவருடன் ஒரு புகைப்படத்தை எடுத்துக் கொள்ளும் ஆசையைத் தெரிவித்தேன். மலர்ச்சியுடன் சம்மதித்தார். இந்தப் புகைப்படம் எனது ஆல்பத்தில், ஒரு மறக்க முடியாத அனுபவத்தை ஏற்படுத்தியது. இப்போது அவர் நடிக்காவிட்டாலும், அவர் நடித்த படங்களும், செய்துகொண்டிருக்கும் சமூக, நல்வாழ்வு திட்டங்களும், அவருக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தரும்.

- ரேவதிப்ரியன், ஈரோடு



ஃபோட்டோவுடன் இடம்பெறும் ஒவ்வொரு அனுபவத்துக்கும் பரிசு ரூ.50/-



பிரதமர் பண்டிட் ஜவாஹர்லால் நேரு (1952-ல்) ஆலுவாயில் உள்ள FACT ஃபாக்டரியைப் பார்வையிட வந்தவர், பக்கத்திலிருக்கும் என் பள்ளிக் கூடத்துக்கும் விஜயம் செய்தார்.

நேருஜியை, மாலை அணிவித்து வரவேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நிகழ்ச்சியின் போது எடுத்த இந்த ஃபோட்டோவில் இந்தியாவின் முதல் நான்கு பிரதமர்களுடைய படமும் இருப்பதால் (நேருஜி, லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி (பின்னால் கார் பக்கத்தில்) இப்படத்தை எனது பொக்கிஷமாக நான் கடந்த 50 வருடங்களாகப் பாதுகாத்து வருகிறேன்.

- சரஸ்வதி ராமகிருஷ்ணன், கோட்டூர்புரம்

சத்யஜோதி பிலிம்ஸ் 'இதயம்' பட வெற்றி விழாவில் (28.2.92) என்னுடைய படைப்பு ஒன்று ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் வெற்றி பெற்றது. அதற்காக எனக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி பரிசாகக் கிடைத்தது.

அப்போது முரளி, வளரும் கலைஞர். அன்று அந்த நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்தார். நான் பரிசு பெறும் போது, ''பாஸ், நான் வசனம் பேசிப் பாராட்டு பெற்றேன். நீங்கள் உணர்ச்சிகளைக் கொட்டிப் பரிசு பெற்றீர்கள். பாராட்டுகள்'' என்று மிகவும் எளிமையாக வாழ்த்தியது இதயபூர்வமாக என் மனத்தைத் தைத்தது.

இன்று நம்மிடம் அவர் இல்லை. ஆனால், இந்த ஜீவன் உள்ள புகைப்படத்தைப் பார்க்கும்போது என் இதயம் கனக்கிறது.

- செல்வராஜ், பாலக்காடு




"பன்னிரண்டு ஆங்கில மாதத்துல எந்த மாதத்துலடா இருபத்து எட்டு நாள் இருக்கும்?"
"எல்லா மாதத்துலயும் இருபத்து எட்டு நாள் இருக்குடா?"
- ஜெயதிலகா கார்மேகம்
"உன் மருமக, பிரதமரிடம் எதுக்கு உன் மேல் நடவடிக்கை எடுக்க மனு கொடுத்தா?"
"அவ டெலிஃபோன் உரையாடல ஒட்டுக் கேட்டதுக்கு!"
- வாணியம்பாடி நா.ஆறுமுகம்
"எங்க காதலுக்கு இரண்டு வீட்டுலயும் எதிர்ப்புடா!"
"இரண்டு வீடுன்னா... உனக்குப் பெண் பார்த்திருக்கும் வீட்டிலும்! உன் காதலிக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கும் வீட்டிலுமா?"
- கு.அருணாசலம்



''என்னங்க
நமக்குக் கல்யாணம் நடந்து
25 வருஷமாயிடுச்சு. என்ன
பண்ணப் போறீங்க?''
''25 வருஷமா ஒண்ணும்
பண்ண முடியாம
இருந்துட்டேன். இனிமே
என்ன பண்ணப் போறேன்
காமாட்சி?''
- எஸ்.கோபாலன்
இனிமே என்ன
பண்ணப் போறேன்?
''நமது அரண்மனையின் கஜானா
காலியாகிக் கொண்டே வரு
கிறது!''
''எப்படிச் சொல்கிறாய்?''
''மன்னா, தங்களைப் புகழ வார்த்
தையே வரவில்லை என்று
சொன்னதுக்கு... வரலைன்னா
விட்டு விடு'ன்னு மன்னர் சொல்
லிட்டாரு!''
- சாத்தூர் சபாபதி
''சாதாரண குக்கா இருந்த என்னை
'பாப்புலர் குக்' ஆக்கினதே என்
ஒய்ஃப்போட ஒருநாள் சமையல்தான்.''
''என்ன சொல்ற?''
''கல்யாணம் ஆனதும் ஒருநாள் சமைச்சா.
மறுநாளே வேற வழியில்லாம
நான் சமைக்க ஆரம்பிச்சேன்.''
- சாயம் வெ. ராஜாராமன்

நியூஸ் மிக்சர்

துளசி



''இப்படியே போய்க்கொண்டு இருந்தால், இன்னும் இருபத்து ஐந்து ஆண்டுகளில் கங்கை நதியிலும் நீர் இருக்காது'' என்று உலகத் தண்ணீர் பிரச்னை பற்றி வருத்தப்படும் சேகர் கபூர், ஏற்கெனவே பண்டிட் குயின், எலிசபெத் படங்களை எடுத்தவர். அடுத்த படம்: பாணி (தண்ணீர்).



'ஃபேமிலி பிளானிங்' - இந்தியரான கரண் மகாஜன் எழுதிய முதல் நாவல். 30 வயதுக்கு உட்பட்ட இளம் எழுத்தாளர்களுக்கான, டைலன் தாமஸ் விருது இறுதிப் பட்டியலில் இந்த நாவலும் இடம்பெற்றுள்ளது. பரிசுத் தொகை: 30,000 பவுண்டு. விரைவில் இந்தியாவிலும் இந்த நாவல் கிடைக்குமாம்!



2010 சமாதான நோபல் பரிசு விழாவில், இசை நிகழ்ச்சியைத் தொகுக்க இருப்பவர் டென்சில் வாஷிங்டன். சென்ற ஆண்டு, பராக் ஒபாமாவுக்கு இவ்விருது கொடுக்கப்பட்டபோது வில் ஸ்மித்தும் அவர் மனைவியும் தொகுத்து வழங்கினர்.







2010க்கான உலக மனிதநேய விருதைப் பெற இருப்பவர், ஜோர்டன் அரசி ராணியா அல் அப்துல்லா. பெண் குழந்தைகள் கல்வியைப் பரவலாக்கவும் சர்வதேச மனித உரிமைகளுக்கு இவர் செய்த முயற்சிகளுக்காகவும் இவ்விருது.

எல்லோர் மனசிலும் எம்மா!

ஹாரி பாட்டர் புகழ் எம்மா வாட்சன் தான் பிரிட்டனின் ஸ்டைலிஷ் பிரபலம். 'கிளாமர்' இதழ் வாசகர்களின் தேர்வு எம்மா. ஹம்மா!



தா.பா.வுக்கு தலைவலி!


இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியனுக்கு உசிலம்பட்டி வைகை அணை சாலையில் தோட்டம் இருக்கிறது. குடும்பச் சொத்து பங்கீட்டின்போது தா.பா.வுக்குக் கிடைத்த இந்தத் தோட்டத்தில் அவரது தம்பி வந்து வீடு கட்டி உட்கார்ந்து கொண்டு உரிமை கோருகிறாராம். இவருக்குப் பின்னணியில் ஆளும் கட்சி இருக்கிறதாம். ''தா.பா. ஒவ்வொரு முறை அவருடைய தோட்டத்துக்குப் போகும்போதும் 60, 70 காவலர்கள் தோட்டத்துக்கு வந்து அந்தப் பகுதியையே கலக்குகிறார்கள். தா.பா.வுடன் கூட வரும் கட்சித் தொண்டர்கள் கொஞ்சம் ஆவேசப்பட்டால், அதையே காரணமாக வைத்து தா.பா.வை 'உள்ளே போட' முயற்சி செய்கிறது ஆளும் கட்சி'' என்கிறார் தா.பா.வின் நெருங்கிய நண்பர் ஒருவர்.



தா.பா.வுக்கு வலைபோடும் தி.மு.க.!

ஓயாது... ஓயாது எங்கள் சண்டை!

ஓர் அமைப்பில் உட்கட்சி ஜனநாயகம் வலுவாக இருக்க வேண்டுமென்றால், உட்கட்சித் தேர்தல் நடத்த வேண்டும். இதன் மூலம் கோஷ்டி சண்டையும் ஒழியும். ஆனால், ராகுல் முயற்சியில் உட்கட்சித் தேர்தல் நடக்க, தமிழக இளைஞர் காங்கிரஸில் தேர்தலுக்குப் பின்னே தான் காரசாரமான மோதல் நடக்கிறது. வாசனின் ஆதரவாளர் யுவராஜ் மாநிலத் தலைவர். பல மாவட்டங்களில் வென்றிருப்பவர்களில் கார்த்தி சிதம்பரம் ஆதரவாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இளைஞர் காங்கிரஸ் அமைப்பு ரீதியான கூட்டங்களில், தாய் அமைப்பைச் (parent unit) சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளக் கூடாது. இரு தரப்பும் அவர்களுக்குப் பிடித்த, பின்னால் இருந்து இயக்குகிற தலைவர்களைக் கூட்டங்களுக்குக் கூப்பிடுவதால் பிரச்னை வெடிக்கிறது. இதன் விளைவாக கார்த்தி சிதம்பரத்தின் ஆதரவாளர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட ராகுல், ''தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸை கூண்டோடு கலைத்து விடுகிறேன்'' என்று கடுகடுக்கிறாராம்.





குழம்பும் முஸ்லிம் இயக்கங்கள்

பாபர் மசூதி தீர்ப்பு தமிழக முஸ்லிம் இயக்கங்களிடையே குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மற்றும் தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டும் அந்தச் சமூக

தடுமாறும் தமிழர் இறையாண்மை



அக்டோபர் மாதம் தமிழர் இறையாண்மை மாநாடு நடத்துவதாக இருந்தார் திருமாவளவன். ஆனால், தீவுத் திடலில் நடத்த தமிழக அரசு அனுமதி கொடுக்கவில்லை. இதனால் மிகவும் கடுப்பில் இருக்கிறார் திருமா. ''ஈழத்தில் உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த திலீபனின் நினைவு நாளில் போஸ்டர் ஒட்டினால் காவல் துறை அதைக் கிழிக்கிறது. இறையாண்மை மாநாடு நடத்த கேட்ட இடம் கிடைக்காமல் போகிறது. தி.மு.க.வுடன் கூட்டணியில் இருப்பதால் கசப்பை மறைத்துக் கொண்டு காலம் தள்ள வேண்டியிருக்கிறது'' என்கிறார் விடுதலைச் சிறுத்தை பிரமுகர் ஒருவர்.

''இவர்கள் பாட்டுக்கு இறையாண்மை மாநாடு என்று போட்டு, பிரபாகரனுக்கு நகரெங்கும் கட் - அவுட், பேனர்கள் வைப்பார்கள். காங்கிரஸுக்குக் கடுப்பேறும். அந்தக் கட்சியையும் நாங்கள் அனுசரித்துப் போக வேண்டுமே'' என்கிறார்கள் தி.மு.க. பிரமுகர்கள். இறையாண்மை மாநாட்டை டிசம்பருக்குத் தள்ளிப் போட்டு விட்டார்கள்.

பாலிடிக்ஸ் பஜார்

காய்கறிக் கிழவியை மிரட்டும் தி.மு.க. பிரமுகர்

சென்னை பெரம்பூரில் பல கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார் ஒருவர். சில மாதங்களுக்கு முன்னர் வாடகைக்கு விட்டிருப்பவர்களுக்கே கடைகளை விற்று விட்டார். ஆனால், காய்கறி விற்றுக் கொண்டிருந்த கிழவியால் பெரிய அளவில் பணம் கொடுத்துக் கடையை வாங்க முடியவில்லை. அந்தக் கிழவியின் பக்கத்துக் கடையை வாங்கிய கழக உடன்பிறப்பு கிழவியிடம், ''உடனே காலி செய்து விடு... அந்தக் கடையை நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்று வற்புறுத்துகிறாராம். ''கடையை விட்டால் பிழைப்புக்கு என்ன செய்வேன்'' என்று கிழவி புலம்புகிறார். தி.மு.க. உடன்பிறப்பு, மாவட்டச் செயலாளர் வரை விஷயத்தை எடுத்துச் செல்ல, செயலாளர் கிழவியைக் கூப்பிட்டு மிரட்டுகிறாராம். ''வடசென்னையில் இதே போன்று கட்டப்பஞ்சாயத்து செய்தே கட்சிக்கு அவப்பெயரை வாங்கித் தந்திருக்கிறார்கள்'' என்கிறார் ஒரு மூத்த கழகப் பிரமுகர்.



வகுப்பு மக்களிடையே செல்வாக்கு பெற்றவை. தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற கொள்கை வைத்திருந்தாலும், முஸ்லிம்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கொடுத்ததால் கருணாநிதியை ஆதரித்து வருகிறது தவ்ஹித் ஜமா அத். அதே சமயம் த.மு.மு.க., ஜெயலலிதா அணியில் இருக்கிறது. அயோத்தி தீர்ப்பை கருணாநிதியும் ஜெயலலிதாவும் வரவேற்றுள்ள நிலையில், அதிருப்தியில் உள்ள இந்த இரு இயக்கங்களும் தேர்தலின் போது 'யாருக்கு ஆதரவு தெரிவிப்பது' என்ற குழப்பத்தில் இருக்கின்றன. குறிப்பாக அ.தி.மு.க.வுடன் சேர்ந்து போட்டியிட்டு ஒன்றிரண்டு இடங்களைப் பெறலாம் என்றிருந்த த.மு.மு.க. ரொம்பவே அப்செட்.

- சஞ்சயன்

என் கணவரிடம் இருக்கும் மூன்று வாட்ச்களில் ஒன்று பழுதாகி நின்று விட்டது. அன்றிலிருந்து, தொழிலில் புதுப்புது ஆர்டர்கள் வந்த வண்ண மிருந்தன. சில சமயங்களில் வேறு வாட்ச்களைக் கட்டிக்கொள்வார். திரு மணம், வைபவங்களுக்கு வேறு சில வாட்ச்களைப் பயன்படுத்தினாலும், முக்கி யமான வேலையாக வெளியே கிளம்பி னால் அல்லது பணம் கொடுக்கல் வாங் கல் சம்பந்தமாகச் சென்றால், அந்த ஓடாத வாட்ச்சைத் தேடிப்பிடித்துக் கட்டிக்கொண்டுதான் செல்வார். ஒரு முறை வங்கியில் லோன் வாங்கச் சென்றவர், பேங்க் வாசல்வரை சென்று விட்டு, திரும்ப வந்து அந்த வாட்சைக் கட்டிக் கொண்டு சென்றார். லோனும் கிடைத்தது. எந்தவித மூடப் பழக்கங்களும் இல்லாத என் கணவருக்கு இப்படி ஒரு சென்டி மெண்ட்.

- கவிதா ராஜன், மதுரை



புதுப்புடைவை கட்டுவதென்றால் வெள்ளிக்கிழமைதான் பிரித்துக் கட்டு வேன். அதைத் துவைப்பது வியாழன் அல்லது திங்கள்கிழமை. புதுப்புடைவை யைக் கட்டும்போது, பழைய புடைவை யை மடித்து, அதன்மேல் அமர்ந்து கொஞ் சம் தண்ணீர் குடிப்பது என் சென்டி மெண்ட். அப்படிச் செய்தால் புடைவை தொலைந்து போகாது என்பதும் நம்பிக்கை. அதேபோல் புதுப் புடைவையை நனைக் கும்போது, ஒரு சிட்டிகை மஞ்சள் பொடி போட்டு நனைப்பேன். இதைப் பல வருடங்களாகத் தொடர்ந்து செய்து வரு கிறேன். கிழமைக்கு ஏற்ற புடைவை

'**கா**லையில் தினமும் கண்விழித் தால் நான் கைதொழும் தேவதை அம்மா!' ஆம். ஸ்ரீ அரவிந்த் அன்னையே எனது அம்மா. அவர் முகத்தில்தான் நான் கண் விழிப்பேன். பிறகு எந்த ஓர் காரியத்தையும் (சமையல் உள்பட) தொடங்கும் முன்பும் மனத்தால் அதை ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து விடுவேன். எந்த வேலையாக வெளியில் சென்றாலும், வெளியூருக்குப் பிரயாணம் செய்தாலும் அன்னையை வணங்கி, அவரின் பிரசாதமான பூக்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு, சிறு காணிக்கையையும் அவரின் பாதத்தில் வைத்துவிட்டுத்தான் செல்வேன். இதனால் முடியாது, என மற்றவர் கள் சொன்ன காரியங்கள்கூட எந்த விதமான தடைகளும் இன்றி எளி தாக முடிவடையும். இது எனது அனுபவபூர்வமான உண்மை.

-விஜயா தியாகராஜன், கும்பகோணம்



வாசகர்களே! உங்களோட சென்டிமெண்ட்! குடும்ப நம்பிக்கைகள் என்ன? எழுதுங்க... kalki@kalkiweekly -க்கும் அனுப்புங்க.

என் தந்தையின் இஷ்ட தெய்வம் மதுரை மீனாட்சி. எனவே, எங்கள் குடும்பத்தில் எந்த விஷயம் நடந்தாலும் மீனாட்சிக்கு ரூ.100 காணிக்கை எடுத்து வைத்துவிட்டுத்தான் வேலையை ஆரம்பிப்போம். தற்போது என் வீட்டில் பெரிய மீனாட்சி அம்மன் படம் உள்ளது. வெளியே செல்லும்போது வணங்கி விட்டுத்தான் செல்வோம்.



வீட்டில் உள்ள நபர்களுக்கு என் பாட்டி ஞாயிற்றுக்கிழமையானால் உப்பு சுற்றி திருஷ்டி கழிப்பார். தலையை விரித்துக்கொண்டு வாசற்படி தாண்டமாட்டோம். பல் தேய்த்துவிட்டு, நெற்றியில் பொட்டுடன்தான் வாசலில் கோலம் இடுவோம்.

-எஸ். மீனா ஜெயராகவேந்திரன், ஸ்ரீரங்கம்.

கைதொழும் தேவதை...!



அணிந்தால், காரியம் கைகூடும் என்பது என் நம்பிக்கை (செவ்வாய்: ஆரஞ்சு. புதன்: பச்சை)

-ர.கிருஷ்ணவேணி, சென்னை.

ஒவ்வொரு வருடமும், எனது பிறந்த நாளுக்கு முதல்நாள் இரவே திருவண்ணாமலைக்குச் சென்று தங்கிவிடுவேன். பிறந்த நாளன்று அதிகாலையிலேயே கோயிலுக்குச் சென்று அண்ணாமலையாரைத் தரிசித்துவிட்டு உடனே கிரிவலம். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்த செண்டிமெண்டைக் கடைப்பிடித்து வருகிறேன். ஏதாவது தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக ஒரு வருடம் போகமுடியாவிட்டால் அந்த ஆண்டு முழுவதுமே எனக்கு எதையோ பறிகொடுத்ததைப் போல ஆகிவிடும். அதேமாதிரி எனது திருமண நாளன்றும் திருப்பதிக்குச் சென்று ஆஜராகிவிடுவேன். இந்த இரண்டு செண்டிமெண்ட்களும் எனது வாழ்க்கையில் பின்னிப்பிணைந்தவைகளாக ஆகிவிட்டன.

- மு.மதிவாணன், அரூர்

எழுதி முடிக்க எடுத்த அவதாரம்!

புகழ் என்பது பரவினாலே பொறாமை என்பதும் சிலரிடம் தோன்றிவிடுமே. ஞானேஸ்வரரும் அவரது உடன்பிறப்புகளும் கிராமத்தினரால் மேலும் மேலும் புகழப் படுவது, வணங்கப்படுவது கண்டு அந்த ஊரில் வசித்த விசோபாகேசன் என்ற ஒருவனுக்கு மிகுந்த எரிச்சல் ஏற்பட்டது. ஞானேஸ்வரரும் அவர் உடன்பிறப்புகளும் போலி சன்னியாசிகள் என்று குற்றம் சாட்டினான் அவன். ஆனால், அவன் சொல்வதைப் பலரும் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

அப்போது தீபாவளித் திருநாள் வந்தது. விசேஷ நாட்களில் புதிய பானை வாங்கி அதில் சமைப்பதுதான் அப்போதைய வழக்கம். இதன்படி புதிய பாண்டம் வாங்க முக்தாபாய் கடைக்குச் சென்றார். ஆனால் கடைக்காரரோ அவற்றை விற்க மறுத்துவிட்டார். காரணம் விசோபாகேசன் ஏற்கெனவே அந்தக் கடைக்காரரை மிரட்டி வைத்திருந்ததுதான்.

அருகாமையில் வேறு எந்தக் கடையும் இல்லை. 'சற்று நேரத்தில் நதியில் குளித்துவிட்டு அண்ணன் நிவ்ருத்தி தேவர் பசியுடன் வந்துவிடுவாரே! என்ன செய்வது?' என எண்ணியபடி கலக்கத்துடன் வீடு திரும்பினார் முக்தாபாய்.

தங்கையின் முகம் வாடியிருப்பதை ஞானேஸ்வரர் உணர்ந்தார். காரணத்தை அறிந்தார்.

''இன்று ஒரு வித்தியாசமான பானையில் சமைக்கலாமே'' என்றார்.

''அப்படி எந்தப் பானையும் இல்லையே. வீட்டில் இருந்த பானையும் உடைந்து விட்டது'' என்றார் முக்தாபாய் வருத்தத் துடன்.

''என் முதுகின் மீது நீ நினைக்கும் சிற்றுண்டியைச் செய்'' என்றபடி குனிந்து கொண்டார் ஞானேஸ்வரர். ஒரு கணம் முக்தாபாய் திகைத்தார். அடுத்த கணமே ஞானேஸ்வரரின் சக்திகள் முக்தாபாயின் மனத்தில் பதிந்தன. தயக்கமின்றித் தமையனின் முதுகில் சப்பாத்தி இடத் தொடங்கினார்.

தனது கடும்யோக சக்தியால் உடலில் ஜடாக்னியைப் பெருக்கிக் கொண்டார் ஞானேஸ்வரர். அவரது முதுகு காய்ந்த இரும்புத் தகடுபோல் ஆனது. முக்தாபாய் அவரது முதுகையே அடுப்பாகவும் பானையாகவும் பயன்படுத்தி, சுவையான



அருண்சரண்யா



சிற்றுண்டிகளைச் செய்து முடித்தார். பிறகு தன் உடல் அக்னியை ஞானேஸ்வரர் தணித்துக் கொண்டார்.

நடந்ததை மறைந்து இருந்து பார்த்த வீசோபாகேசன், ஞானேஸ்வரரின் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டான். அவருடைய சீடன் ஆனான்.

டேஹூ செல்வதற்கான பேருந்துக்காகக் காத்திருந்தோம். மகான் துக்காராம் வாழ்ந்த தலம் அது.

ஆலந்தியில் இருந்து அருகில்தான் உள்ளது டேஹூ. அரைமணி நேரத்துக்கு ஒரு பேருந்து. சுமார் முக்கால் மணி நேரத்தில் அடைந்துவிடலாம்.

''ஞானேஸ்வரர், நாமதேவர் போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில்தான் துக்காராமும் வாழ்ந்தாரா?'' என்று கேட்டான் ஜருகண்டி.

''இல்லை. நாமதேவர் இருக்கும்போதே ஞானேஸ்வரர் சமாதி அடைந்து விட்டார். நாமதேவர் காலத்துக்குப் பிறகுதான் துக்காராம் பிறந்தார். சொல்லப்போனால் நாமதேவருடைய மறுபிறப்பு என்றும் துக்காராமைக் குறிப்பிடுவார்கள். எந்த அளவுக்கு அபங்கங்கள் எழுத வேண்டும் என்று நாமதேவர் ஆசைப்பட்டாரோ அந்த அளவுக்கு எழுதி முடிப்பதற்கு முன்பாகவே அவர் இறைவனடி சேர்ந்து விட்டதாகவும், அந்தக் குறையைச் சரிசெய்யவே அவரது மறுபிறப்பாக துக்காராம் பிறந்து ஏராளமான அபங்கங்களை எழுதினார் என்றும் சொல்வதுண்டு. இத்தனைக்கும் துக்காராமும் சுமார் நாற்பது வயது வரைதான் வாழ்ந்திருக்கிறார்'' என்றார் ராமநாதன்...

''துக்காராம் எவ்வளவு அபங்கங்களை எழுதியிருக்கிறார்?'' என்ற ஜருகண்டியின் கேள்விக்கு, ''ஐயாயிரத்துக்கும் அதிகமான அபங்கங்கள்'' என்று விடை கிடைத்தது.

இதற்குள் டேஹூ செல்வதற்கான பேருந்து வந்துவிடவே, அதில் ஏறி அமர்ந்தோம். வெவ்வேறு இடங்களில்தான் இடம் கிடைத்தது. எனவே பேச்சைத் தொடர முடியவில்லை.

டேஹூ ஒரு சிறிய நகரம். அங்கு பாண்டுரங்கனுக்கான ஓர் ஆலயம் இருக்கிறது. விட்டல ருக்மணி ஆலயம் என்று பெயர். அங்குள்ள விக்ரகங்கள் துக்காராமால் வழிபடப்பட்டவை. துக்காராம் மற்றும் அவரது மனைவியின் சிறு உருவச் சிலைகள் கூட ஆலய வளாகத்தில் காணப்படுகின்றன.

''பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தக்



எழுதி முடிப்பதற்கு முன்பாகவே நாமதேவர் இறைவனடி சேர்ந்துவிட்டார். அந்தக் குறையை சரிசெய்யவே மறுபிறப்பாக துக்காராம் பிறந்தார்.



கோயிலை துக்காராமின் வாரிசுகள் எழுப்பி யிருக்கிறார்கள்'' என்ற ராமநாதன், ''துக்கா ராமின் வாழ்விலும் பல அற்புதங்கள் நடந் திருக்கின்றன'' என்று தொடங்கினார்.

''எனக்கு ஒரு சந்தேகம்'' என்று தொடங் கிய ஜருகண்டி எதையோ நினைத்துக் கொண்டு ''ஒன்றுமில்லை'' என்றபடி வாயை மூடிக் கொண்டான்.

''என்ன சந்தேகம்? மறைக் காமல் கேளு'' என்று ராமநாதன் கூற, அப்போதும் தயக்கத்துடன்தான் தன்னை வெளிப்படுத்திக் கொண் டான் ஜருகண்டி.

''நீங்கள் மகான்களின் வாழ்க் கையில் நடந்த அற்புதங்களைச் சொல்லிக் கேட்கும்போது பரவச மாக இருக்கிறது. ஆனால் கூடவே சின்னதாக ஒரு நெருடல். கடவுளே வந்து சகஜமாகப் பேசுவது, கவ ரோடு பறந்து வானத்தில் பறப்பது என்பதெல்லாம் தர்க்கரீதியாக, அதாவது அறிவியலின்படி சாத் தியமானதாகத் தெரியவில்லையே. நம் புண்ணிய பூமியில் மகான்களின் வாழ்க்கையில் நடந்தவற்றை முழு மையாகவே மனசு நம்பத்தான் செய்கிறது. ஆனால், மூளைதான் அப்பப்போ குறுக்குக் கேள்வி எழுப்புகிறது'' என்றான் ஜரு கண்டி.

ராமநாதன் கொஞ்சமாவது அதிர்ச்சி அடைவாரோ என்று நினைத்தான். மாறாக அவர் சட்டென்று ''உன் சந்தேகமே எனக்கு விளங்கல்லே ஜருகண்டி. அறிவியலின்படி மூளை, மனசுன்னு தனித்தனியாக உண்டா என்ன?'' என்று கேட்டார்.

ஜருகண்டி ஒருகணம் வாயடைத்துப் போனான். பிறகு ''கடவுள் கனவிலே வந்தார்னு சொன்னா அதை ஏத்துக்கலாம். ஏன்னா எனக்குக் கூட ஒரு முறை விநாயகர் கனவிலே வந்திருக்கிறார். ஆனால் விட்ட லனே நேரே வந்து பேசுவது, விளையாடுவது என்பதெல்லாம்...''

''ஓர் ஒயர் கூட இல்லாமல் உலகின் மறுகோடியில் இருக்கும் ஒருவருடன் பேச முடியும் என்று நீ சின்னப் பையனாக இருந்த போது நினைத்திருப்பாயா? செல்ஃபோன் என்பது என்னவாம்? பிரபஞ்ச இரகசியங்களை விஞ்ஞானிகள் மெல்ல மெல்ல விடுவித்து வருகிறார்கள். மெஞ் ஞானிகள் முன்னதாகவே உணர்ந்துவிட்டிருந்தார்கள். அது இருக்கட்டும், மருத்துவ உலகில் ப்ளேஸ்போ விளைவு (Placebo effect) என்று ஒன்று இருக்கிறது தெரியுமா?'' என்று கேட்டார்.

''அந்த விளைவு குறித்து நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். வெறும் நீரை ஊசியில் நிரப்பி, இது மிகச்சிறப்பாகச் செயல்படும் புதிய மருந்து. இதனால் உங்கள் நீண்டகால நோய் குணமாகிவிடும் என்று தொடர்ந்து சில நாட்களுக்கு டாக்டர் செலுத்த, அதனால் பல நோயாளிகள் நிஜமாகவே குணமானதாக மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆக மனம் ஒன்றை ஆழமாக நினைத்தால் - அது மற்றவர்கள் கோணத்தில் இயற்கைக்கு மாறானதாகவும் தர்க்கத்துக்கு அப்பாற்பட்டதாகவும் இருந்தால்கூட, அது நடந்துவிடக் கூடிய சாத்தியம் உண்டு.''

மேற்படி விளைவைச் சுட்டிக் காட்டிய ராமநாதன், ''உனக்கும் எனக்கும் கனவிலே கடவுள் வரலாமென்றால் மகான்களுக்கு நிஜமாகவே அந்தத் தரிசன பாக்கியம் கிடைக்கக்கூடாதா என்ன?'' என்று ஜருகண்டியைப் பார்த்துக் கேட்டார்.

ஜருகண்டி ஒத்துக்கொள்வதுபோல் வேகமாகத் தலையாட்டினான்.

''துக்காராமின் அபங்கங்கள் மிகவும் பிரபலம் அடைந்ததற்குக் காரணம் என்ன தெரியுமா?'' என்று கேட்டார் ராமநாதன்.

''கேள்வி கேட்பது உங்கள் இயல்பு. அதுபோலவே அதற்கான பதிலைச் சொல்வதும் உங்கள் கடமைதான்'' என்பது போல் மௌனமாக இருந்தான் ஜருகண்டி.

''துக்காராமின் பாடல்கள் மிகவும் எளிமையானவை. எளிமையான முறையில் பக்தி மார்க்கத்தைப் பரப்பினார் அவர். இறைவனை அடைய உலக ஆசைகளை முழுவதுமாகத் துறக்கவேண்டும் என்பதில்லை. யாகங்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை. தொடர்ந்து ஒரு மனத்தோடு விட்டல நாமத்தை ஜெபித்துக் கொண்டு இருப்பதுதான் மிக முக்கியம். முக்தி அடைய சித்து விளையாட்டுகள் தேவையில்லை. சொல்லப்போனால் அவை அந்த இலட்சியத்தை அடைய, தடையாக இருக்கக் கூடும்'' என்றார். ''சீக்கியர்களின் குரு கிரந்த சாஹிப் எனும் புனித நூலில் கூட துக்காராமின் அபங்கங்கள் இடம் பெற்றிருக்கின்றன தெரியுமா?'' என்றார் ராமநாதன்.

யாத்திரை தொடரும்

அபங்க அமுதம்



''லவண மேளவிதா ஜளே,
காய உரலே நிராளே
தைஸா ஸமரஸ ஜாலோ,
துஜமாஜீ ஹரபலோ
அக்னி கர்பூராச்யா
மேளீ, காய உரலீ காஜளீ
துகா ம்ஹணே ஹோதீ. துஜீ மாஜீ
ஏகஜ்யோதீ''
- பக்த துக்காராம்

''பாண்டுரங்கா, உப்பு என்பது நீரில் கலந்தபின் தனியாக என்ன இருக்கும்? அதே போல் நாம் ஒன்றாகிவிட்டோம். அக்னியுடன் கற்பூரம் சேர்த்து எரிந்து விட்டால் என்ன மிஞ்சும்? அதுபோல் நாமிருவரும் ஒரே ஜோதி ஆகிவிட்டோம்.''



'பொதிகை சேனலில்' மனோதத்துவ மருத்துவர் ஷாலினியின் 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியைப் பார்த்தேன். நேயர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வெகு சரளம்! பெற்றோர்களின் பெரும் பிரச்னையான, 'டீன் ஏஜ் குழந்தைகளை வளர்க்கும் முறை' பற்றிய கேள்விகளுக்கு அவரின் பதில்கள் சரியான தீர்வை அளித்தன! அது மட்டுமின்றி, அவரின் பதில்களில் மெல்லிய நீரோட்டமாய்ப் பரவியிருந்த நகைச்சுவை உணர்வு வெகு அருமை!

- உமார்த்தி, கோயமுத்தூர்

பல அதிரடி விளம்பரங்களுக்கு இடையில் ஓசையே இல்லாமல் மனத்தைக் கவர்கிறது ஃபிலிப்ஸ் கம்பெனியின் சிக்கன பல்புகளுக்கான விளம்பரம். ஒரு தாய் படுக்கையில் குழந்தையின் முடியைக் கோதிவிட, அது மெல்ல, மெல்ல மயங்கி உறங்கிவிட அவள் மங்கிய ஒளி விளக்குகளை மட்டும் போட்டு வெளியேறி, அங்கிருந்தே குழந்தை அமைதியாக உறங்குவதைப் புன்முறுவலுடன் ரசிக்கும் காட்சி நம்மையும் அமைதிப்படுத்துகிறது. நிறுவனத்தின் விளம்பரக் கருத்தும் நம் மனத்தில் ஆழமாகவே பதிகிறது.

- அ.ஷண்முகசுந்தரம், பெங்களூரு-72

அவர்கள் தேவர்களுக்கு சமம்!

அமீர்கான் நடிக்கும் 'அதிதி தேவோ பவ' விளம்பரத்தில் வெளிநாட்டவர்கள் நம் நாட்டுக்கு வரும்போது அவர்களிடம் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்துகொள்ள வேண்டும். நாம் நம் நாட்டில் பொது இடங்களை அசுத்தப்படுத்தக் கூடாது. நம் நாட்டின் மானத்தை நாம் காப்பாற்ற வேண்டும். ஏனெனில் அதிதி (வந்திருப்பவர்கள்) தேவோ பவ (வானுலகில் வசிக்கும் தேவர்களுக்கு சமமானவர்). இந்த விஷயங்கள் மிக அழகாகப் படம் எடுக்கப்பட்டுள்ளன.

- ஜெ.புஷ்கலா, சென்னை - 24

அது ஒரு சாக்லெட் விளம்பரம். உணவுக்காக நாள் முழுதும் மரத்துக்கு மரம் தாவி ஓடி, பழங்களையும் கொட்டைகளையும் தேடி அலையும் இரண்டு அணில்கள், ஓரிடத்தில் சந்தித்துக் கிடைத்த நேரத்தில், காதல் வசனம் பேசி, டூயட் பாடி, ரொமாண்டிக் நடனம் ஆடி, வாழ்க்கையின் இனிமையை அனுபவிக்கின்றன. நாள் முழுதும் பணியில் மூழ்கியிருக்கும்

டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி
எதுவாயினும்... 'சேனல் சாய்ஸ்' என்று குறிப்பிட்டு எழுதுங்க.
kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.

மனிதர்கள், சிறிது நேரம் ஒதுக்கி, சாக்லெட் சாப்பிட்டு, புத்துணர்வு பெற்று அந்த அனில் ஜோடி போல் வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தும் இந்த அழகான விளம்பரம் ரசிக்கும்படி உள்ளது. சாக்லெட்டே ஸ்வீட். அதைவிட ஸ்வீட்டானது, அந்த அனில் ஜோடியின் நளினமான ஆட்டமும், தேன் (சாக்லெட்) ஒழுகும் பாட்டும்!

- என் ரங்கநாயகி, கோவை- 25

டிஸ்கவரி சேனலில் வரக் கூடிய 'சாக்கிங் மை ஸ்டோரி' என்ற நிகழ்ச்சி மிகவும் அற்புதம். உலகம் முழுக்க இருக்கக் கூடிய மாற்றுத் திறனாளிகளின் நிலை குறித்தும், அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை குறித்தும், மேலும் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் உழைப்பால் சமுதாயத்தில் உயர்ந்து நிற்கும் நிலை குறித்தும் விளக்கும் உன்னதமான நிகழ்ச்சி அது. வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை எண்ணம் கொண்டு இறுதிக் கட்டத்தில் நிற்கக் கூடிய எவரும் இந்த நிகழ்ச்சியைப் பார்த்தால் போதும்; தன்னம்பிக்கையுடன் எழுந்து நின்று வாழ்க்கையை எதிர்கொள்ளும் எண்ணம் தோன்றும்.

- இ.நவநீதக் கண்ணன், சென்னை



மனிதர்கள் வாழ்கிறார்கள்!

அல்லி உதயன்

"ஏம்மா மசால் பொடிக்கார்ரு வந்துருக்கேன்... வேணும்னா வாங்கிக்குங்க..."

இவனது வியாபாரக் குரலுக்குப் பதில் அளிக்க, அவன் தீயுடன்தான் வந்தான். "அய்யோ... அம்மா...!" என்று கூச்சலிட்டுக் கொண்டே நடுத்தெருவில் விழுந்தான்.

இவன் பொருட்கள் நிரம்பிய சைக்கிளை வகைதொகை இல்லாமல் நிறுத்தி விட்டுப் பதறி ஓடினான்.

அதற்குள் ஊரே கூடி ஆள் ஆளுக்கு ஒன்றைச் செய்யத் துவங்கிவிட்டது.

சாக்கு உருட்டலில் தீ அணைந்துகொண்டது. பெண்கள் ஆண்கள் என்று பத்துப் பதினைந்து பேர் கைகளிலாவது குண்டு சோடா பாட்டில்களும் தண்ணீர் சொம்புகளும் இருந்தன.

"பாத்துயா... பாத்துக் குடுங்க... தண்ணி மேல பட்டா ஒடம்பு கொப்புளிச்சுக்கப் போகுது..."

"மூஞ்சில சோடா அடிங்கப்பா... பைய முழிப்பா இருக்கட்டும்..."

"எது செஞ்சாலும் பதனமா கோளாறாச் செய்யுங்கம்மா... ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிடப் போகுது..."

கசமுசாப் பேச்சுகளுக்கிடையே இவன் தவிதவித்து முன் சென்றான். தீ வாசலில் தகித்த முண்டக் கோழியாய்க் கிடந்த பையனை முற்றுமுழுதாகப் பார்க்க முடிந்தது.

"இம்புட்டுக் கங்கு வுழுந்தாலே காலு பொத்துப் போகுது... திரியோ தரப் பாவி... மண்ணெண்ணெயை மடமடன்னு ஊத்தி வேக வச்சிருக்கானே..."

"பன்னெண்டாப்புப் பரீச்ச எழுதிருந்தானாம்... முந்தாநா ரிசல்ட் வந்ததுல ரெண்டு பாடத்துல போச்சாம்... அப்பதிலிருந்தே ஒரு மாதிரியா இருந்திருக்கான்."

மொத்த ஜனமும் பையனையே கொத்தித் தின்பதைப்போல் கூடி நின்றது.



''பாதிக்கு மேல எரிஞ்சிருச்சு...''

''இல்ல முக்கால்வாசி இருக்கும்.''

''என்னவாசியோ பேச்ச உடுங் கப்பா... வச்சுப் பாத்துக்கிட்டிருந்தா ஆகுமா? பட்டுப்படார்னு ஆஸ்பத் திரிக்குத் தூக்கிட்டுப் போனாத்தான்யா அததுக்குத் தக்கன வைத்தியம் பாத் துப் பொழைக்க வைக்க முடியும்...''

தூக்க நினைத்து அருகில் மருகும் ஆட்களில் அவனது தாயோ, தகப் பனோ இல்லை. ஆனால் ஒவ்வொரு வரும் பெற்றெடுத்த பரிதவிப்பில் உருகிக் கரைந்து கொண்டிருந்தனர்.

''அவகப்பே ஒரு பக்கம் விடியுறதுக்குள்ள கெணத்து வேலைக்குப் போயிட்டா... அவ காத்தா மஞ்சக் காமலைக்கு மருந்து குடிக்க கோம்பைக்குப் போயிட்டா... இந்த நேரம் பாத்து ஒத்தையிலே பாதகத்தி மக இப்புடிப் பண்ணிருக்கா...''

''வெளங்காத முண்டைக... சின்னஞ் சிறுசுகள எந்நேரமும் கச்சுக் கச்சுங்கிறது... காங் கக் கதவடைக்கிறது... கடக்குன்னு அதுக ஒரு முடிவுக்கு வரத்தான செய்யும்...''



"ஏ.. போத்தா... அவகாத்தா அப்புடி ஒண்ணுங் குத்தக்காரி இல்ல. பிள்ளை கன்னா உசிரவுட்றவதே... அவகப்பே ஒரு ஊம சீவாத்தி..."

பெண்கள் தரப்பில் இப்படியான பேச்சுக்கள் கட்டறுந்த காளையாய் ஓடிக் கொண்டிருக்க ஆண்கள் காரியக்காரர்கள் ஆனார்கள்.

"ஏப்பா... ரோட்டுக்கு ஓடி எவனாச்சும் வண்டிக்காரன் போனா கூப்ட்டு வாங்கப்பா..."

"ஆமா ஒனக்குக் கூப்டொடனே புளுக்குனு வந்துறப் போறாய்ங்க.. தூக்கிட்டுப் போறப்ப செத்துக் கித்துப் போனான்னா போலீஸ் கேஸாயிடும்னு ஒரு பய வர மாட்டா..."

"நாத்தி எட்டுக்குச் சொன்னீகளா?"

"அதெல்லாம் சொல்லி அர மணி நேரம் ஆச்சு. அதே ஆளாளுக்குச் செல்லு வச்சுக்கிட்டிருக்காய்ங்களே... எவனாச்சும் அமுக்கிருப்பா..."

"பெறகெதுக்கு வராம இருக்காய்ங்க...? தேனிலயே அஞ்சாறு வண்டிக நிய்க்குதுன்னாய்ங்க..."

"பத்தாளு போயி ரோட்ட மறிச்சம்னா எங்கருந்தாலும் தன்னால வந்து சேர்வா..." என்றான் இவன் திடீரென்று

முழுக் கூட்டமும் ஒரு சேர வியந்து இவனைத் திரும்பிப் பார்த்தது.

"ஆமாமா... வருவா... முனுக்குன்னா போலீஸ்தே வந்து நிப்பா... உள்ள புடுச்சுப் போட்டு பூணக் கழட்டிடுவா..."

"ஏ போலீஸ் போலீஸ்னு சும்மா பூச்சாண்டி காட்டாதீங்கப்பா. ஊர மிஞ்சி அவெ பூணக் கழட்டுறத பாப்பம்... ஒரு வெளியூர்க் காரே... மசால்பொடி ஏவாரி... நமக்காக முன்னால நிய்க்கிறாரு... அவருக்கிருக்கிற தைரியம் நமக்கு வாணாமா? போலீஸ்காரே பூணக் கழட்டுறத அப்புறம் பாப்பாம்..." கட்டை மீசையும், கறுத்த தேகமுமாய் வெள்ளைச் சொள்ளை வேட்டியுடன் இருந்த ஆள் இவனோடு சேர்ந்து கூட்டத்திலிருந்து வெளியேறினான். இவன் விரைந்து முன் சென்றதைப் பார்த்து வெட்கப்பட்டு என்னவோ உள்ளூர்க்காரர்கள் சிறு கூட்டமாய்ச் சேர்ந்து நடந்தார்கள்.



"அந்த போலீஸ் ஸ்டேஷனிலேயே திருட்டு நடந்து போச்சாமே?"
"ஆமாம்: அதைக் கண்டுபிடிக்க தனிப்படை போலீஸ் வரப்போகுதாம்!"
- அனன்யா

சாலை மறியல் துவங்கிய பத்தாவது நிமிஷத்தில் நாத்தியெட்டு வந்துவிட்டது.

நல்லவேளையாக போலீஸ் வரவில்லை.

ஐம்பது அறுபதாய்ச் சேர்ந்திருந்த ஆட்களுக்குத் தலைமையாய் இவன்தான் இருந்தான். கூட்டம், ஒவ்வொன்றுக்கும் இவனையே எதிர்பார்த்து நின்றது.

ஆம்புலன்ஸ்காரன் இவனையொட்டியே வண்டியை ஸ்லோ செய்தான். "ஈங்குறதுக்கும் மறியல்தானாப்பா...? கொரமங்கள்ல இது ஒரு தொந்தரவாப் போச்சு.... மாடு கன்டு போடலைன்னாலும் பஸ்ஸ மறிப்பாய்ங்க போல்ருக்கு..." என்று முணுமுணுத்தவன், "மண்ணெண்ணெய் ஊத்தித் தீ வச்சுக்கிட்ட பய ஆடு எங்கப்பா

இருக்கு?''

இவன் தெருத்திருப்பம் நோக்கி சாலைக் குறியிட்டு போல் கைகாட்டினான்.

''ஓராள் ஏறிக்க...''

கண்ணிமைக்கும் நேரத்தில் இவன் தாவி ஏறி டிரைவருக்குப் பக்கத்தில் போனான்.

வண்டி சம்பவ இடம் பார்த்து சரசரவென இறங்கியது. மறியலுக்கு வந்தவர்கள் ஈடு கொடுத்து ஓடி வந்தார்கள்.

ஆம்புலன்ஸிலிருந்து ஆட்கள் இறங்கினார்கள். அதற்குள் எங்கிருந்தோ அம்பெனப் புறப்பட்டு வந்திருந்த அவனது தாய் மகன் மீது விழுந்து புரளப் போனாள்.

''அடிப் பாதகத்தீ மகளே... புள்ள மேல வுழுந்திராதடீ... கறி காக்காய்க்குப் போயிரும்... போகாத தாயீ... ஏங் கண்ணுல்ல... அவனுக்கு ஒண்ணும் ஆகாதும்மா... பூப் போல வச்சுப்பாத்தம்னா பொன்னா எந்திரிச்சு நிப்பாந்தாயீ...'' வயசுக்கு மூத்ததும் இளையதுமான ஐந்தாறு பெண்கள் அவளை ஆரத் தழுவி அப்புறப்படுத்த முயன்று தோற்றுக்கொண்டிருந்தார்கள்.''

தாய் வந்து விழுந்த மாயம் தெரியவில்லை. தகப்பனும் மூஞ்சியிலும் மொகறையிலும் அடித்துக்கொண்டு வந்து சேர்ந்து விட்டான்.

''ஏ... வெலகு... வெலகு... தள்ளு... தள்ளு... ஓராள் ரெண்டாள் தவிர மத்தாளெல்லாம் ஓடிப் போயிரு...ஒன்னத்தேம்பா... ஸ்டெச்சருக்கு வழி விடப்பா...''



''எந்த வூட்டுல எழவு வுழுந்துச்சு பயறு அவுச்சாகன்னு சாப்பிட்டு வந்தீக...''

ஸ்டெச்சருடன் வந்த ஆட்களுடன் இவனும் சேர்ந்து வந்ததை கூட்டம் வாய் பிளந்து பார்த்துக்கொண்டிருந்தது. ''கடைசிக்கு நம்ம மசால்ப்பொடிக்காரருதே வண்டியக் கொண்டாந்திருக்காரு போல...''

''மகராசே நல்லாருக் கணும்....''

அதற்குள் பொத்துனாப் போல ஸ்டெச்சரில் கிடத்திப் பையனை ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள். தாய் தகப்பனுடன் உறுத்தான ஒன்றிரண்டு பேரும் ஏறிக்கொள்ள ஆம்புலன்ஸ் சிவப்பு விளக்கும் சைரன் ஒலியுமாய் வேகமெடுத்துப் போனது.

தெரு முழுக்கக் காலியாகிவிட்டது. பையன் கிடந்த இடத்தைச் சுற்றிலும் புகைக் கருக்கு படிந்திருந்தது. புழுதிக் கசகசப்பில் அழுந்தி அமுங்கிய வீதியில் ஒற்றைத் தனிமையாய் சைக்கிளை உருட்டிக்கொண்டு மெயின் ரோட்டில் இருக்கிற பூவையாபிள்ளை டீக்கடைக்கு வந்தான்.

எந்நேரமும் கசகசத்துக் கிடக்கிற அவரது கடையில் விரல்விட்டு எண்ணும் அளவில்தான் ஆட்கள் இருந்தனர். நேரம் கூடக் கூட அவர்களும் பெரியாஸ்பத்திரிக்கு றெக்கை கட்டி விடுவார்கள் போல் தோன்றியது. கண்ணாடி ஷோ கேஸ் பெட்டிகளில் இனிப்பு பலகார வகைகள் குவிந்து கிடந்தன. சோர்வாக இருந்தார் பூவையாபிள்ளை.

அதிகாலையில் சொந்த ஊரிலிருந்து இந்த ஊருக்கு ஐந்து கி.மீ. சைக்கிள் மிதித்து வந்தால் முதலாவதாய் நிற்பது பூவையாபிள்ளை கடையில்தான்.

அவர் தருகிற நல்வாக்கைப் போல் அன்றைய வியாபாரம் இருக்கும். விற்றுத் தீர்ந்த பைகளுடன் மறுபடியும் கடைக்கு வந்தால் அதே உற்சாகத்துடன் வரவேற்பார்.

தட்டில் மீந்து கொண்டிருக்கிற கேசரியை முழுதுமாக வழித்து இலையில் வைத்து வடையுடன் தருவார். இன்னொரு டீயையும் குடித்துவிட்டு சைக்கிளை எடுப்பான். மதியம் ஆகிவிடும் வீடடைய. லேசில் சாப்பாடு எடுக்காது.

மனைவிதான் ஒரு மாட்டு மாட்டுவாள். "எந்த ஊட்டுல எழவு வுழுந்துச்சு பயறு அவுச்சாகன்னு சாப்பிட்டு வந்தீக... இங்க ஒரு புள்ள குட்டிகளோட ரேசன் அரிசிய ஆக்கி ஆக்கித் தின்னுட்டு மிஞ்சுறத கீழ கொட்டிட்டு மஞ்சக் காமாலை வந்து கெடக்க வேண்டியதே... நிய்யி தெனத்துக்கு ஒரு செய்மொற சாப்பாடுன்னு கெம்பிரிக்கம் புடுக்க வந்து தொட்டுக்க ஊறுகா மாதிரி இம்புட்டச் சாப்பிட்டுப் படுக்க வேண்டிதே... நான் என்ன கேணச் சிரிக்கின்னு நெனச்சியா...?" பிசிறின்றி அவள் குரல் எழும்பி உச்சத்தை அடையும்.

"வாப்பா... ஏவாரி... வா...வா... வந்து ஒக்காரப்பா... என்ன ஒரே ஓசன...? இன்னிக்கு ஏவாரம் மொகடு முட்டிருக்குமே...?"

பிள்ளையின் லந்து பேச்சை ரசிக்க மனமின்றி பெஞ்சில் உட்கார்ந்தான்.

பூவையாபிள்ளையே தொடர்ந்தார். "வீட்டு நெனப்பு வந்திருச்சாக்கும்...? யாவாரம் ஓடலியே... பத்தூர்ப் பிரச்னையைத் நீக்கணுமே. பைனான்ஸ்காரனுக்குப் பதில் சொல்லணுமேங்குற கவல வந்திருச்சாக்கும்?"

ஓர் ஆளைப் பார்த்தால் மனசைப் படிக்கிறவர் பூவையாபிள்ளை, "பேசாம டீக்கடைய அடச்சுப் போட்டு சோசியம் பாக்கப் போங்கய்யா... ஊர்த்துட்டு பூராம் ஒங்க கிட்டதே இருக்கும்..." என்பான் இவன்.



"ஆபரேஷன் தியேட்டருக்குள்ள போனதும் டாக்டருக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை."
"அப்புறம்?"
"ஆபரேஷன் முடிஞ்சதும் பேஷண்டுக்கு ஹார்ட் ஓடலை."
- சாயம் வெ. ராஜாராமன்

முக்கால் தட்டுக்குக் கேசரி இருந்தது. அவரது கடையில் அது ஸ்பெஷல். அதற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டம் முழுவதும் இன்றைக்கு ஆஸ்பத்திரிக்கு ஓடிக்கொண்டிருந்தது.

அன்றைக்கு அவர் கையில் வீச்சு இருந்தது. இரண்டு கரண்டி என்பது நான்கு ஐந்தாய் ஓடியது. ஒரு முழுச் சாப்பாட்டைப் போல் இலை பரப்பி, கேசரியை அவன் முன் வைத்தார்.

சம்சாரம் மின்சாரம் போல் பாய்ந்தாள். "எந்த ஊட்ல எழவு வுழுந்துச்சு... பயறு அவுச்சாகன்னு சாப்டு வந்தீக..." சுதாரித்து அமர்ந்துகொண்டான். அவளது அடுத்தடுத்த பேச்சுகளும், கீறல் விழுந்த ரிக்கார்டுபோல் நினைவுக்கு வந்து

கூர் அம்புகளாய்த் தாக்கின.

''மறுபடியும் ஓட்டு நெனப்பு வந்திடுச்சராக்கும்... இங்க சாவு வந்தாலும் ஏவாரம் போயிடுது. சண்ட வந்தாலும் ஏவாரம் போயிடுதுப்பா. கண்ணு முழிச்சுக் கட தொறக்கும்போதே, ஊருக்கு ஒண்ணும் வந்துறக் கூடாதுன்னு எட்டுருச் சாமிய கும்பிட்டுக்கிட்டே நிய்க்க வேண்டிருக்கு...''

பூவையாபிள்ளை பேசிக் கொண்டே இருந்தார். இருபது வருஷக் கடை ஓட்டத்தில் வீடுகள் நிலங்கள் என்று வாங்கிப் போட்டிருக்கறார்.

தன் பாடுதான் பரிதாபம் என்றிருந்தது இவனுக்கு. நடு மதியம் வாக்கில் எங்கும் சென்று வியாபாரம் செய்துவிட முடியாது. இராமப்புற ஜனங்களை நம்பிய தொழில் அது. காலை எட்டுக்குள் வேலை வெட்டியென்று ஓடுவதற்குள்ளும் மாலை ஐந்து மணிக்கு வேலை விட்டுத் திரும்பிய பின்பும்தான் கடை விரிக்க முடியும். இடைப்பட்ட நேரத்தில் நாய் அலைச்சல் அலைந்தாலும் ஒன்றும் நடப்பதற்கில்லை.



''இன்னிக்கு மசால் பொடிக்காரர் இந்த ஊர்ல ஹீரோ. வீரதீரமா மறியல் பண்ணி நூத்தி எட்டக் கொண்டாந்திட்டார்ல...''

மதியத்தை எட்டிவிட்டது. அதுவரை இவனது கண்கள் தினசரிகளில் வெறுமனே ஓடிக்கொண்டிருந்தன. எண்ணங்கள் வீட்டை வளையமிட்டிருந்தன. கடைசியாகும் எலக்ட்ரிக் பில், காலங்கடத்திவரும் கேபிள் பில், கேஸ் சிலிண்டருக்குப் பணம், மொய் வேண்டி நிற்கும் மூன்று நான்கு விசேஷப் பத்திரிகைகள், சீனப் பெருஞ்சுவர் ஏனோ இவனுக்குள் வந்து போனது.

நான்கைந்து பேர் செட்டாகக் கடைக்கு வந்தார்கள். இவன் புறப்படத் தயாரான அவர்களை நிமிர்ந்து பார்த்தான். பூவையா பிள்ளை, ''இன்னொரு டீ தரவா...'' என்று கேட்டார். இவன், ''வேண்டாம்'' என்று தலையாட்டினான்.

வந்திருந்த அனைவரது முகமும் பழகியதாகவே இருந்தது. இன்னும் சொல்லப் போனால் இவனது வாடிக்கையாளர்கள்தான்.

ஆஸ்பத்திரிக்குப் போய் அதற்குள்ளாகத் திரும்பியவர்கள் போலவும் தெரிந்தது. முகங்களில் சவக் களை மாறியிருந்தது.

''அடடே.... நம்ம மசால்ப் பொடிக்காரத் தம்பி... இங்கதே இவ்வளவு நேரமும் ஒக்காந்திருந்தீங்களா....? நல்லதாப் போச்சு. கடக்காரய்யா... இன்னிக்கு இவருக்கு எங்க சப்ள. எம்புட்டு வேன்னாலும் குடுங்க. கேக்கக் கேக்கக் குடுங்க... ஓட்டுக்கும் கூடக் கட்டிட்டுப் போகட்டும்... செலவு பூராவும் எங்களோடது...''

எச்சிற் கையாலும் காக்காய் ஓட்டாதவர்கள் என்று அவர்களைப் பற்றிய மதிப்பீடு பிள்ளைக்கு இருந்திருக்கும் போலும். அந்த ஆச்சரியம் விலகாமலேயே அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

''என்னங்கய்யா முழிக்கிறீங்க...? இன்னிக்கு இவருதே இந்த ஊர்ல ஹீரோ. வீரதீரமா மறியல் பண்ணி நூத்தி எட்டக் கொண்டாந்திட்டார்ல... இவரு இல்லைன்னா பைய ஸ்பாட்லயே அவுட்டாயிருப்பா... தடாபுடான்னு கொண்டுட்டுப் போயி ஆஸ்பத்திரில செத்ததுனால இப்பப் பைய பொழச்சுக்கிட்டான்...''

வலி மிகுந்த

திருநங்கைகளைக் கேலியாகப் பார்ப்பதும், மட்டரகமாக நடத்துவதும்தான் இன்றைய சமூக யதார்த்தம். அவர்களின் மனப் போராட்டங்களை அங்கீகாரம் செய்யும் மனப்பான்மை நம்மில் பலருக்கும் இல்லை. இந்தச் சமூகச் சூழலில் திருநங்கைகளைப் பற்றிய ஓர் புரிதலை மக்களுக்கு உருவாக்கும் முனைப்பில் 'அஃறிணைகள்' என்ற குறும்படத்தைத் தயாரித்திருக்கிறார் கீதா இளங்கோவன். இதை இயக்கியவர் அவர் கணவரும், ரயில்வேயில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுபவருமான இளங்கோவன். இவர் ஏற்கெனவே குற்றப்பரம்பரை என்று கருதப்படும் ஒட்டர்களைப் பற்றிய 'ஆகாயத் தீர்ப்பு' என்ற குறும்படத்தை எடுத்து பாராட்டு பெற்றவர்.

பாலியல் தொழிலும், பிச்சையெடுப்பதுமே திருநங்கைகளின் தொழில் என்று முத்திரை குத்தப்பட்ட நிலையில், எந்தவித ஆபாசமுமின்றி, பார்ப்பவர்கள் முகம் சுளிக்காத வகையில், மிகக் கௌரவமான முறையில் அதேசமயம் உள்ளத்தைத் தைக்கும்படியாக இந்தக் குறும்படத்தை இயக்கியுள்ளார் இளங்கோவன். மனத்தில் உறுதியோடு, சொல்லமுடியாத பிரச்னைகளைத் துணிச்சலோடு எதிர்கொண்டு, சமூக அங்கீகாரத்தைப் பெற முயலும் ஏஞ்சல் கிளாடி, லிவ்விங்ஸ்மைல் வித்யா ஆகிய இரு திருநங்கைகளின் போராட்ட வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்த 'அஃறிணைகள்'. ஆணாகப் பிறந்து, ஒரு கட்டத்தில் தங்களுக்குள் ஊறும் பெண் மனநிலையை உணர்ந்து, அதற்கேற்றபடி வாழ முயற்சிக்கும்போது எழும் மனப் போராட்டங்களையும் சமூகத்தின் தீண்டத்தகாத போக்கையும் நெகிழ்ந்துபோகும் வகையில் படத்தில் சொல்லியிருக்கிறார் இளங்கோவன்.

''ஆறறிவு இருந்தாலும் அது, இது என்று சுட்டுப் பெயரால் மட்டுமே அறியப்படும் 'அஃறிணைகள்' நாங்கள். எங்களின் ஓலங்கள் மனித சப்தங்களுக்குப் பொருளற்றவை'' என்ற செய்தியுடன் தொடங்குகிறது இப்படம்.



'லிவ்விங் ஸ்மைல்' வித்யா

திருநங்கையான 'லிவ்விங் ஸ்மைல்' வித்யா, தமது வலிமிகுந்த வாழ்க்கையை

நான் வித்யா' என்ற புத்தகத்தில் விரி
வாகவே சொல்லியிருக்கிறார். கலை, இலக்கிய ஆர்வலரான 'வித்யா', திரைத்துறையில் மிஷ்கினின் உதவி யாளராகப் பணி புரிந்தார். நாடகம், கவிதை என்று பல தளங்களில் இயங்கிவருபவர். ''என்னுடைய நோக்கம் என்னைப் போன்ற திருநங்கைகளுக்குத் தன்னம்பிக்கை கொடுத்து அவர்களையும் கண்ணியமாக வாழவைக்க முடியும் என்று புதிய பாதையில் செயல்பட வைப்பதுதான்'' என்கிறார். இவரது 'நான் வித்யா' புத்தகம் சென்னை ஸ்டெல்லா மேரீஸ், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பாட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.



• இளங்கோ



• கீதா இளங்கோவன்



வாழ்வு!

வித்யாவின் வெற்றிகரமான போராட்ட வாழ்க்கையைப் பார்த்து வியந்து தன்னாலும் அதுபோல சமூகத்தில் தடம் பதிக்க முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருப்பவர் ஏஞ்சல் கிளாடி. எம்.என்.சி. யில் வேலை கிடைத்து அதை விட்டு விட்டு, மேலும் படிக்க வேண்டும் என்ற ஆசையால் இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாஸ் கம்யூனிகேஷன் படிக்கிறார் ஏஞ்சல் கிளாடி. ஏஞ்சல் கிளாடியின் போராட்ட வாழ்வை, ஆசைகளை, எண்ணங்களை, ஏக்கங்களையும் இந்த 'அஃறிணைகள்' பதிவு செய்கிறது.

''தமிழக அரசு எடுத்திருக்கும் முயற்சிகள் பாராட்டத் தக்கவை. திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கீகரித்து, அவர்களுக்கென்று தனி நல வாரியமும் அமைத்திருக்கிறது தமிழக அரசு. இந்த நடவடிக்கைகள் திருநங்கைகளை சுயசார்புடன் வாழவைக்கும் முயற்சியில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வுதான். இதுபோன்ற விஷயங்கள் சமூகத்தின் பார்வையை மாற்றும்'' என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் இளங்கோவன். ''இந்தக் குறும் படம் அரசின் முயற்சிகளுக்குத் துணை செய்யும்,'' என்கிறார் தயாரிப்பாளர் கீதா இளங்கோவன்.

- ப்ரியன்

குளிர்பானங்கள் குழந்தைப் பேறைப் பாதிக்குமா?

குழந்தை இல்லாத தம்பதிகளுக்குச் செயற்கைக் கருவூட்டல் நல்ல பலன் தந்தாலும், கருத்தரிப்பதற்கு முன்பு தம்பதிகள் பல்வேறு விதமான மன அழுத்தங்களுக்கு ஆளாவதாகவும் கருத்துகள் நிலவுகின்றன. அவற்றிலிருந்து பக்குவமாக வெளிவந்து தாய்மைப் பேறு அடைவது பற்றி விளக்குகிறார் உளவியல் நிபுணர் மருத்துவர் ஷாலினி...



''நாம் பழக்கவழக்கங்களில் அதிகமாகக் காப்பியடிக்கும் மேற்கத்திய நாடுகளில் குழந்தையின்மை பெரிய பிரச்னை கிடையாது. ஆனால், நம் ஊரில் இது சமுதாயப் பிரச்னை. பெண்கல்வி வளர்ச்சியடைந்த இந்தச் சூழலிலும், குழந்தையின்மைக்குப் பெண்கள் மட்டும்தான் காரணம் என்கிற மனப்பான்மை இருக்கிறது. இதனால் குழந்தை இல்லாப் பெண்களுக்கு சமுதாயத்தில் கிடைக்கும் இழுக்கான பார்வை அதிகம். குழந்தையின்மை என்று வந்துவிட்டால் ஆண் தம்மைப் பரிசோதனை செய்துகொள்ளத் தயங்கக்கூடாது. இதை மானம், கௌரவம் போன்ற சென்சிட்டிவான உணர்வுகளோடு பொருத்திப் பார்க்கக்கூடாது'' என்கிறார் ஷாலினி.

''இன்றைய காலக்கட்டத்தில் திருமணமான சில மாதங்களிலேயே தம்பதியர்கள், செயற்கைக் கருவூட்டலை நாடி வருகிறார்கள். திருமணமாகி சில வருடங்கள் குழந்தைக்காகக் காத்திருப்போம் என்ற எண்ணமெல்லாம் இப்போது



● ஷாலினி

அதிகமாக இல்லை. இப்படி வரும் தம்பதியரில் சிலர் திருமணமாகி ஒருமுறைகூட தாம்பத்ய உறவில் ஈடுபடாதவர்களாக இருப்பார்கள். இதுபோன்ற தம்பதியர்களுக்குச் சரியான கவுன்சிலிங் செய்து ஆலோசனைகளை வழங்குகிறோம். பிறகு எந்தவித செயற்கை முறை கருவூட்டலும் இல்லாமல், தாம்பத்ய முறையிலேயே கருத்தரிக்கிறார்கள்.



செயற்கைக் கருவூட்டல் முறைக்கு முன்பு கண்டிப்பாக மனநல மருத்துவரின் கவுன்சிலிங் அவசியம். கணவன், மனைவியிடையே சரியான புரிதல் இருந்தால்தான் இந்த வகையான முறைகள் வெற்றிபெறும். IVF போன்ற முறைகளில் ஆண்களுக்குப் பக்குவம் முக்கியம். ஈகோ இருக்கக்கூடாது. இந்தப் பக்குவத்தை எங்களின் கவுன்சிலிங் வழங்குகிறது'' என்கிறார் இவர்.

''எனக்குத் தெரிந்த ஒரு பெண் பலமுறை IVF செய்துகொண்டார். ஆனால், கருத்தரிக்கவில்லை. அவரிடம் நான் பேசிப்பார்த்தபோது, ஒவ்வொரு முறை IVF ட்ரீட்மெண்ட் செய்துகொள்ளும்போதும், இந்த முறையாவது கருத்தரிக்க வேண்டுமே என்று பதற்றமாகவே இருந்திருக்கிறார். அந்த உணர்வே கருத்தரிக்க இயலாமைக்குக் காரணமாக இருந்திருக்கிறது. நமது மனம் பதற்றமாக இருந்தால் பதற்ற ரசாயனங்கள் உருவாகும். இப்போது சூழல் சரியில்லை, இந்த உணர்ச்சி நிலையில் கருத்தரித்தால் கருவுக்கு நல்லதல்ல என்று நமது உடலே தமக்குள் கட்டளையிட்டுக் கொள்ளும். எனவே கருத்தரிக்கும் வாய்ப்பும் குறைந்து போகும். ஆகையால் கருத்தரிப்பதற்கு மகிழ்வான மனநிலையும் மிக முக்கியம். இந்த விஷயங்களை எல்லாம் இந்தப் பெண்ணிடம் எடுத்துச் சொல்லிப் படபடப்பைக் குறைத்து, மகிழ்வோடு இருக்கச் சொன்னேன். அந்தப் பெண்ணும் நான் சொன்னதைப் பின்பற்றினார். அதன் விளைவு எந்தவித செயற்கைக் கருவூட்டல் முறைகளும் இல்லாமல், தாம்பத்ய உறவிலேயே, கர்ப்பமுற்றுத் திருமணமாகி பத்து வருடங்களுக்குப் பிறகு தாயாகி இருக்கிறார்.''

''கருவுறுதலைப் பற்றி நமக்குப் பல்வேறு நம்பிக்கைகள் இருக்கின்றன. இதைப் பகுத்தறிவு கொண்டுதான் ஆராய வேண்டும். இதற்காக 'அபிப்ராயம் மாற்றல்' கலந்தாய்வு என்ற கவுன்சிலிங்கைத் தம்பதிகளுக்கு நடத்துகிறோம்'' என்கிறார்.

''பான்பராக்கிலிருந்து, ஆல்கஹால் வரை அனைத்து போதைப் பொருட்களும் ஆண்களின் உயிரணுக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும். இதைப் பெண்கள் பயன்படுத்தினால் கருமுட்டை உற்பத்தியைப் பாதிக்கும். நாகரிகம் என்றெண்ணி அருந்தும் செயற்கைக் குளிர்பானங்கள்கூட பெண்களின் மலட்டுத்தன்மைக்குக் காரணமாகலாம். எனவே, இதுபோன்ற விஷயங்களிலிருந்து, இன்றைய இளைஞர்கள் தள்ளியே இருக்க வேண்டும். இந்தத் தகவலை இளைய தலைமுறையினரிடம் எடுத்துச் சொல்லும் கடமையும் நமக்கு இருக்கிறது'' என்கிறார் ஷாலினி.

-ஆர்.கே

'வெளுத்துக்கட்டு'

படத்தில் நடிப்பில் வெளுத்துக் கட்டிய அருந்ததி, இப்போது 'போடிநாயக்கனூர் கணேசன்', 'கருப்பர் நகரம்', 'வௌவால்' எனப் பல படங்களில் பிஸியான ஹீரோயின்.

''சார், நான் பெங்களூர் பொண்ணு. *(ஸாரி மேடம் பெங்களூரு)* ஏர்ஹோஸ்டர்ஸ் டிரெய்னிங் முடிச்சிருக்கேன். ஏரோப்ளேனிலேயே பறந்துகிட்டிருக்கணும்னு ஆசைப்பட்டேன். வந்த சான்ஸை விடக்கூடாதுன்னு சினிமாவுல வந்துட்டேன். உங்கள மாதிரி ஆட்களோட ஆதரவோட இப்போ பரபரப்பான ஹீரோயினாயிட்டேன். *(பிழைக்கத் தெரிஞ்ச பொண்ணு!)*

சின்ன வயசிலேயிருந்து நான் ரொம்ப சென்சிட்டிவான பொண்ணு. நான் ஸ்கூல் படிக்கும்போது ஒரு பையன் குரங்கு, குரங்குன்னு கேலி பண்ணிக்கிட்டேயிருப்பான். *(அடப்பாவி, அழகான பொண்ணைப் பார்த்து எப்படிடா இப்படிச் சொல்ல மனசு வந்தது?)* சொல்லிப் பார்த்தேன், திருந்தலை நேரா மிஸ்கிட்ட போய் கம்ப்ளைண்ட் பண்ணிட்டேன். மிஸ் அடி பின்னி எடுத்துட்டாங்க. *(நல்லா வேணும்.)* காலேஜ் படிக்கும்போது ஒரு பையன் என்னை லவ் பண்றேன்னு சொன்னான். நேரா எங்கப்பாகிட்ட சொன்னேன். எங்கப்பா அவனைக் கவனிக்க அனுப்பிட்டாரு... *(எப்படி?)*''

''லவ்ன்றது மகிழ்ச்சி, கவலை, ஜாலி இப்படி எல்லா ஃபீலிங்ஸையும் வெளிப்படுத்தறதுதான். இதை வெளிப்படுத்தறதுக்குச் சரியான ஆள் கிடைச்சா அவரைத்தான் லவ்வர்ன்னு சொல்றோம்... *(ஓ...! அப்படியா?)*

நீங்க யார்கிட்ட இப்ப இதெல்லாம் வெளிப்படுத்திக்கிட்டு இருக்கீங்க அருந்ததி? என்று பிரேக் போட்டோம்.

''இதுவரைக்கும் யாரையும் நான் மீட் பண்ணலை. அப்படி மீட் பண்ணா வெளிப்படையா சொல்வேன்.''

''எனக்கு நடிப்பில் சௌந்தர்யாவைப் பிடிக்கும். என் நடிப்புக்கு ஸ்கோப்போட கொஞ்சம் க்ளாமர் இருந்தாலும் தப்பில்லை. தமிழில் எனக்குப் பிடித்த ஹீரோ விக்ரம். *(விக்ரமின் அடுத்த படத்துக்கு ஹீரோயின் ரெடி!)*

சாப்பாடு அயிட்டத்தில் சிக்கன் பர்கர், *(ரொம்ப டேஸ்ட்டா இருக்கே)*, கோபி மஞ்சூரியன் என்னோட பேவரிட். மேகி நூடுல்ஸ் தயார் பண்றதுல நான் எக்ஸ்பர்ட். *(இது ரொம்ப ஈசியாச்சே!)*

திகில் நாவல் படிக்கறது ரொம்பப் பிடிச்ச விஷயம். *(தேவதைக்குப் பிடித்தமான பேய்!).''*


இதெல்லாம் ஓ.கே. எப்ப அம்மி மிதிச்சு, அருந்ததி பார்க்கப் போறீங்க அருந்ததி?

''ஸ்டாப், ஸ்டாப், விட்டா நீங்களே மந்திரம் சொல்லி, கல்யாணம் பண்ணி வைச்சுருவீங்க போல? இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா முன்னேறி வந்துகிட்டிருக்கேன். அதுக்குள்ள என்னைக் கல்யாணம் பண்ணி வீட்டுக்கு அனுப்பணும்னு முடிவு பண்ணிட்டீங்களா? (ஏன் இந்தக் கொலை வெறி?) என்னை சரியா புரிஞ்சுக்கிட்டு ஒருத்தர் வர்ற வரைக்கும் நோ மேரேஜ். அதுவரைக்கும் இந்த அருந்ததி சினிமாவில் 'தீ'யா வேலை செய்வா....''

-ராகவ்குமார்



நான் சென்சிட்டிவான பொண்ணு!



இஷாந்த் இன்னிங்ஸ்!

இப்போதெல்லாம் இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான கிரிக்கெட் போட்டிகள் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வருகின்றன. கடந்த பத்து வருடங்களில் ஆஸ்திரேலிய அணியை அதிகமாகத் தோற்கடித்த அணி, இந்தியாதான். ஆஷஸ் தொடரை விடவும் பார்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான போட்டியில்தான் அதிக விறுவிறுப்பு உள்ளதாக உலகெங்கிலுமுள்ள கிரிக்கெட் ரசிகர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இதற்கு முதலில் நாம் நன்றி சொல்ல வேண்டியது கங்குலிக்கு. 2001ல் இந்தியச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய அணி, டெஸ்ட் தொடரில் 1-2 என்கிற கணக்கில் தோற்றுப் போனது. அன்று தொடங்கிய போட்டி மனப்பான்மைதான் இரு நாடுகள் ஆடும்போதும் மிகவும் சுவாரசியமான ஆட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்றன. அப்படி ஒரு மயிர்கூச்செறியும் டெஸ்ட் போட்டிதான் மொஹாலியில் நடந்துமுடிந்திருக்கிறது. அதற்கு இணையான ஒரு த்ரில்லர் படமோ நாவலோ இல்லை.

ரிக்கி பாண்டிங் தலைமையில் இதுவரை ஆஸ்திரேலியா, இந்தியாவில் ஒரு டெஸ்டில்கூட வெற்றி பெற்றதில்லை. அதற்கான வேளை வந்த போது இரும்புக்கதவு போல நின்று ஆஸி.யின் வெற்றியைத் தடுத்து நிறுத்தினார்கள் லக்ஷ்மணும் இஷாந்த் சர்மாவும். இதில் இஷாந்த், முதல்நாள், நோ பால்களாகப் போட்டு மானத்தை வாங்கினார். ரன்களும் தாறுமாறாகக் கொடுத்து ஏன்தான் இவரை

அணியில் சேர்த்தார்களோ என்கிற பதை பதைப்பை உருவாக்கினார். ஆனால், அடுத் தடுத்த நாட்களில் விஸ்வரூபம் கொண்டார். முதல் இன்னிங்ஸில் நைட் வாட்ச்மேனாக வந்து ஒருமணிநேரம் ஆடி, ஆஸி. வீரர்களை வறுத்தெடுத்தார். அப்போது யாருக்கும் தெரியவில்லை. இறுதிநாளில் இவரே ஆஸி.யின் பெரிய வில்லனாக மாறப் போகிறார் என்று. இஷாந்த் டெஸ்ட் வாழ்க் கையில் இது மிகவும் திருப்புமுனை.

ஆஸ்திரேலிய அணியினர் சச்சினைக் காட்டிலும் அதிமாகப் பயப்படுவது லக்ஷ் மணின் ஆட்டத்துக்குத்தான்.

கொல்கத்தா டெஸ்டுக்கு (2001) முன்பு வரை லக்ஷ்மணுக்கு இந்திய அணியில் நிரந்தர மான இடம் கிடையாது. மிடில் ஆர்டர், ஓபனிங் என்று மாறிமாறிப் பந்தா டப்பட்டார். அதற்கு முந்தைய வருடம் சிட்னி டெஸ்டில் 167 ரன்கள் எடுத்தபோதும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. பிறகு மீண்டும் உள்ளூர் போட்டி களில் சிறப்பாக ஆடி, அணிக்குள் வலுவான இடத்தைப் பிடித்தார் லக்ஷ்மண். கொல் கத்தா டெஸ்டில் மூன்றாம் நாள் ஜோடி சேர்ந்த லக்ஷ்மணும் திராவிடும் அடுத்தநாள் முழுக்க அவுட் ஆகாமல் ஆடியபோது கிரிக்கெட் உலகம் லக்ஷ்மணின் திறமையைக் கவனிக்க ஆரம்பித்தது. சச்சினுக்கு இணை யான மதிப்பைத் தம் திறமையால் பெற்றார் லக்ஷ்மண்.

எப்படி ஜாவித் மியாண்டடின் கடைசிப் பந்து சிக்ஸர், பாகிஸ்தான் கிரிக்கெட்டின் தலையெழுத்தையே மாற்றியதோ அதுபோல இந்திய டெஸ்ட் அணி இன்று தரவரிசைப் பட்டி யலில் முதலிடத்தில் இருப்பதற்கு முக்கியக் கார ணம், 2001 கொல்கத்தா டெஸ்ட்டில் அடைந்த வெற்றி.

உலகின் மிகச்சிறந்த டெஸ்ட் என்கிற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இதன் டி.வி.டி. இன்றும் விற்பனையில் சக்கை போடு போடுகிறது. இப்போது, மொஹாலி டெஸ்ட். இதனால் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு



ஒரு பெரிய விளம்பரமும் முக்கியத்துவமும் கிடைத்திருக்கிறது. முக்கியமாக, இந்தியா-ஆஸ்திரேலியா இடையே நிறைய டெஸ்ட் போட்டிகள் அதிகம் நடக்க வாய்ப்பு உண்டு. எந்தச் சூழ்நிலையிலும் ஓர் அணியால் வெற்றியைத் தொடமுடியும் என்கிற பாடத்தை கொல்கத்தா, மொஹாலி டெஸ்ட் போட்டிகள் கற்றுத் தந்துள்ளன. டெஸ்ட் கிரிக்கெட் நீடூழி வாழும் என்கிற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது.

கல்கி கிளினிக்

முராரி, சேலம்.

இரவில் தூங்கி விட்டு, காலையில் கண் விழித்தவுடன் காலை நீட்டினால், கால் நரம்புகள் சுருக்கிக் கொண்டு பயங்கரமாக வலிக்கிறது. என்ன காரணம்?

மூளை மற்றும் நரம்பியல் நிபுணர் வி. நாகராஜன்:

''காலை எழுந்தவுடன், கால் நரம்புகள் சுருக்கிக் கொண்டு வலிக்கிறது என்றால், நிம்மதியான தூக்கம் இரவில் கிடைக்கவில்லை என்று அர்த்தம். எந்தப் பிரச்னையும் இல்லாமல், இரவு நேரத்தில் ஆழ்ந்த தூக்கம் தூங்கினால்தான், மூளைக்குப் போதிய ஓய்வு கிடைக்கும். ஆழ்ந்த தூக்கம் இல்லை என்றால், மூளை தூக்கத்திலும் செயல்பட்டுக் கொண்டு இருக்கும். இதனால், இரவில் தசைகள் இறுகி, கை கால்களை முறுக்கிக் கொள்வார்கள். பாதிப்பு பெரிதாக இல்லை என்றாலும், வலி இருக்கும். தசைகளைத் தளர்த்தி இரவு நேரத்தில் ஆழ்ந்த தூக்கம் தூங்கினால்தான், தசைகளுக்குப் போதிய எனர்ஜி கிடைத்து மறுநாள் அவை சுறுசுறுப்புடன் செயல்பட ஆரம்பிக்கும். கால் நரம்பு வலிக்கு, நரம்பியல் நிபுணரின் ஆலோசனை பெற்று மாத்திரைகளை உட்கொள்வது நல்லது.''

என். பாலகிருஷ்ணன்,

மதுரை.

என் கண்ணில் புரை ஏற்பட்டுள்ளது. நான் ஒரு



உங்கள் சந்தேகங்களை 'கல்கி கிளினிக்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க... kalki@kalkiweekly

கண் மருத்துவரிடம் சென்றபொழுது, அறுவை சிகிச்சை இப்போது தேவையில்லை. ஆறு மாதங்கள் கழித்து செய்து கொள்ளலாம் என்று சொன்னார். கண் புரையை அறுவை சிகிச்சை செய்து கொள்ளாமலேயே நீக்கிவிட முடியுமா?

கண் மருத்துவர் ஜெயஸ்ரீ:

''கண் புரை அதாவது, cataract என்பது ஒருவரது கண்ணில், எந்த இடத்தில் இருக்கிறது, அது எந்த அளவு இருக்கிறது, எவ்வளவு தடிமனாக இருக்கிறது, நோயாளியின் வயது எவ்வளவு, அவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா, என்று பல விதமான பரிசோதனைகளைச் செய்து பார்த்து விட்டுத்தான் கண் புரை நீக்கும் அறுவை சிகிச்சையை உடனடியாகச் செய்ய வேண்டுமா அல்லது சற்றே தள்ளிப் போடலாமா என்பவற்றை முடிவு செய்ய முடியும். கண்களில் கண்ணாடி போட்டு சரி செய்து கொள்ளலாம், ஆனால், எதையுமே நேரடியாகப் பார்க்காமல் சொல்ல முடியாது.''

பேத்திக்கு ஆகிறது என்பதால், நீங்கள் அதிகம் கவலைப்பட்டுக் கொள்ள வேண்டாம். அவள் வளர வளர இந்தப் பிரச்னை நிச்சயம் சரியாகிவிடும். கஸ்தூரி மஞ்சளை மட்டுமே பயன்படுத்தாமல், சித்த வைத்திய முறையில் நலங்கு மாவு என்று ஒன்றைச் சொல்லுவோம், அதைத் தயாரித்து உடல் முழுதும் பூசித் தேய்த்துக் குளித்தால் இந்தப் பிரச்னை போய்விடும். நலங்கு மாவு தயாரிக்கும் முறையைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்: வெட்டி வேர், விளாமிச்ச வேர், கோரைக் கிழங்கு, கார்போக அரிசி, கஸ்தூரி மஞ்சள், சந்தனம், பாசிப் பயறு இவற்றை



நாகராஜன்



ஜெயஸ்ரீ



ப்ரியதர்ஷிணி



உடல் ரோமம் ஒழியுமா?

சுப்ரமணியன், நவி மும்பை

என் ஆறு வயது பேத்திக்கு உடலெல்லாம் அதிக அளவில் ரோமம் இருக்கிறது. கஸ்தூரி மஞ்சளைப் பூசிக் குளித்தும் பலனில்லை. என்ன செய்யலாம்?

சித்த மருத்துவர் ப்ரியதர்ஷிணி:

''ஆறு வயது தான் உங்கள்

எடுத்துக் கொண்டு நைசாக அரைத்துத் தினமும், குளியல் பொடி போல பயன்படுத்தி வந்தால், சருமத்தில் மென்மை கூடும், ரோமமும் நாளடைவில் அகன்று விடும். சில பேருக்கு, hormonal imbalance ஏற்படுவதால் கூட ரோமப் பிரச்னை இருக்கலாம். மருத்துவரிடம் காண்பித்துப் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.''

அனுப்பலாம். உங்கள் செல்போனில், kacli என்று டைப் செய்து கேள்வி, பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.



கல்கி விஸிட்

NAAC அங்கீகாரத்துடன் தன்னாட்சி உரிமமும் கொண்டது ஸ்ரீசரஸ்வதி தியாகராஜா கல்லூரி (STC). பொள்ளாச்சியிலிருந்து பழனி பாதையில் செல்லுகையில் ஒரு பக்கம் பரம்பிக்குள அணைக்கட்டிலிருந்து வெளியேறும் நீரோடையை அணைத்தபடி இருக்கிறது இந்தக் கல்லூரி. ஏ.சி.யில் நிற்பது போன்ற குளுகுளு குளிர்ச்சி. படிப்பும் பாரம்பரியக் கலைகளும் கைகோத்திருக்கும் எழிற்சோலை இக்கல்லூரி. கல்கி விஸிட்டில் நாம் கண்ட ஆவணங்களிலிருந்து சில ஆதாரங்கள்...



தித்திக்கும் தியாகராஜா!

ரசித்த எஸ்.எம்.எஸ்...........

ஹலோ Mental நலமா?
கோவிச்சுக்காதீங்க...

M - மேன்மையானவர்
E - எளிமையானவர்
N - நேர்மையானவர்
T - தயாள மனசுக்காரர்
A - அன்பானவர்
L - லிமிட் மீறாதவர்

ஐய்யோ... Mental முகத்தில்
சிரிப்பப் பாரேன்...

- எம்.சிவக்குமார், BBM



"சராசரியா மனிதனுக்கு, கால் எவ்வளவு நீளம் இருக்கணும்?"

"கீழே தரையை உரசும் வரை இருக்கணும்."

"உன் பேரு என்ன?"

"குமரவேல் சார்..."

"வீட்ல எப்படிக் கூப்பிடுவாங்க?"

"பக்கத்துல இருந்தா மெதுவா கூப்பிடுவாங்க, தூரத்துல இருந்தா சத்தமா கூப்பிடுவாங்க சார்..."

"மன்னா! எதிரிநாட்டு மன்னன் தங்களைப் போருக்கு அழைத்து SMS அனுப்பி உள்ளார்..."

"Message Sending Failed"-னு பதில் அனுப்பி விடுங்கள் அமைச்சரே!"

கா.சிவப்பிரகாஷ், II- BCA.,





மழை

காற்றுக்கு
கவிதை வாசிக்கக்
கற்றுக் கொடுத்தது
வசப்படாத வானம்!
வசப்பட்டதும்
வாரித் தெளித்தது
மண்ணின் மீது
உயிர்ச் சாரலை.

A.ஆர்த்தி,
I-M.Com.,



நூலகம்

கொள்கை முரணிருந்தாலும்
அருகருகே அமைதியாய்
உரசிக் கொண்டுள்ளன
நூலகத்தில் நூல்கள்.

M.அருள்செல்வன்,
II-M.Com.,



STC-யின் சிறப்பம்சம்

★ பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளுக்கு இடையேயான சிறந்த செயல்பாட்டுக்காகச் சிறந்த கல்லூரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

★ நலிந்த நாட்டுப்புறக் கலைகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் விதமாக பொங்கல் விழாவில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளான தோற்பாவை, நிழற்பாவைக் கூத்து மாணவர்களிடையே நிகழ்த்தப் பட்டன.

★ ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மனரீதியான சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் உளவியல் கலந்தாய்வு மையம் செயல்படுகிறது.

★ பணிபுரிகின்ற பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் குடும்ப உறுப்பினர்களை அழைத்து அவர்களோடு அன்பு பாராட்டும் விதமாக, சங்கமம் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள்.

★ STC வேலைவாய்ப்பு மையத்தின் மூலமாக 374 மாணவர்களுக்கு ABN AMBRO, WIPRO, HDFC, ICICI, VASAN EYE CARE போன்ற கம்பெனிகளில் வேலைகள் கிடைத்துள்ளன.



திறக்காத புத்தகம்

குறுகிய ஒற்றுமையைப்
புரட்டத்தெரியாத வாசகியாய்...
தொலைக்கப்பட்ட துணுக்குகள் ஒவ்வொன்றும்
உன்னை நீந்திச்செல்லும்போது
நொடிந்தவைகளாய் என் சிதறல்கள்...

ச.சரண்யாதேவி, III-B.Com 'B'

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்





★ ச.இராஜலதா



சுத்துற சுத்துல பானை செஞ்சு சோறாக்கிடுவான் போலிருக்கே!





வழுக்கும் வாழ்க்கையிலும் வசந்தத்தை எட்டிப் பிடிக்க இதுதான் நல்ல ஒத்திகை!



மாட்டுக்கு மாறுங்க ஸார்!

ஓவியம்: அ.காளிமுத்து II-BBM



செய்தி சித்திரம்:
ஆர்.பாலா.



தலைமைப் பண்புகளைப் புகட்டுவதும் யோகா மூலம் தன்னிலையை உயர்த்திக் கொள்வதுமான பயிற்சிகளை இங்கு மாணவர்களுக்கு அளிக்கிறோம். மாணவர்களின் மூலம் அவர்களின் குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்துவது இக்கல்லூரியின் உன்னத நோக்கங்களுள் ஒன்று.

- ம.அ.விஜயமோகன், தலைவர்

2004 லிருந்து 2010வரை மொத்தம் 2775 மாணவ-மாணவியர்களுக்கு 1.45 கோடி ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. உதவித் தொகையின் மூலம் அவர்கள் கல்வியின் உச்சத்தை எட்டிவிட உற்சாகப்படுத்துகிறோம். படிப்புக்கும் கலைகளுக்கும் சேர்த்தே இந்த உதவித் தொகை!

- தி.சேதுபதி, துணைத்தலைவர்





2020-ல் தேசிய அளவில் இக்கல்லூரி சிறந்து விளங்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியக் கனவு. வியாபார நோக்கமற்று அறிவிலே தெளிவு, அகத்திலே அன்பு மூலம் மாணவர் சமூகத்தில் அமைதிப் புரட்சி; இதுதான் எங்கள் பயணம்.

- மு.சேட்டு, தலைமை இயக்குநர்.

13வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது இக்கல்லூரி... மாணவர்களுக்கு, 1.தரமான கல்வி, 2.செயல்முறைக் கல்வி 3.சமுதாயத்தில் அங்கமாக்குதல், 4.அறிவு விரிவடைய ஆய்வு, 5. பணிக்கு உரியவராகப் பரிணமிக்கச் செய்தல் - இந்த ஐந்து அம்ச செயல்பாடுகளும் எங்கள் ஆதார நிலைப்பாடு.

-முதல்வர், வே.குழந்தைசாமி





1997-ல் துவங்கப்பட்ட இக்கல்லூரி ISO தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. நடப்பாண்டில் மட்டும் 374 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். MBA-யில் 100 சதவிகித வேலைவாய்ப்பு இங்கு உத்திரவாதம். மாணவர்களை முழுமையாக்கும் அறவியல் பண்பாட்டு வகுப்பு இங்கு விசேஷம்.

- எஸ். வெங்கடேஷ், செயலாளர்

நீங்கள் கேட்டவை

தராசு

● ம.ஜானகிராணி, சென்னை-101

? இந்தியா முழுவதும் மதுவிலக்கு அமல் படுத்தப்படுவது உடனடியாக சாத்தியமில்லை என மத்திய சமூக நீதித் துறை இணை அமைச்சர் நெப்போலியன் சொல்கிறாரே?

! "உடனடியாக" என்ற வார்த்தை கொஞ்சம் தெம்பளிக்கிறது. முதுகெலும்பு உள்ள யாரோ ஒருவர், வருங்காலத்தில் இந்தியாவில் தலைமை ஏற்கும்போது, மதுவிலக்கு சாத்தியம் என்ற நம்பிக்கையை அளித்த நெப்போலியனை நிச்சயம் பாராட்டியே தீர வேண்டும்.

● பி.இசக்கிப் பாண்டியன், திருநெல்வேலி.

? உண்மையைச் சொல்லுங்க - அக்டோபர் 18 அன்று மதுரை எப்படி இருக்கும்?

! மதுரை திக்குமுக்காடும். ஜெ. வீர முழக்கம் செய்வார். மறுநாள் தினசரிகளில் எட்டுபத்திச் செய்தி வரும். கூடவே ஜோசியங்களும், ஹேஷ்யங்களும். வழக்கம்போல் மிஸ்டர் பொதுஜனம் அல்லல்பட்டு, அவதிப்பட்டு தன் அன்றாட வாழ்வை நொந்துகொண்டிருப்பார்.

● கு.அருணாசலம், தென்காசி ☐

? புதுக் கவிதைகள் அதிகமாகக் காதல் தளத்தில்தானே பயணிக்கின்றன?

! காதல் என்ற அற்புதமான உணர்வைப் பற்றி எவ்வளவு கவிதைகள் எழுதினாலும் தகும். சர்ச்சைகளற்ற, ஏற்றத் தாழ்வுகளற்ற உலகின் தொடக்கப் புள்ளி அது. காதலை எழுதுவோர் மெல்ல மெல்ல மனம் விரிந்து, உலகு தழுவிய மனித நேய நோக்கோடு கவிதைகளை எழுதுவார்கள். அதுதான் மெய்யான காதலின் சக்தி!

● எஸ்.கதிரேசன்,
பேரணாம்பட்டு

? தமிழக அரசு ஊழியர்கள் ஒவ்வொரு துறையிலும் ஏதேனும் ஒரு காரணத்தைச்



*'தல'க்குத் தெரியும்!

அக்டோபர் 18, மதுரை எப்படி இருக்கும்?

சொல்லி, சுழற்சி முறையில் வேலை நிறுத்தம், கண்டன ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தி தமிழக அரசுக்குத் தொந்தரவு தருகிறார்களே?

!தேர்தல் நெருங்கும் சமயத்தில் பத்து கேட்டால், எட்டாவது கிடைக்கும் என்பதால் கையை முறுக்குகிறார்கள்.

● து.இராமகிருஷ்ணன், ஏரகுடி.

?அரசின் சாதனைகளைக் கண்டு பொறாமைப்படுவதாக மார்க்ஸிஸ்ட் கட்சிக்குக் கருணாநிதி கண்டனம் தெரிவித்திருப்பது பற்றி?

! பொறாமைப்படுகிற அளவில் தி.மு.க. ஆட்சி இருந்தால் கம்யூனிஸ்டுகள் கைகோக்கவே நினைப்பார்கள். அதுதான் அவர்களுக்கும் ஆதாயம். வேதனைப்படும் நிலையில் இருப்பதால்தான் விலகி நிற்கிறார்கள். எனவே கண்டனம் கண்மூடித்தனமானது.

● த.சத்தியநாராயணன், அயன்புரம்.

? நடிகர் அஜித் அ.தி.மு.க.வில் சேரப்போகிறாராமே?

! ஒரு திருமண விழாவில் ஜெ.வை அஜித் சந்தித்ததை வைத்துக் கட்டப்படும் கதை இது. மார்க்கெட் போனவர்கள்தான் அரசியலில் தஞ்சமடைவார்கள் என்பது 'தல'க்கு நன்றாகவே தெரிந்திருக்கும்.

● ரா.ராஜேஸ்வரி, ஏரகுடி.

? இந்திய ராணுவத்தின் வரலாற்றில் சாதனைப் பெண்



* நிரந்தர நினைவுகள்

விருது பெற்ற திவ்யா அஜித்குமார் வாயிலாக பெண்ணினத்துக்கே பெருமைதானே?

! இன்று திவ்யா பெருமைப்படலாம்; பல்வேறு துறைகளில் பல திவ்யாக்கள் உருவாகிறபோது பெண்ணினம் பெருமைப்படலாம்.

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி-21

?தமிழில் பெயர் வைக்கும் சினிமா படங்களுக்குச் சலுகை அளித்ததால் சினிமா துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளாரே?

* பெருகும் பெருமை!



! தமிழ்ப் படங்களில் தமிழ்ப் பண்பாடு என்பது தலைப்பு உள்பட எங்குமே மதிக்கப்படாதபோது, சலுகை என்பது அபத்தம். முதல்வர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கிறார். இது வளர்ச்சியல்ல; வீக்கம்!

● ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி.

? தமிழ்நாட்டில் வன்னியர் இன மக்களும், தலித் இன மக்களும் ஒன்றுபட்டுத் தேர்தலைச் சந்தித்தால்

126

❒ ரூ.150 பரிசு பெறுபவர்: கு.அருணாசலம், தென்காசி,

★ ரூ.75 பரிசு பெறுபவர்: ராமன் நீலா, மன்னார்குடி.

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், KAGQA என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

தொகுதிகளில் வெற்றி உறுதி என்கிறாரே அன்புமணி?

! தலித் தலைவர்களான கிருஷ்ணசாமியும், திருமாவளவனும் பரஸ்பரம் கை குலுக்கிக் கொள்வதில்லை. வன்னிய அமைப்பு ராமமூர்த்தியும் ராமதாஸும் எலியும் பூனையுமாய்... இவர்களிடையே ஒற்றுமை சாத்தியமில்லாதபோது, அன்புமணி சொல்வது சாத்தியமானால் அற்புதம்தான்! அந்த அற்புதம் நிகழாமல் பிரதான கட்சிகள் கவனித்துக்கொள்ளும்.

● ஜி.லட்சுமி வாசுதேவன்,
வேளச்சேரி.


அக்டோபர் அதிரடி!



? ''எம்.எஸ்.ஸுக்கு இன்னும் ஏன் சிலை வைக்கவில்லை? தமிழ்நாட்டில் அவரை மறந்துவிட்டோம் என்பதுதானே இதற்குப் பொருள்?'' என்று ஜெம் கிரானைட் வீரமணி கேட்டுள்ளாரே?


! தமக்குச் சிலையோ, நினைவுச் சின்னமோ, தம் பெயரில் அறக்கட்டளையோ அமைக்க வேண்டாம் என்று எம்.எஸ். தமது உயிலிலேயே விருப்பம் தெரிவித்துள்ளார். அதை மதிப்பதே முறை. அவரது இசைதான் நிரந்தரமாக அவரை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறதே.

● இரா. இராஜேந்திரன்,
கடலூர்.


நிறைவேறா அற்புதம்!

? மூட நம்பிக்கை குப்பைகளைக் கொண்டு வந்து, காசு கொடுத்து கல்கி வாங்கும் வாசகனிடம் கொட்டலாமா?

! நாத்திகனுக்குக் கடவுள் என்பது மூடநம்பிக்கை. பரதேசிக்கு வாழ்க்கை என்பதே மூட நம்பிக்கை! ஒருவனது மூட நம்பிக்கை மற்றொருவனது ஆழ்மனத்தின் உறுதியான நம்பிக்கை. நீங்கள் மூட நம்பிக்கையாகக் கருதக்கூடிய சில பக்கங்களை ஒதுக்கிவிட்டு, கல்கியின் இதர பக்கங்களைப் படித்து மகிழலாமே. அவை நீங்கள் தரும் காசைவிட பல மடங்கு மதிப்புடையன ஆயிற்றே.


தரும் தெம்பு

● ராமன் நீலா,
மன்னார்குடி ★

? எந்திரன் படத்துக்குத் தேவையில்லாத விளம்பரம் செய்கிறார்கள். விளம்பரமே இல்லாமல் பல படங்கள் சாதனை புரிந்து வருகின்றனவே?

! எந்திரனில் முதலீடு கண்மூடித்தனமானது. விளம்பரமும் கண்மூடித்தனமாக இருந்தால்தான் நஷ்டத்தைத் தவிர்க்க முடியும் என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கும். அதன் விளைவுதான்!

● ப.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி

? இலவச பஸ் பாஸ் பயன்படுத்தும் மாணவர்களிடம், நடத்துனர்கள் கருணையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளதே?

! அதை உயர்நீதிமன்றம் எடுத்துச் சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமானது வேதனைக்குரியது. இந்த மாணவர்களுக்கென்று சிறப்புப் பேருந்து விடுவது, கல்வி நிலையங்களின் நேரங்களை மாற்றி அமைப்பது போன்ற ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் போக்குவரத்து-கல்வித் துறையினர் கைகோப்பதும், நடத்துனர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதும் அவசியம். ●

சட்டம் என்ன



''நம் நாட்டில் ஒழுக்கமும் நன்னெறியும் (Ethical) சார்ந்த விஷயமாகக் குழந்தைப் பிறப்பு இருக்கிறது. செயற்கைக் கருத்தரிப்பும், வாடகைத் தாய் கருத்தோட்டமும் சமூகத்திலும் சட்டரீதியிலும் எதிர்காலத்தில் எழுப்பக்கூடிய பிரச்னைகள் குறித்த தெளிவு தேவை'' எனப் பேசத் தொடங்கினார் வழக்கறிஞர் கீதா ராமசேஷன்.

''ஒரு தம்பதிக்குக் குழந்தைப்பேறு இல்லாத நிலையில், பெண் உடல் கர்ப்பத்தைச் சுமக்க முடியாத பட்சத்தில், கணவர் விந்தணுக்களை வேறொரு பெண்ணின் உடலில் செலுத்தி, அவள் மூலமாகக் குழந்தை பெறுவது ஒரு முறை. கணவர் விந்தணுவையும், மனைவி கருமுட்டையையும், சோதனைக் குழாயில் சேர்த்து கரு உருவாக்கி, பின்னர் குழந்தை பெறும் தகுதியிலுள்ள பெண்ணின் வயிற்றில் கரு விறக்கம் செய்து குழந்தை பெறுவது மற்றொரு முறை.


ஆண், குழந்தை பேறுக்குத் தகுதியில்லாவிடிலும், மனைவி மூலம் கணவர் ஒரு குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பினால் வேறோர் ஆணின் விந்தணு, மனைவியின் கருமுட்டை ஆகியவற்றை இணைத்து, சோதனைக் குழாயில் வைத்து பின்னர் மனைவியின் வயிற்றில் கருவை வளர்க்கச் செய்வது மற்றொரு முறை. இப்படி வழிகள் இருக்கின்றன.

நான் ஏற்கெனவே சொன்னது போல் குழந்தை, உணர்வுபூர்வமான விஷயம். ஒரு வாடகைத் தாயின் வயிற்றில் குழந்தை வளரும்போது, அந்தத் தாய் அதை ஓர் உதவியாகவோ அல்லது வியாபாரமாகவோ கருதாமல், உணர்வுபூர்வமாகக் கருதுவது நன்று.

குழந்தைப் பிறந்த பிறகு, ''ஸாரி, நானே வளர்த்துக்கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டால் அந்தத் தம்பதிகள் மனநிலை என்ன பாடுபடும்? பெறும் குழந்தையை வாடகைத்தாய் தம்பதிகளிடம் கட்டாயம் கொடுத்தே தீர வேண்டும் என்று ஒப்பந்தம் (Contract) ஏதேனும் இருக்கிறதா? அப்படியே இருந்தாலும் அந்த ஒப்பந்தம் சட்ட சம்மதமில்லாமல் அமல் படுத்தமுடியுமா?

வாட கைத்தாய் விவகாரம் கிட்டத்தட்ட உடலை வாடகைக்கு விடுதல்தான். குழந்தை இல்லாத தம்பதி மகிழும் விதத்தில் வாடகைத் தாய் செயல்படுகிறாள். அப்படியிருக்க உடலை வாடகைக்கு விடும் பாலியல் தொழிலாளி இ.பி.கோ.வுக்குள் வரும் போது, உடலை வாடகைக்கு விட்டு, குழந்தை பெற்றுத் தரும் பெண் செய்வது சரியா... தவறா?

எதிர்காலத்தில் வாடகைத்தாய் விவகாரம் பல குழப்பங்களை ஏற்படுத்தும். எனவேதான், செயற்கைக் கருத்தரிப்பு, வாடகைத்தாய் ஆகிய விஷயங்களில் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய சட்டம் உரு



...சொல்லுது?

வாடகைத் தாய்

வாக்கப்பட வேண்டும். 'நான் தான் குழந் தையைப் பெற்றுக்கொடுத்தேன். எனவே உங்கள் சொத்தில் பங்கு வேண்டும்' என்று வாடகைத் தாய் கேஸ் போட்டால் சட்டம் என்ன சொல்லும்?

இதுபோன்ற பிரச்னைகளில் மிகவும் ஆர்வத்தைக் கிளரும் வாரிசு குறித்த சட் டம் திருத்தப்பட வேண்டுமா? அதேசமயம் சமூகம் தெளிவு பெறும் வகையில் சட்டம் தேவை. இது தொடர்பாக அரசு எடுத்த முனைப்பு, முழுமை பெறாமல் நிற்கிறது.

எனவே, பிரச்னைகள் எழ வாய்ப்பிருக் கிறது. இப்போது நடைபெறும் வாடகைத்தாய் விவகாரங்கள் வெறும் புரிந்துணர்வு அடிப் படையில்தான் நடக்கிறது. இப்போது பெரும்பாலோர் உறவினர்கள், மற்றும் தெரிந்தவர்களையே வாடகைத் தாயாக ஏற்றுக்கொள்ளத் துணிகிறார்கள்.

எதிர்காலத்தில் இது முழுக்க சாத் தியமில்லாமல் போகலாம். குஜராத்தில் பாட்டி தம் பேத்திக்காகக் கருவைச் சுமந்தி ருக்கிறார். அம்மாநிலத்தில் பணத்துக்காக வாடகைத்தாயாக இருப்பதற்கு நிறைய பேர் கிராமங்களில் இருக்கிறார்கள் என் பதை பத்திரிகையில் படித்திருக்கிறேன்.



கீதா ராமசேஷன்

எனவே, வாடகைத்தாய் சட்டம் போட் டாலும் எடுபடுமா? மேலும் குழந்தை பெறும் தகுதியில்லாத கணவ னால் மனைவி செயற்கைக் கருத்தரிப்பு மூலம் குழந்தை பெற்றுக்கொண்ட பின், அந்த ஆணுக்குப் பிற்காலத்தில் உள வியல் ரீதியான பிரச்னைகளுக்கு என்ன தீர்வு?

ஜப்பானியத் தம்பதி இந்திய வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றபோது, பாஸ்போர்ட் கொடுப்பதில் பிரச்னை எழுந்தது. இறுதி யில் சுப்ரீம் கோர்ட் பிறந்த குழந்தை 'இந்தி யன்'தான் என்று சொல்லி பாஸ்போர்ட் வழங்க உத்தரவிட்டது. இதுபோன்ற பல சிக்கல்கள் எதிர்காலத்தில் எழலாம். வாட கைத் தாய் என்பதேகூட ஆண்கள் ஆதா யத்துக்காக ஒரு பெண்ணை நேர்மையற்ற முறையில் பயன்படுத்துவதற்குச் சமமா கும் என்ற கருத்தும் உருவாகிறது. இது போன்று எழும் பல சமூகப் போராட்டங்கள், பிரச்னைகள் ஆகியவற்றுக்குத் தீர்வாக சட்டம் அவசியத் தேவை'' என்றார் கீதா ராமசேஷன்.

- ப்ரியன்



உனக்கு நீயே எழுது ஒரு லெட்டர்





எவ்வளவு பெரிய டைரக்டர் பாலசந்தர். ஒரு ஃபோன் போட்டு 'ஆல் த பெஸ்ட்'னு ஒத்த வரியை ஓடைச்சுப் போட்டு போயிருக்கலாம். எதுக்கு மெனக்கெட்டு கடிதம் எழுதி ஆள் மூலம் கொடுத்தனுப்பணும்? அந்தச் சிரத்தை, எழுத்தின் ஸ்பரிசம் எல்லாம் சேர்ந்து எழுதியவரின் அன்பின் வாசம் அதில் பரவிக்கொண்டே இருக்கும். கடிதம் என்பது உறவின் ஆவணம். 'ஊர்வசிக்காக இந்தப் படம் பார்த்தேன்; சபாஷ்! உங்களுக்காக ஒரு கதாபாத்திரம் செய்ய நான் யோசிக்கும்போதே பயம் வருகிறது. நல்லா வருவமா நீ'ன்னு வனஜா கிரிஜா படம் பார்த்துட்டு கடிதம் எழுதியிருந்தார். இன்னும் அதைப் பத்திரப்படுத்தி இருக்கேன்.

படிக்கிற காலங்களில் நான் வாங்கிய ஆட்டோகிராஃபை அடப்போ எடுத்துப் படிப்பேன். அதுகூட கடிதத்தின் குட்டிதான். எல்லோர்க்கும் முதல் கடிதம் என்பது மறக்க முடியாதது ரெண்டாங்கிளாஸ் படிக்கிறச்ச ஸ்ரீகண்டேஸ்வரம் கோயில் திருவிழாவுக்குப் போயிட்டுக் களைச்சு வந்து கிளாஸுக்கு மட்டம் போட்டுட்டேன். அடுத்தநாள் என் அம்மா எனக்கு எழுதிக் கொடுத்த லீவ் லெட்டர்தான் நான் படித்த எனக்கான முதல் கடிதம். அது இப்படித் தான் துவங்கியது 'சில சாங்கேதிகக் காரணங்களால்...' அந்த வரி இன்னும் கல்வெட்டாய் மனசில் இருக்கிறது.

கேரளாவில் ஜானகிதேவின்னு ஒரு பாடகி. அவருடைய கணவர் 'கைரளி' என்ற கப்பலில் போனார். அந்தக் கப்பல் திடீரெனக் காணாமல் போய்விட்டது. 30 வருடங்களுக்கு முன்னால். இதுவரை சரியான தகவல்கள் இல்லை. தம் கணவருக்கு அவர் தொடர்ந்து கடிதங்களை

எழுதிக்கொண்டே இருந்தார்.

எழுதிய கடிதங்களை எல்லாம் பாட்டாக மேடையில் மெட்டுப் போட்டுப் பாடுவார். திரும்பி வராத அந்தக் கடிதங்களை கணவர் படித்துவிட்டு, சேகரித்து வருகிறார் என்று முழுமையாக நம்பினார். அவரின் வாழ்வை, காதலை அந்தக் கடிதங்கள் காப்பாற்றி வந்தன. பேஜர், செல்ஃபோன் எது வந்தாலும் எதுவும் என்னைக் கவரலை. விரல் வாசத்தைச் சுமந்து வரும் கடிதத்தைப் போல ஒரு கவர்ச்சியான வஸ்து உலகில் உண்டா என்ன?

'ஸ்ரீநாராயண குரு' நாடகத்துக்குக்காக அப்பாவுக்கு அவார்டு கொடுக்கப்போறதா கவர்மெண்ட்டுல இருந்து தந்திக் கடிதம் வந்தபோது... தந்தி-ன்னு சொன்னதும் பாட்டி மயக்கம் போட்டு விழுந்ததை நெனச்சா இன்னும் சிரிப்பு வரும். கடிதங்களிலே வில்லன் ரோல் தந்தி கடிதத்துக்கு உண்டு.

அப்பா ஒருவருக்குக் கடிதம் எழுதி தகவல் கேட்டார். அதிலிருந்த வரிகள் இதுதான். 'சாம்பார் மேம்





காலை எழுந்தவுடன் சிரிப்பு!

15

அக்டோபர் மாத பட்டுப் புடைவைகளைப் பரிசாக வழங்குவோர்:



பொடி குளத்தில் நின்னும் சர்ப்ப ஸத்ரு வனத்திலேக்கு எத்தனை தூரம் உண்டு?' என்ன அர்த்தம்? மலையாளம் தெரிந்தவருக்கும் இது புரியாது. அப்பா கடிதத்திலேயும் தம் அறிவை, கிரியேட்டி விட்டியைக் காட்டுவார். சாம்பார் மணப்பதற்கு மேலே தூவும் பொடி எது? காயம் - பெருங்காயம். குளம் என்பது குளம்தான். சர்ப்ப ஸத்ரு என்றால் என்ன? பாம்பின் ஸத்ரு (எதிரி) யார்? கிரி... ஓ.கே! வனம் என்பது காடு. இப்போ வர்றேன் விஷயத்துக்கு...



அதாவது காயம் குளம் (சாம்பார் மேம் பொடி குளம்) என்ற ஊரிலிருந்து கிரிக்காடு (சர்ப்ப ஸத்ரு வனம்) என்ற ஊருக்கு எவ்வளவு தூரம் நண்பனே? என்று கேட்க விரும்பியதைத்தான் கடிதத்தில் இப்படி வக்கனையான ரசனையா, அப்பா கேட்டிருந்தார்.

நேரு, அண்ணா, கல்கி, கலைஞர், கி.ரா. இவர்களால் கடிதம் இலக்கிய அந்தஸ்து அடைந்தது என்பது கடிதத்தின் கனத்தைக் காட்டுகிறது. சொந்த மொழி சாகாமல் காக்க விரும்பு கிற ஒவ்வொருவரும் இனி மாதத்துக்கு ஒரு கடிதமாவது எழுத வேண்டும் (திரும்பவும் Email லெட்டரான்னு கேட்கா தீங்க). அட ஆளே இல் லையா? உனக்கு நீயாவது எழுதிக்கோ. 'அடேய் சங்கர் ஏன் போனவாரம் அப்படிக் கோபப் பட்டே. அதனால என்ன பிரயோசனம்? சின்னச் சின்ன விஷயத்துக்கு எல்லாம் ஏன் பொய் சொல்ற? தேவையான அவசியமான விஷயத்துக்கு எப்போதாவது பொய் சொல்லு. அவமேல இடிச்சியே ஒரு லாரி சொன்னா உன் இமேஜ் கூடியிருக்கும். அப்படி என்ன ஈகோ? எவ்வளவு பெரிய ஆளுங்க எல்லாம் இருக்கிற இடம் தெரியாம போயிட் டாங்க... நீ எந்த மூலைக்கு... இப்படிக்கு சங்கர்' அட இப்படியாவது கடிதம் எழுதுங்கோ.

வாசகர்களே இந்தத் தொடர் பற்றிய உங்க விமர்சன கடிதங்களையும் நான் சேகரித்து, சிறந்த கடிதங்களை ஆவணமாக்க ஆசைப்படுறேன். சரியோ தப்போ விமர்சன கடிதம் எழுதுங்க...

16 வயசுல என் தம்பி இறந்த துக்கத்திலேர்ந்து என்னை மீட்டது துபாயிலிருக்கும் நண்பர் ஈஸ்ட் கோஸ்ட் விஜயன் எழுதிய, 'ப்ரியமான சகோதரி ஊர்வசிக்கு'ன்னு வந்த ஐந்து பக்கக் கடிதம்தான். இன்னும் இருக்கு பத்திரமா. எனக்கான கடித வாழ்வில்... லாவேட்டன் கடிதங்கள் அவரைப் போலவே சுவாரஸ்யமானது. யார் அந்த லாவேட்டன்?

- தொடரும்

ஊர்வசி போட்டி சில்க்கி சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

அக்டோபர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **09.11.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

.....................பின்கோடு:.....................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

அக்டோபர் - 17

சாம்பார் மேம்பொடி என்பதற்கு அர்த்தம்?

விடையை டிக் செய்யவும்

- [ ] மசாலா
- [ ] பெருங்காயம்
- [ ] வெங்காயம்
- [ ] கைரளி

தமிழ் இசை வளர்ச்சிக்காக ஆற்றிய பணியைப் பாராட்டும் வகையில் சமீபத்தில் கர்நாடக இசைக் கலைஞர் மதுரை டி.என்.சேஷகோபாலனுக்கு, பெருமைக்குரிய ராஜா சர் அண்ணாமலை செட்டியார் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்க் கவிதைகளைக் கொண்டே முழுநேர கர்நாடக சங்கீதக் கச்சேரி செய்தவர் சேஷ கோபாலன். தமிழ்க் கவிதைகளில் அவர் கண்ட இசைத் தன்மை பற்றிக் கேட்டோம்...

''தமிழ் வளர்த்த மதுரையில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே எனக்குத் தமிழுடன் அறிமுகம் ஏற்பட்டுவிட்டது. திருக்குறள், திருப்புகழ், தேவாரம், கந்தர் அனுபூதி போன்றவை எனக்கு ஏழு வயதிலேயே மனப்பாடமாகும்படி செய்துவிட்டனர், பாடம் சொல்லித் தந்த ஆசிரியர்கள். தமிழ் அறிஞர்களான ராயசொ, குன்றக்குடி அடிகளார், கி.வா.ஜ. ஆகியோரின் பேச்சுகளில் அந்த வயதிலேயே மயங்கியவன் நான்.





தமிழுக்

தமிழ் என்ற சொல்லே அழகுதான். அதன் 'ழ'கரமே ஒரு வித்தியாசமான இசையல்லவா? நான் கர்நாடக சங்கீதத் தேர்ச்சி பெறும்போதே

தமிழின் மிகச் சிறந்த கவி
நூல்களில் உள்ள இசை நயத்
உணரமுடிந்தது. என்னுடைய இரு
தாவது வயதில் 'கம்பனின் சந்த இனிமை' பற்
சென்னை ஏ.வி.எம். ராஜேசுவரி கல்யாண மண்
பத்தில் ஒன்றரை மணி நேரம் உரை நிகழ்த்தினே

அதன் பின்னர் ஏன் இந்தப் பாடல்களை
கொண்டே ஒரு முழு நேரக் கச்சேரி செய்யக்கூடா

என்று தோன்றியது. அதன் பிரதிபலிப்பாகத்தான் நான் கம்ப ராமாயணப் பாடல்களைக் கொண்டு நிகழ்த்திய முழு நேரக் கச்சேரி. அதன் பிறகு திருப்புகழ், திருவருட்பா, ஆழ்வார்கள் பாடல், திருவாசகம் ஏன் கண்ணதாசனின் சௌந்தர்யலஹரியின் தமிழாக்கம், அவரின் பகவத் கீதையின் தமிழ்க் கவிதைகள் எனப் பல நிகழ்ச்சிகள் செய்து இருக்கிறேன்.

சங்க இலக்கியப் பாடல்களிலும், தேவார, திருவாசக, நாலாயிர திவ்ய ப்ரபந்தப் பாடல்களிலும் கவிதையுடன் இசையும் சேர்த்தே பாடப்பட்டு இருக்கிறது. அந்தப் பாடல்களுக்கு அந்த நூற்றாண்டுகளில் பக்கவாத்தியமாக உபயோகப்பட்டது யாழ்தான். அந்த நாட்களில் பெரும்பாலான இந்தப் பாடல்கள் மத்திம சுருதியில் பாடப்பட்டு வந்ததால்தான் அந்தக் காலப் பாடல்கள் ஆஹிரி, நவ்ரோஜ், குறிஞ்சி, ஹரி காம்போதி... போன்ற ராகங்களில் அமைந்திருந்தன. பலவிதமான தாள வகைகளும் இருந்ததற்கான

பிரதானமாக வைத்தே பல பாடல்கள் பாடப்பட்டன.

நான் இலக்கியங்களில் ராகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அதை அப்படியே எடுத்துப் பாடுவது உண்டு. இல்லாதவைகளுக்கு அந்தக் கவிதையின் ரசம், பாவம், அர்த்தம் ஆகியவற்றுக்கு ஏற்ப ராகம் சேர்த்துப் பாடுவது வழக்கம். சந்தமும், லயமும் இசைக்கு மிக மிக முக்கியமானவை அல்லவா! அவை பழந்தமிழ்க் கவிதைகளில் ஏராளமாகவே இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

யாழிலிருந்து வீணையை உருவாக்கிய பெருமை தமிழ்க் கலைஞர்களைத்தான் சேரும். வீணை மூலம் இசைக்கு மேலும் எழில் சேர்த்தது தமிழும் அதிலுள்ள கவிதைகளும்தானே?

புதுக்கவிதைகளும்கூட இன்று பிறந்தவை



இசை என்று பெயர்!

சான்றுகள் உள்ளன.

அந்த நாட்களில் இசைக்குக் குழல் பிரதானமாக இருந்திருக்கிறது. புல்லாங்குழலின் துளைகளை முழுவதுமாக மூடியும், திறந்தும் வாசித்தால் வரும் ஸ்வரங்கள் ஹரிகாம்போதியுடையவை. அந்த ராகத்தைப்

அல்ல; அன்று தென்மாவட்டங்களில் இருவர் நல்ல தமிழில் உரையாடுவதைக் கேட்டாலே இசை கேட்பது போல்தான் இருக்கும்.

'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றார் பாரதிதாசன். 'தமிழுக்கும் இசை என்று பேர்' என்று தாராளமாகப் பாடலாம்.'' என்கிறார் டி.என்.சேஷகோபாலன்.

- தேவவிரதன்




• நோபல் பரிசு பெற்ற எட்வர்ட்டுடன்...



1960 தவக்குழந்தைகள்!

அறுபத்து மூன்று வயதான பாப்பாத்திக்கு ஈரோடு மாருதி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் செயற்கைக் கருத்தரிப்பு முறையில் அழகிய ஆண் குழந்தை பிறந்து, தற்போது முதல் வகுப்பு படிக்கிறான்.

என் குழந்தை: என் உரிமை! என்கிற உணர்வுபூர்வமான நோக்கத்துடன், 1996-ல் இந்த மருத்துவமனையில் உதயமானது செயற்கைக் கருத்தரிப்பு மையம். இங்கே வெற்றிகரமாக முதல் குழந்தை பிறந்தது 1998-ல். தமிழ்நாட்டில் சென்னை மாநகருக்கு வெளியே, இதர நகரங்களிலேயே இந்த மருத்துவமனையில்தான் முதல் டெஸ்ட் டியூப் பேபி பிறந்ததாகச் சொல்லப்படுகிறது.



ஐந்து நாட்கள் இன்குபேட்டரில் வைத்து, அதன்பின் கருப்பைக்குள் செலுத்தி, குழந்தை பிறக்கும் முறை, 2001 ஜூனிலிருந்து இங்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தென்னிந்தியாவிலேயே இங்குதான் முதல் முறையாக மேற்கண்ட மருத்துவமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. இரண்டு நாட்கள் இன்குபேட்டர் கருவானது இருபத்தைந்து சதவிகிதம் வெற்றி தரும் எனவும், ஐந்து நாட்கள் இன்குபேட்டர் கருவானது அறுபது சதவிகிதம் வெற்றி கிட்டும் எனவும் கூறப்படுகிறது.

"1978-ல் லண்டனில் உலகின் முதல் டெஸ்ட் டியூப் பேபி பிறந்தது. அப்போது நான் எஸ்.எஸ்.எல்.சி. மாணவி. மருத்துவம் படிக்க வேண்டும் என்கிற என் கனவில், செயற்கைக் கருத்தரிப்பு மருத்துவம் ஆனது சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டது. எம்.பி.பி.எஸ்., அதன் பின்னர் டி.ஜி.ஓ., அப்புறம் எம்.டி., எனத் தொடர்ந்து பதிமூன்று வருட மருத்துவப் படிப்பு. ஆஸ்திரேலியாவிலும், சிங்கப்பூரிலும் ஆறு-ஆறு மாதங்கள் செயற்கைக் கருத்தரிப்பு மருத்துவப் பயிற்சி. மீண்டும் சிங்கப்பூரில் கருத்திசு வளர்ப்பு மருத்துவப் பயிற்சி. உலகின் முதல் டெஸ்ட் டியூப் பேபி உருவாகக் காரணமாக இருந்த இருவரில் ஒருவரான மருத்துவப் பேராசிரியர் எட்வர்ட்ஸ் அவர்களைச் சந்தித்தது (தற்போது நோபல் பரிசுப் பெற்றவர்) என்னால் மறக்க முடியாதது. 1998லிருந்து தற்போது 2010 செப்டெம்பர் வரையிலுமாக இதுவரை எங்கள் மருத்துவமனையில் செயற்கைக் கருத்தரிப்பு மூலமாக மட்டுமே சுமார் 1960 தவக் குழந்தைகள் பிறந்துள்ளன!" என்கிற டாக்டர் நிர்மலா சதாசிவத்தின் முகத்தில் தாய்மையின் கனிவு தெரிகிறது.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

வட்டமேஜை

தலையங்கத்தின் கடைசி வரியில், 'இந்திய வீரர்கள் ஜெயிக்கக் கூடும். ஆனால், இந்தியா - ஏற்கெனவே - தோற்றுவிட்டது' என்ற வரிகள் 'வாழைப் பழத்தில் ஊசி'

- ரேவதிப்ரியன், ஈரோடு

'ஸ்பெஷல் ஸ்பாட்' பிரெஸ்



தங்க ஜிமிக்கி!

ஸிங் மூலம் தாக்கத்தை அழைப்பது முற்றிலும் புதுமையாக உணர்ந்தேன்.

- ஜி. தாரணி, அரசரடி

'டூவீலர் ஸ்பெஷல்'னு போட்டு அதுல 'மாநகரை'யே சுத்தி வலம் வரச் செஞ்சுட்டீங்களே? முழுக்க முழுக்க வித்யாசமான முயற்சி!

- மயிலை கோபி, சென்னை

கோடம்பாக்கம் குர்குரே... செய்திகளுக்கு முடிவில் நீர் தரும் கமெண்ட் வெகு சுப்பருங்கோ!

- பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை

'தப்பான அட்ரஸ் எழுதிட்டு அலைக்கழிக்கப்பட்ட அர்த்தபூர்வமான அழகிய கடிதம்' என்று சில்க் ஸ்மிதா பற்றிய ஊர்வசியின் வர்ணனை, நெஞ்சைத் தொட்டது.

- வே.ந.கதிர்வேல், வேலூர்

தபால் அலுவலகத்தில் முதியோர் ஓய்வூதிய ஊழல் பற்றிய வாசகரின் கேள்விக்கு, 'ராசா எவ்வழியோ, அவ்வழியே ஊழியர்களும்!' என்கிற பதில் 'தராசு'வை, 'நியாய தராசு' என உ(ண)யர்த்தியது.

- சராஎ.முரளி, கள்ளக்குறிச்சி

'1000 கலைஞர் நடனம்', 1000 நாள் ஓடுங்க. கார்ட்டூன் அற்புதம்.

- எஸ். மீனா, ஸ்ரீரங்கம்

வாசகர்கள் பங்களிப்புடன் வரும் கல்கி = தங்க ஜிமிக்கி!

- ஜி.எம். மஞ்சரி, கிருஷ்ணகிரி

அம்மாதான் எனக்கு ரோல் மாடல் என்கிற 'கோ'வின் கதாநாயகி கார்த்திகாவின் நம்பிக்கை வீண் போகாது.

- கே.துரைராஜ், சென்னை

தி.மு.க. ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடனே அமையும் கூட்டணிதான் தா. பாண்டியன் விரும்புவது. இவர்களுடன் கடவுளின் கூட்டணியாளர் விஜயகாந்த் வருவாரா?

- தாமஸ் மனோகரன்,புதுச்சேரி

லக்க
ருதுப்பா...

கல்கி

ரீடர்ஸ்
கெட் ரெடி!

இப்ப சேலம் மாவட்டத்துக்கு வருது
கல்கி டீம்...

- மல்கோவா மாம்பழம்
- தாரமங்கலம் சிற்பம்
- சேலம் இரும்பு உருக்காலை
- ஏற்காடு குளிர்ச்சி
- காவிரியின் வளமை
- ஸ்கந்தாஸ்ரமம் பிரம்மாண்டம்
- மேட்டூரின் முக்கியத்துவம்
- கே.பி.என். சேவை
- மணக்கும் ஏலக்காய்
- மாடர்ன் தியேட்டர்ஸ் பாரம்பரியம்
- மத்திய சிறைச்சாலை வரலாறு


தாரமங்கலம் சிற்பம்

இன்னும் என்னவெல்லாம் இருக்கு?
சேலம் மாவட்டத்தின் (+) (–) என்ன?
எழுதி அனுப்புங்க...

வாசகர்களே!

உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி சேலம் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!



சேலம் மாவட்ட வாசகர்களே... தித்திப்பான அனுபவத்துக்கு ரெடியாகுங்க!

காடு மலைப்பாதைச் சாலை

விவரங்கள் அடுத்த பக்கத்துல இருக்கு! →

ஆமாம்! உங்கள் சேலம் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்கு சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- சேலம் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ். ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன். சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல். நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கலக்க வருதுப்பா கல்கி

சேலம் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்

☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 25.10.2010

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...

நாங்க உடனே ரோடு போடுறோம்!

Sri Aishwarya Sarees

Handloom

Temple of Silk Cottons

SILK MARK

Navarathiri & Deepavali Greetings to you

We are happy to announce our Annual Sale

from 7th Oct. to 4th Nov.



Varna Roopini Collections



Exclusive Silks
Silk Cottons
Cottons
Printed
Embroidery
Designer Blouses
10 yards sarees
and
Dress Materials

upto 30%* Discount

*Conditions Apply

All Major Credit Cards Accepted **Give Life to Handloom** Tailoring & Embroidery Undertaken

No. 19, Arcot Street, T.Nagar, Chennai - 600 017. INDIA (Near M.G.R. Memorial House) Tel : 044-4260 4447 Mobile : 98409 83999

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" License
to Post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilank

